# தெற்கில் மஹிந்தர் விஸ்வரூபம்

## ஐ.தே.கவும் தடுமாற்றம்; நொண்டுகின்றது சு.க.!

கொழும்பு, பெப் 11
தேசிய ரீதியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் தெற்கிலும் பெரும் அதிர் வலைகளை ஏற்படுத்தியுள்ளன என அறியவருகின்றது.
சுதந்திரக் கட்சி, ஐ.தே.க. ஆகியவை பக்கம் 22



பக்கங்கள்: 24 விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 தை 29 ஞாயிற்றுக்கிழமை 11.02.2018 கதிர் 98

### வெற்றியை அமைதியுடன் கொண்டாடுங்கள் மக்களே!

மஹிந்த கோரிக்கை

கொழும்பு, பெப். 11
அமைதியான முறையில் தேர்தல் வெற்றியைக் கொண்டாடுமாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார்.
பக்கம் 22

# தமிழரசு பின்னடைவு

## தொங்கு நிலையில் வடக்கில் முக்கிய சபைகள்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 11
வடக்கு, கிழக்குத் தமிழர்களின் ஏகபோக பிரதிநிதித்துவத்தைக் கொண்டவர்கள் தாங்கள் என இதுவரை மார்தட்டி வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு - இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு - குட்டு ஒன்று வைத்திருக்கின்றார்கள் வடக்குத் தமிழர்கள்.

யாழ்ப்பாணம் மாநகர சபை, சாவகச்சேரி நகர சபை , பருத்தித்துறை நகரசபை, ஊர்காவற்றுறை பிரதேச சபை, நெடுந்தீவு பிரதேச சபை மற்றும் காரைநகர் பிரதேச சபை ஆகியவற்றில் ஆட்சி அமைக்க முடியாத நிலையை எட்டியிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சி, வடக்கின் மற்றைய உள்ளூராட்சி சபைகளிலும் வாக்கு வீதத்தில் பின்னடைவுகளைச் சந்தித்திருக்கின்றது. பக்கம் 22

### முல்லைத்தீவில் அமைதித் தேர்தல்

வாக்குப்பதிவு 78 வீதம்

முல்லைத்தீவு, பெப் .11
உள்ளூராட்சித் தேர்தல் வாக்குப் பதிவு அசம்பாவிதங்கள் இன்றி அமைதியான முறையில் நிறைவடைந்ததுஎனமுல்லைத்தீவு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில் –
பக்கம் 22

### வவுனியாவில் 72 வீதம்

வவுனியா, பெப் .11
வவுனியா மாவட்டத்தில்72வீதவாக்குப்பதிவு இடம்பெற்றுள்ளதாகவவுனியா மாவட்டத் தெரிவத்தாட்சிஅலுவலர்சோமரத்தின விதான பத்திரன அறிவித்துள்ளார்.
148 வாக்களிக்கும் நிலையங்களிலும்சுமூகமானமுறையில்வாக்குப் பதிவுகள் இடம்பெற்றுள்ளன என அவர் மேலும் கூறினார். (ஐ -100)


### வலி. வடக்கில் கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், பெப்.11
வலி. வடக்குப் பிரதேச சபையில் உள்ள 21 வட்டாரத்தில் 17 வட்டாரங்களைத் தமிழ்த் தேசியக்
பக்கம் 22

## யாழ் மாநகர வட்டார முடிவு: தமிழரசு 14; காங்கிரஸ் – 10

கூட்டணி, ஈ.பி.டி.பி., ஐ.தே.க. தலா ஒன்று

யாழ்ப்பாணம், பெப்.11
யாழ். மாநகர சபைக்கான தேர்தலில் 27 வட்டாரங்களில் 14 வட்டாரங்களில் மட்டுமே இலங்கைத் தமிழரசுக் கட்சி வென்றது. 10 இடங்களில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியும், ஐ.தே.க., ஈ.பி.டி.பி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன பக்கம் 22




### நன்றி கூறுகிறார் நாமல்

கொழும்பு, பெப் .11
உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமக்கு வாக்களித்துவெற்றிபெறச்செய்தமைக்காக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷநன்றிதெரிவித்துள்ளார்.
உத்தியோகபூர்வ முடி
பக்கம் 22

### வல்வெட்டித்துறை நகரசபையின் 7 வட்டாரங்கள் கூட்டமைப்பிடம்

யாழ்ப்பாணம், பெப். 11
வல்வெட்டித்துறை நகரசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறும் நிலையில் உள்ளது.
வல்வெட்டித்துறை நகரசபையின் 9 வட்டாரங்களில் 7 வட்டாரங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றி
பக்கம் 22

### சாவகச்சேரி, பருத்தித்துறை நகர சபைகளில் சைக்கிள்!

யாழ்ப்பாணம், பெப். 11
சாவகச்சேரி, பருத்தித்துறை நகரசபைத் தேர்தல்களில் அகில இலங்கைத் தமிழ் பக்கம் 22

### கிழக்கில் கூட்டமைப்பு ஆதிக்கம்


மட்டக்களப்பு, பெப்.11
நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித்தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் உள்ள சபைகளில்தமிழ்த் தேசியக்கூட்டமைப்புபெரு வெற்றியீட்டியுள்ளது.
கிழக்கில்உள்ள சபைகளில் பெரும்பாலானவற்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதனிப்பெரும்பான
பக்கம் 22

### இனி அது ரகசியம் அல்ல!



தமிழர்களின் ஏகபோக பிரதிநிதிகள் தாங்கள் தான் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு – இலங்கைத் தமிழரசுக் கட்சி – கோரி வந்த உரிமைக்கு வடக்கில் ஒரு பெரும் பின்னடைவு, உடைவு ஏற்பட்டிருக்கின்றது. பக்கம் 22

### மாட்டுவண்டிலில் சென்று வாக்களித்த பொதுமக்கள்!



கிளிநொச்சி, பெப் .11
கிளிநொச்சி புன்னைநீராவிப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் சிலர் நேற்று உள்ளூராட்சித்தேர்தலில்மாட்டுவண்டிலில் சென்று தங்கள் வாக்குகளைச் செலுத்தினர்.
பக்கம் 22

### காரைநகரில் தொங்கு சபை

காரைநகர், பெப்.11
காரைநகர் பிரதேச சபையில் தொங்கு நிலைமை ஏற்பட்டுள்ளது.
அங்குள்ள 6 வட்டாரங்களில் மூன்றில் தமிழரசுக் கட்சியும் மூன்றில் மீன் சின்னத்தில் போட்டியிட்ட சுயேச்சையும் வெற்றி பெற்றுள்ளன.
விகிதாசாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, ஈ.பி.டி.பி. ஆகியன தலா இரண்டுஆசனங்களைப்
பக்கம் 22

### ஈ.பி.டி.பி. வேட்பாளர் மீது தம்பாட்டியில் தாக்குதல்!

யாழ்ப்பாணம், பெப் .11
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊர்காவற்றுறை, தம்பாட்டி வேட்பாளர் மீது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் மற்றும் ஆதரவாளர்களால்தாக்குதல்நடத்தப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
தாக்குதலில் படுகாய
பக்கம் 22

### யாழ்ப்பாணத்தில் மக்கள் ஆர்வமான வாக்களிப்பு!

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், பெப். 11
உள்ளூராட்சித்தேர்தல் வாக்களிப்பு மிக அமைதியான முறையில் சுமூகமாக நடைபெற்றுள்ளன. மக்கள் ஆர்வத்துடன் தேர்தலில் வாக்களித்துள்ளனர்எனயாழ்மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் என்.வேதநாயகன் தெரிவித்தார்.
வாக்களிப்பின் முடிவில் யாழ் மாவட்டத் தேர்தல் மத்திய நிலையமாக
பக்கம் 22

காலைக்கதிர் Kalaikkathir


# கட்சித் தலைவர்கள் யாழில் வாக்களிப்பு









யாழ்ப்பாணம், பெப் 11

நேற்று நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் கட்சிகளின் தலைவர்கள் பலர் யாழ்ப்பாணத்தில் வாக்களித்தனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் நேற்று யாழ்ப்பாணத்தில் தமக்குரிய வாக்குச்சாவடிகளில் வாக்களித்தனர்.

(ஐ 7)

# ஒரே நாளில் தேர்தல் எனக்கு மிக மகிழ்ச்சி

## வாக்களித்த பின்னர் மைத்திரி



கொழும்பு, பெப் 11

புதிய தேர்தல் முறையை நடைமுறைப்படுத்தி அமைதியான தேர்தல் நடந்து வருவதை எண்ணித் தான் மகிழ்ச்சியடைகிறார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பொலனறுவை வித்யாசார பிரிவெனாவில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடியில் வாக்களித்த பின்னர் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதில் வழங்கியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் மிக நீண்ட நாள்களுக்குப் பின்னர் ஒரே நாளில் தேர்தல் நடப்பது மகிழ்ச்சியளிக்கிறது. தொகுவாரித் தேர்தல் முறை நாற்பத்தொன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் ஒழிக்கப்பட்டிருக்கிறது.

இம்முறை விகிதாசார கலப்பு முறைத் தேர்தல் நடைமுறைக்கு வந்திருக்கிறது. இதன்மூலமாகவன்முறைகள் குறைக்கப்பட்டு மிக அமைதியான முறையில் தேர்தல்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

எந்தவிதமான தலையீடுகளும் இன்றி மிக அமைதியான முறையில் மக்கள் வாக்களிப்பதற்கான சூழல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

மக்கள் அமைதியாக வாக்களித்து வருகின்றார்கள். தேர்தலுக்குப் பின்னர் எமது அபிவிருத்திப் பணி தொடங்கும். மக்கள் பெருவாரியாக வாக்களித்து வருகின்றார்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கான வெற்றி வாய்ப்புக்கள் அதிகளவில் இருக்கின்றன- என்றார்.

இலங்கை ஜனாதிபதிகளின் வரலாற்றில் மைத்திரிபால சிறிசேன புதியதொரு எடுத்துக்காட்டை நிகழ்த்தியிருக்கிறார்.

இதுவரை ஜனாதிபதிகளாக இருந்தவர்கள், தேர்தல் காலங்களின்போது, பெரும் எடுப்பிலான பாதுகாப்புப் படைகள் சகிதம் வாக்களிக்க வருவார்கள். ஆனால், மைத்திரிபால சிறிசேன மக்களோடு மக்களாகச் சென்று வாக்களித்திருப்பது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

மைத்திரிபால சிறிசேன எளிமையாகச் சென்று வாக்களித்த புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் அதிகளவில் பகிரப்பட்டு வருகின்றன.

(ஐ)

## வன்முறையில் ஈடுபட்ட ஐவர் வவுனியாவில் கைது

வவுனியா, பெப்.11

வவுனியாவில் தேர்தல் வன்முறையில் ஈடுபட்ட குற்றச்சாட்டின்கீழ் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை முதல் உள்ளூராட்சிச் சபைக்கான வாக்களிப்பு நடைபெற்றநிலையில் வாக்களிக்கச்செல்லும் வாக்காளர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தித் தமது கட்சிக்கு வாக்களிக்குமாறு தூண்டியமை, வீதிகளில் தமது கட்சிச் சின்னங்களை வரைந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வவுனியா பட்டானிச்சூர் பகுதியில் அமைச்சர் றிஷாத் பதியுதீனின் ஆதரவாளர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தானின் ஆதரவாளர்களுக்கும்இடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது.

அத்துடன் கோவில்குளம் வாக்களிப்பு நிலையத்துக்கு முன்னால்தேர்தல்விதிமுறையை மீறிச்செயற்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் மற்றும் ஆதரவாளர்கள், தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் மற்றும் பொலிஸார் ஆகியோரால் எச்சரித்து வெளியேற்றப்பட்டனர்.

(ஐ-100)

## தேர்தல் கடமையில் ஈடுபட்ட வாகனம் முல்லையில் விபத்து




முல்லைத்தீவு, பெப்.11

முல்லைத்தீவில் தேர்தல் கடமையில் ஈடுபட்ட மாவட்ட செயலக வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்று அதிகாலை முல்லைத்தீவு – மாங்குளம் வீதியில் நந்திக்கடலுக்கு அண்மையாக மூன்றாம் கட்டைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் தேர்தல் கடமையில் ஈடுபட்ட தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர், இரண்டு பொலிஸார் படுகாயமடைந்து முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ-21)

## பண்ணிசைத் திருக்குறள் மனனப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.11

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையால் நடத்தப்படும் பண்ணிசை மற்றும் திருக்குறள் மனனப்போட்டிகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இதுவரை விண்ணப்பங்களை அனுப்பாத பாடசாலை மாணவர்கள் போட்டி தினத்தன்று தமது கல்லூரி அதிபரினால் உறுதிப்படுத்திய விண்ணப்பத்துடன் நேரில் சமூகமளித்துப் பங்குபற்ற முடியும் என்பதை சபைத் தேர்வுச் செயலாளர் அறிவித்துள்ளார். (இ


## அழகாகத் தோன்ற வேண்டுமா?

**கேர்வல் கிறீம்:** கருமைநிறம், பருக்கள், கண்கருவளையம், உதட்டுக்கருமை, கை, கால், முதுகு கருமை அனைத்திற்கு மானது (கிறீம், சோப், குளிசை)

**ஆயுள்வேத தலைமுடி வளரச் செய்யும் எண்ணெய்:** தலைமுடியுதிர்வு நீங்க, நீளமான முடி வளர, முடி புதிதாக முளைக்க, இளநரை நீங்க, பேன், பொடுகு, தலையிடி நீங்க அற்புதமான பாரம்பரிய முறையில் காய்ச்சிய எண்ணெய்.

**உடல் எடை குறைக்க:** உடல் எடை குறைய, வயிறு, மார்பு குறைக்க, ஊளச்சதை, மலச்சிக்கல் நீங்க (குளிசை, பால்மா, கிறீம் டொனிக்)

**உடல் எடை கூட:** உடல் எடை கூட, ஒட்டிய கன்னம் குண்டுக் கன்னங்களாக மாற, கணச்சூடு, பலவீனம் நீக்க (குளிசை, லேகியம்)

**பேசியல்:** முகக்கருமை நீங்க, முக மினுமினுப்பு பெற ஒரே தடவையில் அற்புத மாற்றம் பெற (ஆயுள் வேத மூலப் பொருள்கள் கொண்டு செய்யப்படும்.)

**பதிவு இல.16168**
**0773149386**
**221, நாவலர் றோட் யாழ்.**

# மஹிந்த – மைத்திரி தரப்புகள் பொலனறுவையில் மோதல்!

## ஊரடங்குச் சட்டம் அமுலில்

பொலனறுவை மெதிரிகிரிய பகுதியில் சுதந்திரக் கட்சியினருக்கும் பொதுஜன பெரமுன கட்சியினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றுள்ளது.

இதனால் பதற்ற நிலைமை ஏற்பட்டதால் அந்தப் பகுதியில் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக அந்தப் பிரதேசத்தில் விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பொலனறுவை மாவட்டத்தின் சில பகுதிகளில் கோசங்களை எழுப்பியவாறு பொதுஜன பெரமுன வீதி உலா வந்து வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளில்பொதுஜனபெரமுன கட்சிக்கு வெற்றிவாய்ப்புக்கள் அதிகமுள்ளதாகக் கூறப்படும் நிலையிலேயே இந்த வெற்றிக் கொண்டாட்டங்கள்நடைபெறுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாகவே அங்கு மோதல் நடந்ததாகக் கூறப்படுகின்றது. (ஐ)

## தேர்தல் முடிவுகள் தாமதம்

கொழும்பு, பெப். 11

உள்ளூராட்சித் தேர்தலில் வட்டார முடிவுகள் நேற்று தேர்தல் முடிந்த கையோடு இரவு 7 மணி முதல் வெளியாகும் எனத் தேர்தல் திணைக்களம் அறிவித்திருந்த போதிலும் –

ஓரிரு இடங்களுக்கான முடிவுகள் மட்டுமே உடன் உத்தியோகபூர்வமாக வெளியிடப் பட்டன. இன்று அதிகாலை 3.00 மணி தாண்டியும் முடிவுகள் அறிவிக்கப்படாமல் இழுபறி நிலைமை நீடித்தது.

தேர்தல் திணைக்களம் உத்தியோகபூர்வமாக முடிவுகளை அறிவிக்க முன்னர் அதுபற்றிய விடயங்களை ஊகமாகத் தன்னும் வெளியிட வேண்டாம் என தேர்தல் திணைக்களத்தால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதாக ஒரு செய்தி வெளியானது.

எனினும், இன்று அதிகாலை 3 மணி வரை – இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை – தேர்தல் முடிவுகள் வெளியிடப்படாமல் உறை நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

வாக்குகள் எண்ணப்படும் இடங்களில் கிடைத்த செய்திகளின் அடிப்படையிலேயே முடிவுகளை இன்றைய பத்திரிகையில் சேர்க்கக் கூடியதாக இருந்தது.

தேர்தல் முடிவுகள் தாமதமானமைக்கான சரியான காரணம் வெளியாகவில்லை.

எனினும், நாடு முழுவதிலும் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுனை பெருவெற்றியீட்டிவருவதாக வாக்கு எண்ணும் நிலையங்களில் இருந்து வெளியான செய்திகளின் பின்னணியில் –

முடிவுகள் அறிவிக்கப்படாமல் தாமதப்படுத்தப்படும் விவகாரத்தையும் முடிச்சுப் போட்டு செய்திகள், வதந்திகள் நேற்றிரவு முதலே தீவிரமாகப் பரவின.

இதற்கிடையில் –

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளுக்கு அமையத் தாம் தோல்வியடைந்த தொகுதிகளின் வாக்குகளை மீள எண்ணுமாறு தோல்வியடைந்த வேட்பாளர்கள் சிலர் கோரியுள்ளமையால் தேர்தல் முடிவுகள் வெளியாவதில் தாமதம் ஏற்பட்டதாக இன்னொரு செய்தி வெளியாகியது.

இதன் காரணமாகக் குறித்த உள்ளூராட்சி மன்றங்களின் இறுதி தேர்தல் முடிவுகளை வெளியிட முடியாத நிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தோல்வியடைந்த அநேகமான வேட்பாளர்கள் மீண்டும் வாக்குகளை எண்ணுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ)

## மாந்தையிலும் தொங்கு நிலை

யாழ்ப்பாணம், பெப்.12

உள்ளூராட்சித் தேர்தலில் முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச சபையில் 1836 வாக்குகள் பெற்று 6 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

ஐக்கிய தேசியக் கட்சி 1505 வாக்குகள் பெற்று 4 ஆசனங்களையும், சுதந்திரக் கட்சி 523 வாக்குகள் பெற்று 2 ஆசனங்களையும், ஈ.பி.டி.பி. 192 வாக்குகள் பெற்று ஓர் ஆசனத்தையும் வென்றுள்ளன.

இதனால் அங்கும் தொங்கு நிலை ஏற்பட்டுள்ளதால் ஐ.தே.கவின் ஆதரவைப் பெற்று கூட்டமைப்பு ஆட்சியமைக்கும் என நம்பப்படுகின்றது. (ஐ)

## சீட்டுக் குலுக்கி உறுப்பினர் தெரிவு

யாழ்ப்பாணம், பெப்.12

உள்ளூராட்சித் தேர்தலில் வலி தெற்கில் குப்பிளான் வட்டாரத்தில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் வேட்பாளரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளரும் சமமாக 314 வாக்குகள் பெற்றனர். இதனை அடுத்துத் தேர்தல் விதிமுறைப்படி சூட்டுக் குலுக்கி நடந்த தெரிவில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (ஐ)

## வெள்ளையர் அணி மானிப்பாயில் கிரிக்கெட் ஆட்டம்

யாழ்ப்பாணம், பெப்.11

லண்டனில் இருந்து யாழ்ப்பாணம் வருகை தந்திருக்கும் வெள்ளையர்களின் கிரிக்கெட் அணியான 'த போர்ட்டி கிளப்' அணிக்கும், மானிப்பாய் பரிஷ் வி.க. அணிக்கும் இடையில் இன்று நண்பல் தொடக்கம் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் சிநேகபூர்வ – மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் – கிரிக்கெட் ஆட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் இரு அணிகள்தரப்பிலும்நாற்பதுவயதுக்கு மேற்பட்டோரே விளையாடயிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## ஏறாவூர்பற்று சபையில் கூட்டமைப்பு தோல்வி

கொழும்பு, பெப்.11

உள்ளூராட்சித் தேர்தலில் மட்டக்களப்பு செங்கலடி ஏறாவூர் பற்று பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோல்வி அடைந்துள்ளது.

18 வட்டாரங்களைக் கொண்ட ஏறாவூர் பற்று பிரதேச சபையில் 8 வட்டாரங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் , 6 வட்டாரங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் , 4 வட்டாரங்களில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் வெற்றி பெற்றுள்ளன. (ஐ)

## தேர்தல் ஆணையாளர் விளக்கம்

கொழும்பு, பெப். 11

தேர்தல் முடிவுகள் நேர காலத்துடன் அறிவிக்கப்படும் எனமுன்னர்தேர்தல்ஆணையாளரால் தெரிவிக்கப்பட்டாலும் இன்று அதிகாலை இரண்டு மணியைக் கடந்த நிலையிலும் முடிவுகளை அறிவிப்பதில் தாமதம் நிலவியது.

அதிகமான நிலையங்களில் வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்டாலும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலகம் மூலம் அவற்றை அறிவிக்கும் செயன்முறையில் தாமதம் நிலவுவதால் தேர்தல் முடிவுகளை அறிவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அதிகாலை விசேட அறிக்கையொன்றை வெளியிட்டார்.

இதேவேளை, ஒரு சில தெரிவித்தாட்சி அலுவலகர்களுக்குத் தேர்தல் முடிவு அறிக்கையில் ஓர் அறிக்கை மாத்திரமே கிடைக்கப் பெற்றுள்ளதால் முழு தேர்தல் முடிவுகளைத் தயாரிப்பதில் மீண்டும் மீண்டும் பரீட்சிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் குறித்த உள்ளூராட்சிமன்றங்களின்முடிவுகளை வெளியிடுவதில் குறிப்பிடத்தக்க அளவு நேரம் எடுக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே தேர்தல் முடிவுகளை அறிவுக்கும்வரை பொறுமையாக இருக்குமாறும் ஆணையாளர் தேசப்பிரிய கோரியுள்ளார். (ஐ)

## ஊர்வலங்களுக்குத் தடை

கொழும்பு, பெப் .11

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் பெறுபேறுகள் வெளியானதன் பின்னர், இன்று ஞாயிற்றுக்கிழமை ஊர்வலங்கள் மற்றும் கூட்டங்கள் நடத்துவதற்கு முழுமையாக தடை விதிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

வாக்களிப்பு, அமைதியான முறையில் இடம்பெற்றது என்று தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அதிகாரி ருவன் குணசேகர, பாரிய சம்பவங்கள் எவையும் இடம்பெறவில்லை என்றும் கூறினார். (ஐ)

## அதிகாரத்தை மஹிந்தவிடம் வழங்குங்கள்!

### — சம்பிக்க கோரிக்கை

கொழும்பு, பெப்.12



உள்ளூராட்சித்தேர்தல் முடிவுகளுக்கு அமைய, மக்கள் ஆணையை மதித்து ஆட்சி அதிகாரத்தை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வழங்கி எதிர்க்கட்சியில் அமரவேண்டுமென அமைச்சர் பாட்டலி சம்பிக்கரணவக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் தெற்கில் மஹிந்த தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெரு வெற்றியீட்டியமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

மக்கள்மஹிந்தவுக்கு அளித்த ஆணையை மதித்து சுதந்திரக் கட்சி அதிகாரத்தை மஹிந்தவிடம் கையளித்துவிட்டு எதிரணியில் அமரவேண்டும் என அவர் கோரியுள்ளார். (ஐ)

## யாழ்ப்பாணத் தேர்தல் முடிவுகள் சில

**வலிகாமம் மேற்கு**
தமிழரசுக் கட்சி – 09
தமிழ்க் காங்கிரஸ் – 03
ஐ.தே.க. – 02
ஈ.பி.டி.பி. – 01

**வேலணை**
தமிழரசுக் கட்சி – 07
ஈ.பி.டி.பி. – 05

**கரவெட்டி**
தமிழரசுக் கட்சி – 09
சுதந்திரக் கட்சி – 06
தமிழ்க் காங்கிரஸ் – 01

**நெடுந்தீவு**
ஈ.பி.டி.பி. – 06
தமிழரசு – 02

**பருத்தித்துறை நகர சபை**
தமிழ்க் காங்கிரஸ் – 05
தமிழரசுக் கட்சி – 03

**ஊர்காவற்றுறை**
ஈ.பி.டி.பி. – 06
தமிழரசுக் கட்சி – 01
தமிழ்க் காங்கிரஸ் – 01

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி
பிளாஸ்ரிக் உற்பத்தி, பிளாஸ்ரிக் திருத்த வேலை, பிளாஸ்ரிக் மீள் சுழற்சி என்பன சிறந்த முறையில் செய்து தரப்படும்.
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8680
077 592 5088

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மக்கள் புகட்டும் பாடம்

நேற்று முன்னிரவு இந்தப் பத்தி எழுதப்படும் போது, நடந்து முடிந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின் முடிவுகள் தெளிவாக வெளி வந்திருக்கவில்லை.

ஆனால் ஆரம்பக் கட்டத்தில் வெளிவந்த செய்திகள் இந்தத் தேர்தல் முடிவுகள் எத்திசையை நோக்கிச் செல்லும் என்பதற்குக் கட்டியம் கூறுவனவாக அமைந்தன.

வடக்கு, கிழக்கிலும் சரி, தெற்கிலும் சரி மக்கள் தெளிவான ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கின்றார்கள் என்று அர்த்தப்படுத்தும் விதத்தில் முடிவுகள் வந்திருக்கின்றன.

வடக்கில் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும் -

தெற்கில் - மத்திய அரசில் - ஆட்சியில் இருப்பவர்களுக்கும் -

அந்தந்தப் பகுதி மக்கள் தெளிவான - திட்டவட்டமான - பதிலை வழங்கியிருக்கின்றார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியினதும், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய சிறுபான்மையினரதும் வாக்குகளைப் பெற்று, இந்த நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்ற கோஷத்தை முன்னிறுத்தி ஆட்சிக்கு - அதிகாரத்துக்கு - வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அந்தப் பணியை விட்டு விட்டு, 'ஊழல் ஒழிப்பு' என்று ஒரு புராணத்தைப் பாடிய வண்ணம் புதிய அரசியல் பாணியைத் தொடங்கினார். அவரது அரசியல் அத்திவாரம் யாது என்பதைத் இந்தத் தேர்தலில் மக்கள் அவருக்கும் அவர் சார்ந்த அணியினருக்கும் உணர்த்தியிருக்கின்றார்கள்.

அதே நிலைமைதான் வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும்.

"ஆரவாரம் பண்ணாத - அமைதியான - பெரும்பான்மை எங்களுக்கு இருக்கின்றது. அதை வைத்துக் கொண்டு வெல்வோம்." - என்ற பாணியில் அரசியல் மமதையோடு செயற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு - குறிப்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு - ஒரு குட்டு வைத்திருக்கின்றார்கள் வடக்கு மக்கள்.

சாவகச்சேரி பகுதி வேட்பாளர்கள் தெரிவிலும், யாழ். மாநகர சபை முதல்வர் வேட்பாளர் தெரிவிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - குறிப்பாகத் தமிழரசுக் கட்சி - நடந்து கொண்ட திமிர்த்தனத்துக்கு சரியான பதில் கிடைத்திருக்கின்றது.

வடக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் பெரும்பாலான சபைகளைக் கூட்டமைப்பு கைப்பற்றும் வாய்ப்பிருந்தாலும் -

யாழ். மாநகர சபை, பருத்தித்துறை நகரசபை, சாவகச்சேரி நகரசபை ஆகிய முக்கிய சபைகளில் தனித்து ஆட்சி அமைக்கும் தகுதியை கூட்டமைப்பு இழந்து நிற்கின்றது.

கூட்டமைப்புக்கு மாற்றான சக்திகளுக்கு மிக கணிசமான அளவு வாக்குகள் வீழ்ந்திருக்கின்றமை கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

கிடைத்த வாக்குகளும் முடிவுகளும் கூட்டமைப்பின் - தமிழரசின் - போக்கின் மீது மக்களின் அதிருப்தியை மிகத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன என்பது தெளிவு.

ஆனால், கூட்டமைப்பினர் குறிப்பாக அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், இந்த மக்கள் தீர்ப்பை - மகேசன் தீர்ப்பை - இனியும் தமக்குச் சாதகமான ஒன்றாகக் காட்டும் விதத்தில் புதிய விளக்கம் - வியாக்கியானம் - கூறக்கூடும்.

ஆனால், சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராசா ஆகியோரின் தலைமையே இந்தத் தேர்தல் பின்னடைவுக்குப் பொறுப்பேற்க வேண்டும். கூட்டமைப்பை ஜனநாயக மயப்படுத்தாமல் எதேச்சாதிகாரமாக - ஏகபோகமாக - அவர்கள் நடத்தியதன் விளைவுதான் இந்த மக்கள் தீர்ப்பு என்பது பொதுவான கருத்து; அபிப்பிராயம்.

ஊடகங்களுக்கு எதிராகப் போர்ப்பிரகடனம் செய்து கொண்டு, ஊடகங்களையும் சேர்த்துத் தோற்கடிப்போம் என்று சபதம் செய்து, தேர்தலை எதிர்கொண்ட ஒரே தலைவர் சுமந்திரனாகத்தான் இருக்க முடியும். அவர்தான் கூட்டமைப்பின் இந்தப் பின்னடைவுக்குப் பிரதானமாகப் பொறுப்பேற்க வேண்டியவர்.

மாற்று இனத்தவர்களின் ஆக்கிரமிப்பு ஆபத்திலிருக்கும் தென் தமிழீழத்தில் - கிழக்கு மாகாணத்தில் - நாம் பிளைவுபட்டால் அது நமது இனத்துக்கு ஆபத்து என்பதை உணர்ந்து அங்குள்ள தமிழ் மக்கள் வழமைபோல இந்தத் தேர்தலிலும் கூட்டமைப்பிற்குப் பின்னால்தான் அணி திரண்டனர் என்று முற்கொண்டு கிடைத்த தேர்தல் முடிவுகள் தெரிவித்தன.

ஆனால், வடக்கு மக்கள் அந்த ஆபத்து இல்லாததால் தெளிவாகத் தமது அதிருப்தியைக் கூட்டமைப்புத் தலைமைக்கு உணர்த்தியிருக்கின்றார்கள் என்றே நினைக்கிறோம்.

இந்தத் தேர்தல் முடிவுகளின் பின்னராவது கூட்டமைப்பு - தமிழரசு - தன்போக்கைத் திருத்திக்கொள்ள வேண்டும்; மாற்றிக் கொள்ள வேண்டும்.

தனி ஒருவரின் எதேச்சாதிகாரப் போக்கில் கட்சியை நடத்தும் வழக்கிலிருந்து அதன் தலைமை மாற வேண்டும். உண்மையான ஜனநாயக மார்க்கத்திலும் மாண்பிலும் அதை வழிநடத்த அவர்கள் முன்வரவேண்டும்.

இல்லாவிடில் தமிழர் தேசத்தில் புதிய அரசியல் செல்நெறி ஒன்று கட்டவிழும் என்பதற்கு இந்த மக்கள் தீர்ப்பு கட்டியம் கூறும் விதத்தில் வெளிப்பட்டிருக்கின்றது.

இதனைக் கவனத்தில் எடுக்க சம்பந்தன் ஐயா தவறுவராயின் கூட்டமைப்பின் எதிர்காலம் சுபீட்சமாக அமைய மாட்டது என்பது மட்டும் திண்ணம்.

# வீரகெட்டியவில் மஹிந்த வாக்களிப்பு



கொழும்பு, பெப்.11

நாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் வாக்களிப்பு நேற்று நடைபெற்றது. அரசியல் பிரபலங்கள் தமது வாக்குளை செலுத்தினர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தனது வாக்கைச் செலுத்தினார். வீரக்கெட்டிய மெதமுலன டீ.ஏ.ராஜபக்ஷ மகா வித்தியாலயத்தில் மஹிந்த தனது வாக்கை அளித்தார்.

மஹிந்தவின் கோட்டையான அம்பாந்தோட்டை மாவட்டத்தின் 443 தேர்தல் நிலையங்களில் வாக்களிப்பு நடந்தது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முதன்முறையாக மஹிந்த தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## குடாநாட்டில் நேற்று மட்டும் 35 தேர்தல் முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், பெப்.11

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல் வாக்குப் பதிவுகள் சுமுகமாக இடம் பெற்ற நிலையில் நேற்றுக் காலை முதல் பிற்பகல் 3 மணிவரை 35 தேர்தல் விதிமீறல் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் தெரிவித்தது.

அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு எதிராகவே அதிக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, தேர்தல் பிரசாரத் துண்டறிக் கைகளை விநியோகித்த குற்றச்சாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் உட்பட இருவர் மானிப்பாயில் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டனர். (ஐ)

## தேர்தல் தினமான நேற்றும் சாவகச்சேரியில் பிரசாரம்

யாழ்ப்பாணம், பெப் 11

தேர்தல் தினமான நேற்று அதிகாலையில் இருந்து சாவகச்சேரியின் சில வட்டாரங்களில் கட்சி வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் வீடு வீடாகச் சென்று தமக்கு வாக்களிக்குமாறு பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 7ஆம் திகதி நள்ளிரவுடன் தேர்தல் பிரசாரங்கள் சட்டபூர்வமாக நிறுத்தப்பட்டபோதிலும் சட்டவிரோதமாகப் பல தேர்தல் பிரசாரங்கள் நேற்று அதிகாலையில் இருந்து நண்பகல் வரை இடம்பெற்றன.

நேற்று அதிகாலை சில கட்சிக் காரர்கள் தமது கட்சிச் சின்னங்களை வீதிகளில் பொறித்து விட்டுச் சென்றனர். அத்துடன் சில வேட்பாளர்கள் தமது வட்டாரத்தில் இருந்து வாக்களிப்பு நிலையத்துக்கு வாகன சேவையும் ஏற்பாடு செய்ததை அவதானிக்க முடிந்தது. (ஐ)

## தமிழரசு வேட்பாளருக்கு வவுனியாவில் அச்சுறுத்தல்

வவுனியா, பெப் 11

வவுனியா – கற்குளியைச் சேர்ந்த தமிழரசுக் கட்சியின் பெண் வேட்பாளரை ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ஒருவர் அச்சுறுத்திய சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அந்தப் பெண் வேட்பாளர் –

உறவினர்களை அழைத்துக் கொண்டு வாக்களிக்கச் சென்ற வேளை எனது வீட்டுக்கு அருகாமையில் வைத்து ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ஒருவர் அச்சுறுத்தல் விடுத்தார். அத்துடன் தகாத வார்த்தைகளையும் பிரயோகித்தார். ஏற்கனவே மாற்று கட்சியினரால் எனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவமும் இடம்பெற்றிருந்தது.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளச் சென்ற நிலையில் எனது முறைப்பாட்டைப் பொலிஸார் ஏற்றுக் கொள்ளவில்லை எனக் குறிப்பிட்டார். (ஐ)

## மாதிரி வாக்குச் சீட்டுகளுடன் ஒருவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், பெப் 11

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் மாதிரி வாக்குச் சீட்டு மற்றும் வேட்பாளர் ஒருவரின் துண்டுப் பிரசுரங்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை 2மணியளவில் இவர் கைது செய்யப்பட்டார்.

அவற்றைத் தான் எரிப்பதற்காக எடுத்துச் சென்றதாக அவர் முதல் கட்ட விசாரணையில் கூறியுள்ளார்.

அவரை நீதிமன்றில் முன்நிறுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் மீசாலைப் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-21)

## பேஸ்புக் மூலம் பிரசாரம்; அதிகாரி இடைநிறுத்தம்

கிளிநொச்சி, பெப் 11

தேர்தல் கடமையில் ஈடுபடவிருந்த நிலையில் சுயேச்சைக் குழுவுக்கு முகநூல் ஊடாக ஆதரவு திரட்டிய கல்வி அதிகாரி தேர்தல் கடமையில் இருந்து இடைநிறுத்தப்பட்டார்.

கிளிநொச்சி – விவேகானந்தா நகர் வாக்குச் சாவடியில் கடமையில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி கல்வித் திணைக்கள ஆசிரியர் ஆலோசகர் ஒருவரே தேர்தல் திணைக்களத்தினால் அதிரடியாக இடைநிறுத்தப்பட்டார்.

இந்த நபர் தனது முகப்புத்தம் ஊடாக வாக்குச் சேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நிலையில், தேர்தல் திணைக்களத்தினால் இரவோடு இரவாக அவர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். (ஐ)

## விசேட தேவையுடையோர் வாக்களிப்பதில் சிரமம்

வவுனியா வைரவப் புளியங்குளத்தில் விசேட தேவையுடையவர்கள் வாக்களிப்பதில் பெரும் சிரமத்திற்கு உள்ளாகினர்.

வவுனியா வைரவப் புளியங்குளம்வட்டாரத்துக்கான வாக்களிப்பு நிலையம் கலைமகள் சனசமூக நிலையத்தில் நிறுவப்பட்டது. இந்த வாக்களிப்பு நிலையம் உயரமான இடத்தில் அமைந்துள்ளமையால் இங்கு விசேட தேவைக்குட்பட்டவர்கள் வாக்களிக்கச் செல்வதில் பல சிரமங்களை எதிர் நோக்கினர். (ஐ-100)

## நாளை

12.02.2018
திங்கட்கிழமை

நட்சத்திரம் : பூராடம் பி.இ.3.37வரை
திதி : துவாதசி மு.இ. 9.51வரை
சுபநேரம்: 12.34 – 2.04 வரை
இராகுகாலம்: 8.04 – 9.34 வரை

# அழகிப் போட்டியின் இறுதிச் சுற்றில் ஆண்!

கஜகஸ்தான் 2018ஆம் ஆண்டு அழகிப் போட்டியில் கலந்துகொண்டு, இறுதிப் போட்டியாளர்களில் ஒருவராக இருந்தார் 22 வயது அரினா அலியேவா. தற்போது இவர் பெண் அல்லர் ஆண் என்ற செய்தி அறிந்து நாடே அதிர்ச்சி அடைந்திருக்கிறது.

மிஸ் விர்ச்சுவல் கஜகஸ்தான் அழகிப் போட்டியில் பங்கேற்க முடிவு செய்தார். ஒப்பனை மூலம் பெண்ணாக மாறினார். அழகான சிகை அலங்காரம் செய்து கொண்டார். தன்னை வித விதமாக படங்கள் எடுத்து, அரினா அலியேவா என்ற பெயரில் சமூக வலைதளத்தில் வெளியிட்டார்.

மக்களிடமிருந்து அமோக வரவேற்பு கிடைத்தது. யாருக்கும் ஆண் என்ற சந்தேகம் சிறிதும் வரவில்லை. உடனே அழகிப் போட்டியில் பங்கேற்க விண்ணப்பித்தார்.

நான் 17 வயதிலிருந்து மொடலாக இருக்கிறேன். அதனால் ஒரு பெண் போல் நேர்த்தியாக ஒப்பனை செய்து கொள்வது எனக்கு எளிதாக இருந்தது. உருவத்தை எளிதாக மாற்றிய அளவுக்கு பேச்சு, நடை போன்றவற்றை மாற்ற முடியவில்லை. பலமுறை பயிற்சி எடுத்துக்கொண்டேன். முழு நம்பிக்கையோடு போட்டியில் கலந்து கொண்டேன்.

பல சுற்றுப் போட்டிகளில் எளிதாக வெற்றியடைந்தேன். இறுதிப் போட்டியில் நான் பங்கேற்று இருந்தால், ஒருவேளை கஜகஸ்தான் அழகி என்ற பட்டத்தைப் பெற்றிருக்கலாம். ஆனால் நான் அதை விரும்பவில்லை.

யாரையும் ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கம் எனக்கு இல்லை என்றும், இன்றைய அழகு வெறும் உடல் சார்ந்த விடயமாக மாறிவிட்டதை எடுத்துக் காட்டவே இவ்வாறு பங்கேற்றேன் என்று தெரிவித்துள்ளார்.



CENTRE FOR IT EDUCATION
Job Skills Development & Training

புதிய பிரிவுகள் ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக உளச்சார்புப் பரீட்சை (Abtitute Test) நடத்தப்பட்டு சிறந்த பெறுபேறுகள் பெறுவோருக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்பட இருப்பதனால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பயிற்சிகளைப் பெற விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

செயன்முறை கற்பித்தல் முறையை உள்ளடக்கியதோடு தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்களினால் கற்பிக்கப்படும். குழுக்களாக இணைந்தும் பயிற்சி பெறலாம்.

Examination Hall : Lecture Hall, Aaruthal CiTE Centre. #125 Main Street, Jaffna. Date: 20. 02. 2018. Time: 10 AM

Programme I
Computer Literacy and English Language Skills Development and Training Programme
ICT | Graphic Design | Web Designing
Soft skills
Covers ICT and Communicative English Syllabus of TVEC- NVQ Level 3,4

Programme II
IT Job Skills Development & Training
Web Development Training including Digital marketing
Desktop Publishing & Designing.
Office & Database Management.
Course include Communicative English, Soft Skills & usage of Social media

உங்கள் பதிவுகளை மாசி மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னதாக பதிவு செய்யுமாறு வேண்டப்படுகின்றீர்கள்

SECOND BATCH COMMENCES FROM 01.03.2018

Aaruthal's CiTE BELIEVE TO ACHIEVE

021 221 4099

No. 125 Main Street, Jaffna (near to Courts Complex)

Powered by RATNAM FOUNDATION
Facilitated by Aaruthal



- ஜோர்ஜ் அன்ரனி -

# ஸ்கொட்லாந்து பொலிஸை ஆட்டிப் படைத்த புலி!

காக்கிச் சட்டை தமிழ்த்திரைப் படங்களில் அடிக்கடி உச்சரிக்கிற வசனம் ஸ்கொட்லாந்து பொலிஸுக்கு அடுத்து நாங்கதான். ஏனெனில் உலகின் நம்பர் வன் பொலிஸ் ஸ்கொட்லாந்து. ஆனால், அவர்களையே கதற வைத்திருக்கிறது ஒரு புலி!

24 வயது புரூஸ் க்ரப், ஸ்கொட்லாந்தின் அபர்டன்சயர் மாகாணத்தில் பீட்டர் ஹெட் என்கிற பகுதியில் மாட்டுப் பண்ணை நடத்தி வருகிறார். அங்குப் பல பசுக்கள் கர்ப்பமாக இருந்தன. அவற்றின் நடவடிக்கைகளைக் கவனிக்க கடந்த செவ்வாய் இரவு பண்ணைக்கு வந்தவருக்குத் தூக்கி வாரிப் போட்டது. காரணம் பண்ணைக்குப் பக்கத்தில் பெரிய புலி ஒன்று படுத்திருந்தது.

புலியைப் பார்த்தவருக்குப் பதற்றம் தொற்றிக்கொள்கிறது. புலி பண்ணைக்குள் புகுந்துவிடுமோ என்கிற பயம் அதிகரிக்க ஸ்கொட்லாந்தின் நோர்த் ஈஸ்ட் காவல்துறைக்கு போன் செய்துவிட்டார். காவல்துறை புலி என்றதும் துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டு சம்பவ இடத்திற்குக் கிளம்பியது. வனத்துறைக்கும் தகவல் தெரிவிக்கப்படுகிறது. பீட்டர் ஹெட் பரபரப்பாகிறது.

துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டு ஆறு கார்களில் சம்பவ இடத்திற்கு வருகிறார்கள் பொலிஸார். சம்பவ இடத்தைத் துப்பாக்கி முனையில் சுற்றி வளைக்கிறார்கள். புலி படுத்திருப்பது உறுதிசெய்யப்படுகிறது.

புரூஸ் க்ரப்பிடம் விசாரணை நடக்கிறது. பக்கத்தில் இருக்கிற தேசிய பூங்காவிலிருந்து ஏதேனும் விலங்கு தப்பித்துச் சென்றிருக்கிறதா என விசாரிக்கிறார்கள். சில துப்பாக்கிகள் புலியின் நடவடிக்கையைக் கவனித்துக்கொண்டிருக்கின்றன. சுமார் 45 நிமிடங்கள் புலியின் அசைவுக்காகக் காத்திருக்கிறார்கள்.

ஆனால், புலியிடமிருந்து எந்த அசைவும் இல்லாமல் இருக்கிறது. புலியின் நடவடிக்கையில் சந்தேகமுற்ற காவல்துறை புலியை நெருங்க ஆரம்பிக்கிறார்கள். பதற்றத் தோடு பக்கத்தில் போனவர்களுக்கு மிகப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

ஏனெனில் அங்கே படுத்தி ருந்தது புலி அல்ல, பொம்மைப் புலி.


ஒட்டு மொத்தக் குழுவும் கொலை வெறியோடு புலி என்று தொலைபேசியல் தகவல் கொடுத்த புரூஸ் க்ரப் பக்கம் திரும்புகிறார்கள். புரூஸ் க்ரப் போதையில் இருக்கிறாரா எனச் சோதனை செய்கிறார்கள். ஆனால் அவர் என் பண்ணையில் 200 பசுக்கள் கர்ப்பமாக இருக்கின்றன. அவை எப்போதுவேண்டுமானாலும் கன்று ஈனலாம், ஒவ்வொரு நொடியும் காத்திருக்கிறேன், இப்படியான சூழ்நிலையில் எப்படிக் குடிக்க முடியும் எனச் சொல்கிறார். யார் பொம்மைப் புலியை இங்கே கொண்டு வந்து வைத்தது என்கிற கோணத்தில் விசாரித்தார்கள். ஆனால் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

இவ்வளவு காவல்துறை அதிகாரிகள் வந்தும் 45 நிமிடங்களுக்குப் பிறகே அது பொம்மை எனக் கண்டுபிடிக்க முடிந்தது. புரூஸ் க்ரப் என்ன செய்வார். அவர் செய்தது சரி எனச் சொல்லிவிட்டு காவல்துறை பொம்மைப் புலியைப் பறிமுதல் செய்து எடுத்துச் செல்கிறார்கள்.

அடுத்தநாள் நோர்த் ஈஸ்ட் காவல் துறையின் அதிகாரபூர்வ ஃபேஸ்புக், டுவிட்டர் பக்கத்தில் சம்பவம் நடந்தது உண்மைதான். நல்ல நோக்கத்திற்காகத்தான் அந்தத் தகவல் சொல்லப்பட்டது. கடினமான சூழ்நிலைகளில் மக்களைப் பாதுகாப்பதே எங்களின் பணி, இந்தமாதிரியான சூழ்நிலையையும் நாங்கள் கருத்தில்கொண்டு துரிதமாகச் செயல்படுவோம் எனப் பதிவிடுகிறார்கள்.

புலியைப் பார்த்து பயப்படாமல் இருந்தால் அப்புறம் புலிக்கு என்ன மரியாதை...?

> "காவல்துறை அதிகாரிகள் வந்து 45 நிமிடங்களுக்குப் பிறகே அது பொம்மை எனக் கண்டுபிடிக்க முடிந்தது."



கடந்த செவ்வாயன்று நடந்த சம்பவம்

# பூனைகளின் நிலம்

மேற்கு சைபீரியாவில் உள்ள பனிசூழ்ந்த ப்ரை கோரோட்னி கிராமம், மற்றக் கிராமங்களைவிட வித்தியாச மானது. இங்கே ஆயிரக்கணக்கான சைபீரிய பூனைகள் வசிப்பதால், கோஷ்லாண்டியா அதாவது பூனை களின் நிலம் என்று அழைக்கிறார்கள்.

14 ஆண்டுகளுக்கு முன்பு மற்றக் கிராமங்களைப்போல்தான் இதுவும் இருந்தது. 2003ஆம் ஆண்டு 59 வயது அல்லாவும் அவரது கணவர் செர்கேயும் ஓர் அழகான சைபீரிய பூனையை கிராமத்துக்குக் கொண்டு வந்தனர். பபுஷ்கா என்ற இந்தப் பூனை, ஒரு வருடம் கழித்து 5 குட்டி களை ஈன்றது.


சில ஆண்டுகளில் பூனைகளின் எண்ணிக்கை நூற்றுக்கணக்கில் பெருகிவிட்டது. அல்லாவின் பண்ணை, வீடு, தெரு என்று எங்கு பார்த்தாலும் பூனைகளாகத் திரிந்தன. எவ்வளவு பூனைகள் இருக்கின்றன என்று யாரா வது கேட்டால், பத்து லட்சம் பூனைக ளுக்கு மேல் இருக்கலாம் என்று பதில் சொல்வார் அல்லா.

சைபீரிய பூனைகள் உருவத்தில் பெரியவை. ஒவ்வொரு பூனையும் ஒவ்வொரு விதத்தில் அழகாக இருக் கும். பூனைகளைப் போல் அழகான உயிரினம் வேறு இல்லை! நாங்கள்



தினமும் பூனைகளைப் படங்கள் எடுத்து, சமூக வலைத்தளங்களில் வெளியிடுவோம். திடீரென்று எங்கள் சைபீரிய பூனைகளை, நோர்வே பூனைகள் என்று சமூக வலைத்தளங் களில் வெளியிட ஆரம்பித்தனர். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகுதான் தெரிந்தது, எங்களின் அனுமதியின்றி, ஒரு நோர்வே இணையதளம் நோர்வே பூனைகள் என்ற பெயரில் தொடர்ச்சியாக எங்க ளின் படங்களை வெளியிட ஆரம் பித்தது.

இந்தத் தவறான தகவலை உலகம் முழுவதும் நம்ப ஆரம்பித்துவிட்டனர். கோஷ்லாண்டியா பூனைகளில் 2 வகைகள் இருக்கின்றன. காடுகளுக்குள் சென்று வேட்டையாடக்கூடியவை ஒரு வகை. இவை காடுகளுக்குள் சென் றால், திரும்பி வர பல மாதங்களாகும். மற்றொரு வகை வீட்டுப் பூனைகளைப் போலிருப்பவை. மனிதர்கள் கொடுக் கும் உணவுகளைச் சாப்பிட்டுக் கொண்டு, எலிகளை வேட்டையாடிக் கொண்டு இருப்பவை. இந்த இரண்டு வகை பூனைகளிலும் பெண் பூனை கள் கிராமத்தை விட்டு வெளியேறுவ தில்லை என்கிறார் அல்லா.



## தொண்டை வறண்ட நிலையில் தாகத்துக்குத் தண்ணீர்!



செல்வ புவியரசன்,

# தப்பித்தது கேப்டவுன்!!

தென்னாபிரிக்க நகர மான கேப்டவுன், முற் றிலும் குடி தண்ணீர் இல்லாத கடும் வறட்சி நிலையை நோக்கி நகர்ந்து கொண் டிருக்கிறது. ஏப்.16 இல் அந்நகரத்தில் குடிதண்ணீர் முழுமையும் தீர்ந்துபோய் 'டே ஸீரோ' எனப்படும் பூஜ்ஜிய நாளை எதிர்கொள்ள வேண்டியி ருக்கும் என்று அச்சம் உருவாகியி ருந்தது. இந்நிலையில், கேப்டவுன் (Cape town) அருகிலுள்ள கிரபவ் நகரைச் சேர்ந்த விவசாயிகள் அமைப்பு உதவிக்கரம் நீட்டியிருக் கிறது. தங்களது உபரிநீரான 1,000 கோடி லீற்றர் நீரை கேப்டவுனுக்கு அளித்து உதவியுள்ளது.

வெஸ்டர்ன் கேப் மாகாணம், தென்னாபிரிக்காவின் தென் மேற்கு முனையில் கடற் கரையோ ரமாக அமைந்திருக்கிறது. அம் மாகாணத்தில் வசிக்கும் மக்கள் தொகையில் ஏறக்குறைய மூன் றில் இரண்டு பங்குபேர், அதாவது 40லட்சம் பேர், அம்மாகாணத்தின் தலைநகரான கேப்டவுனில்தான் வசித் துக்கொண்டிருக்கிறார்கள்.

கடந்த மூன்றாண்டுகளாகப் பருவ மழை பொய்த்ததால் கேப்டவுன் நக ருக்குத் தண்ணீர் வழங்கும் ஆறு நீர்த் தேக்கங்களும் வறண்டுவிட்டன. நாளொன்றுக்கு 100 கோடி லீற்றராக நகரின் தண்ணீர்ப் பயன்பாடு பாதி யாகக் குறைந்து விட்டது.

ஒரு நாளைக்கு ஒரு நபர் 87 லீற்றர் நீரை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று நகராட்சி நிர்வாகம் உத்தர விட்டுள்ளது. பருவநிலை மாற்றத்தின் விளைவுகள் என்னவாக இருக்கும் என்பதற்கு அறிகுறியாக கேப்டவுன் குடிதண்ணீர் பிரச்சினை அமைந்துள் ளது. எனவே, உலகம் முழுவதும் உள்ள சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் கவனம் கேப் டவுன் மீது குவிந்திருக்கிறது.

இந்த நிலையில்தான் கிரபவ் நக ரின் வழியே ஓடும் பால்மியட் நதியின் உபரி நீரை க்ரோன்லேண்ட் நீர் உபயோகிப்பாளர் சங்கம் என்ற விவசா யிகள் அமைப்பு, கேப்டவுனுக்கு தானாக முன்வந்து அளித்துள்ளது.

பால்மியட் நதியின் நீர்ப் பகிர்வு, மேலாண்மை, மாசுக் கட்டுப்பாடு என முக்கிய பணிகள் அனைத்தையும் அர சால் அங்கீகரிக்கப்பட்ட இந்த விவ சாயிகள் அமைப்பே மேற்கொண்டு வரு கிறது. உறுப்பினர்களால் தேர்ந்



தெடுக்கப்படும் 20 பேர் கொண்ட நிர் வாகக் குழுவுக்கு, இச்சங்கத்தின் சார் பாக முடிவெடுக்கவும் செயல் படுத்தவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. கிரபவ் நகரம் கேப்டவுனிலிருந்து 65 கி.மீ. தொலைவில் உள்ளது. அந்நகரின் ஐகென்ஹாப் நீர்த்தேக்கத்திலிருந்து அனுப்பப்பட்டு வரும் இந்நீரானது, கேப்டவுனின் குடி தண்ணீர் குழாய்களு டன் இணைக்கப்பட உள்ளது.

இதன்மூலம், கேப்டவுனின் தண்ணீர் இல்லாத நாள் மே 11க்கு தள்ளிப் போடப் பட்டுள்ளது. இது நிரந்தரத் தீர்வு அல்ல. தொண்டை வறண்ட நிலையில் நாக்கில் சில சொட்டு தண்ணீரை விடுகின்ற முயற்சி தான். ஆனால், இந்தக் காலத்தினால் செய்த உதவியினால் கிரபவ் விவசாயி களின் கருணை மனதை உலகம் அறிந்து கொண்டிருக்கிறது.


பழ வகைகள் சாகு படியை மட்டுமே நம்பியிருக்கும் வெஸ்டர்ன் கேப் மாகா ணம் முழுமையுமே வறட்சியால் பாதிக் கப்பட்டிருக்கிறது. கால் நடை வளர்ப்பும் கூட சிரமமாயிருக்கிறது. எனினும், விவ சாயத்துக்குப் போக, மிச்சமிருக்கும் நீரை தலைநகரின் தண்ணீர்ப் பிரச்சினை யைத் தீர்த்துவைக்க கிரபவ் விவசாயிகள் முன்வந்திருக்கிறார்கள். பூமியின் வட பகுதியில் அமைந் துள்ள முதலாளித் துவ நாடுகளின் மித மிஞ்சிய உற்பத்தி யும் எரிபொருள் பயன்பாடும்தான் பரு வநிலை மாற்றத்தை ஏற்படுத்தி யுள்ளன. ஆனால், அதன் விளைவுகளைத் தென் பகுதியில் அமைந்துள்ள ஆபிரிக்காக் கண் டம் அனுபவித்துக் கொண்டிருக் கிறது.

ஆபிரிக்காவின் தென் முனை யில் இன்று ஏற்பட்டிருக்கும் குடி தண்ணீர்ப் பற்றாக்குறை சிக்கல், ஆசியாவின் தென் முனையில் அமைந்திருக்கும் நம்மையும் ஒரு நாள் தாக்கக்கூடும். ஒரு வேளை, அப்படியொரு சிக்கலை நாம் எதிர் கொள்ள வேண்டி யிருந்தால் என்னதான் செய் வோமோ...?

**ஒரு நாளைக்கு ஒரு நபர் 87 லீற்றர் நீரை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று நகராட்சி நிர்வாகம் உத்தர விட்டுள்ளது. பருவநிலை மாற்றத்தின் விளைவுகள் என்னவாக இருக்கும் என்பதற்கு அறிகுறியாக கேப்டவுன் தண்ணீர் பிரச்சினை அமைந்துள்ளது.**



**வழிமூலம் :** Roar
**ஆங்கிலத்தில் :**
MUDITHA KATUWAWALA
**மொழியாக்கம் :நித்தியபாரதி**



# இரண்டாம் உலகப் போரில் திருமலையில் அழிக்கப்பட்ட எண்ணெய் தாங்கி

இரண்டாம் உலகப் போர்க் காலப்பகுதியில் திருகோணமலையின் மேற்குப் பக்கத்தில் பிரித்தானியர்களால் கட்டப்பட்ட எண்ணெய் கொள்கலன் தாங்கிப் பண்ணை (oil tank farm) ஒன்று காட்டில் மறைந்து காணப்படுகிறது.

ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கு எதிராக கிழக்கிந்திய பாதுகாப்பு நடவடிக்கை இடம்பெற்றபோது பிரித்தானியக் கடற்படை மற்றும் பிரித்தானிய விமானப் படையினர் தமக்குத் தேவையான எரிபொருள்களை நிரப்புவதற்காக திருகோணமலையில் அமைக்கப்பட்ட எண்ணெய் கொள்கலன் தாங்கியைப் பிரதானமாகப் பயன்படுத்தினர். சிங்கப்பூரை ஜப்பான் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த பின்னர், இப் பிராந்தியத்திற்கான பிரதான எரி பொருள் நிரப்பு நிலையமாக திருகோணமலை விளங்கியது.

தற்போது இக்கொள்கலன் தாங்கியானது பழுதடைந்த நிலையில் காணப்பட்டாலும் கூட, இங்கு பெற்றோலிய சேமிப்பு வசதியைச் செய்வதற்கான தனது ஆர்வத்தை இந்தியா வெளியிட்டுள்ளது. இது தொடர்பான இந்திய-இலங்கை கூட்டு உடன்படிக்கையை மேற் கொள்வதற்கான சமரசப் பேச்சுக்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்று பெற்றோலிய அமைச்சர் சந்திம வீரக்கொடி உறுதிப்படுத்தியுள்ளார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

2015ல் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கான தனது உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்ட போது பெற்றோலிய கொள்கலன் தாங்கிகள் தொடர்பாகப் பேச்சுக்கள் நடத்தி இருந்தார் எனவும் திருகோணமலையில் பாழடைந்த நிலையில் காணப்படும் பிரித்தானிய காலத்து எண்ணெய் தாங்கிப் பண்ணையை அபிவிருத்தி செய்வதன் மூலம் திருகோணமலை யானது பிராந்திய பெற்றோலிய மையமாகத் திகழ்வதற்கு வழிவகுக்கும் எனவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

**850 ஏக்கர் நிலப்பரப்பில் 101 கொள்கலன் தாங்கிகள்**

திருகோணமலையில் பாழடைந்த நிலையில் காணப்படும் எண்ணெய் கொள்கலன் தாங்கிப் பண்ணையானது தற்போது காடுகளால் சூழப்பட்ட நிலையில் உள்ளது. 850 ஏக்கர் நிலப்பரப்பில் 101 கொள்கலன் தாங்கிகள் கட்டப்பட்டிருந்தன.

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பிற்பாடு இந்தக் கொள்கலன் தாங்கிகள் பயன்படுத்தப்படாது கைவிடப்பட்டன. அதன் பின்னர் இந்தப் பண்ணையைச் சூழவும் மரங்கள் வளர்ந்து இறுதியில் காட்டுப் பிரதேசமாக மாறியுள்ளது. இங்கு மலைப்பாம்புகள் அதிகளவில் காணப்படுகின்றன.

இந்த எண்ணெய் கொள்கலன் தாங்கிப் பண்ணைக்கான ஆரம்ப கட்டப் பணிகள் 1924இல் மேற்கொள்ளப்பட்டு 1930இல் நிறைவடைந்தன. இக்கொள் கலன் தாங்கிகள் ஓர் அங்குல தடிப்பிலான உருக்கினால் வார்க்கப்பட்டுள்ளன. அத்துடன் திருகோணமலைத் துறைமுகத்திற்கு அருகிலுள்ள தாங்கிகள் ஓர் அடி தடிப்பில் மிகவும் பலமாகக் கட்டப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கொள்கலன் தாங்கியும் 12,000 தொன் எரிபொருளைச் சேமித்து வைக்கக்கூடியவாறு கட்டப்பட்டன. திருகோணமலையில் பிரித்தானியர் காலத்தில் அமைக்கப்பட்ட எண்ணெய் கொள்கலன் தாங்கிப் பண்ணையில் அமைக்கப்பட்டுள்ள அனைத்துத் தாங்கிகளும் 12 லட்சம் தொன் வரையான எரிபொருளைச் சேமித்து வைக்கக்கூடிய திறனைக் கொண்டிருந்தன.

**தற்போது 15 தாங்கிகளே பயன்படுத்தப்படும் நிலையில்**

தற்போது 15 தாங்கிகள் மட்டும் பயன்படுத்தத்தக்க நிலையில் காணப்படுகின்றன. இவை அனைத்தும் இலங்கை ஐ.ஓ.சி நிறுவனத்தால் ஆளுகைப் படுத்தப்படுகின்றன. இவற்றின் அனைத்து உரிமையும் ஐ.ஓ.சி நிறுவனத்திற்கே வழங்கப்பட்டுள்ளன. இக்கொள்கலன் தாங்கிகளைச் சென்று பார்வையிடுவதற்கு இலங்கை ஐ.ஓ.சி நிறுவனத்தின் அனுமதி தேவைப்படுகிறது.



இக்கொள்கலன் தாங்கிகளில் இரண்டு, விமான தாக்குதல்களால் அழிக்கப்பட்டன. இவற்றுள் ஒன்று திட்டமிட்ட ரீதியில் ஜப்பானிய விமானத்தால் அழிக்கப்பட்டது. மற்றையது 1960இல் பிரித்தானியாவின் றோயல் விமானப்படை விமானம் தற்செயலாக இதில் மோதியதால் அழிவடைந்தது.

91ஆவது கொள்கலன் தாங்கியானது ஏப்ரல் 09, 1942 இல் திருகோணமலைத் துறைமுகம் மீது ஜப்பானியர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது அழிவுற்றது. அனைத்துக் கொள்கலன் தாங்கிகளிலும் மிகவும் தொலைவில் காணப்பட்ட 91ஆவது தாங்கியானது எரிபொருள் நிரப்பப்பட்டிருந்தது. இத் தாங்கியைச் சூழ மேலதிக பாதுகாப்புத் தடைகளும் அமைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் ஜப்பானிய விமானப் படையைச் சேர்ந்த விமானிகளான சிகெனோரி வற்றனபே, ருய கோற்றோ மற்றும் சுற்றோமு றொசிரா (Shigenori Watanabe, Tuyagoto, and Sutomu Toshira) ஆகியோர் 91 ஆவது தாங்கி மீது தமது விமானத்தை மோதி அழிவை ஏற்படுத்தினர். இந்தத்தற்கொலைத் தாக்குதலால் ஏற்பட்ட தீச்சுவாலை ஏழு நாள்கள் வரை நீடித்தது. இறுதியில் உருக்கால் அமைக் கப்பட்ட இத்தாங்கி தீயால் உருகியது.

இந்த அழிவின் எச்சத்தை இன்றும் பார்க்கமுடியும். இக்கொள்கலன் தாங்கியைச் சூழவிருந்த பிரதேசம் தீயால் எரிந்து சாம்பலாகியது. இதனையும் இன்றும் நேரில் பார்க்க முடியும். இதன் நிலப்பகுதி கறுப்பு நிற சாம்பல் மேடுகளாகக் காணப் படுகின்றன. இக்கொள்கலன் தாங்கியில் மோதிய விமானத்தின் இயந்திரப்பகுதியின் எச்சங்களை கொழும்பிலுள்ள விமானப்படையின் அருங்காட்சியகத்தில் பார்க்க முடியும்.

91ஆவது தாங்கியைச் சூழவுள்ள பிரதேசம் எவ்வித மாற்றமில்லாது பழைய நிலையில் பாதுகாக்கப்படுகிறது. இக் கொள்கலன் தாங்கிக்குள் பாசி படர்ந்த நீர்க் குட்டை ஒன்றையும் காண முடியும். இத்தாங்கிக்குள் உள்ளவற்றைப் பார்வையிடுவதற்காக அண்மையில் படிக்கட்டுக்கள் கட்டப்பட்டுள்ளன.

91வது தாங்கிக்குச் செல்லும் வழியில் மேலும் பல தாங்கிகள் மறைந்து காணப்படுகின்றன.

இப்பகுதி மரங்கள் நிறைந்த வனமாக மாறியுள்ளது. பழைய வீதிகள் மற்றும் நடைபாதைகள் தற்போது புதர்களால் சூழப்பட்டுள்ளன. ★

---

# பெண் வேட்பாளர்களுக்கு எதிராக வன்முறைகள், அவதூறு

## பாலியல் வல்லுறவு முயற்சியும்



இலங்கை உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் போட்டியிடும் பெண் வேட்பாளர்களுக்கு எதிரான வன்செயல்கள் குறித்து கணிசமான எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் வந்துள்ளன என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் கவலை வெளியிட்டுள்ளன.

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் அனைத்தும் கடந்த வியாழக்கிழமை இரவுடன் இங்கு பூர்த்தியாகின.

அதேவேளை தேர்தலை முன்னிட்டு நாட்டில் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே, பிரசாரகால தேர்தல் முறைகேடுகள் மற்றும் வன்முறைகள் குறித்த அறிக்கைகளை வெளியிட்டுள்ள தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள், அவற்றில் பெண் வேட்பாளர்களுக்கு எதிரான வன்செயல்களின் எண்ணிக் கையும் கணிசமாக இருப்பது குறித்து கவலை வெளியிட்டுள்ளன.

**25 சதவீதம் பெண் உறுப்பினர்கள்**

இந்தத் தடவை ஒவ்வொரு சபையிலும் 25 சதவீதமாவது பெண் உறுப்பினர்கள் இடம்பெற வேண்டும் என்ற விதி அமுலுக்கு வந்திருக்கிறது. அதன் காரணமாக பலதரப்பினரும் உடனடியாக பெண் வேட்பாளர்களைத் தேடிக்கண்டுபிடித்து போட்டியிடச் செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

அதேவேளையில், இந்தத் தேர்தலில் போட்டியிடும் பெண் வேட்பாளர்கள் கடுமையான வன்முறைகளையும் எதிர்கொண்டிருந்தனர் என்று அறிக்கைகள் கூறுகின்றன.

தமக்கு கிடைத்த 400க்கும் அதிகமான வன்முறைகளில் 34 வன்முறைகள் பெண் வேட்பாளர்களுக்கு எதிரானவை என்று கூறுகின்ற தேர்தல் வன் முறைகளை கண்காணிப்பதற்கான மையம், அவற்றில் தாக்குதல், உள மற்றும் மனரீதியிலான துன்புறுத்தல்கள் ஆகியன அடங்குவதாக கூறியுள்ளது. அவர்களது சொத்துக்களும் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

**பாலியல் வல்லுறவு முயற்சி**

தமக்கு 18க்கும் அதிகமான சம்பவங்கள் குறித்து முறைப்பாடு கிடைத்துள்ளன என கூறும் நீதியானதும், நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் செயலணிக் குழு அதில் ஒன்று பாலியல் வல்லுறவு முயற்சி என்றும் பல கொலை முயற்சிகளும் தாக்குதலும் இடம்பெற்றிருக்கின்றன என்றும் கூறியுள்ளது.

(18ஆம் பக்கம் பார்க்க...)



# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

**11.02.2018**
**17.02.2018**

**சந்திராஷ்டம நாள்** - கார்த்திகை 2ஆம், 3ஆம், 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதங்களில் பிறந் தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

2018ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் தைத்திங்கள் 29 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஏகாதசித்திதி. மாலை 5.24மணி வரை பின்னர் துவாதசி. நட்சத்திரம். மூலம் இரவு 10.59 மணிவரை பின்னர் பூராடம். அமிர்தசித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - மாலை 4.49 மணி முதல் 6.17 மணி வரை
**சுபநேரம்** - காலை 9.33 மணி முதல் 11.03 மணி வரை
**திவசத்துக்கான திதி**- தை மாத தேய்பிறை ஏகாதசி
**பிறந்த நட்சத்திர வழிபாடு**- மூலம்

**கணிப்பு:** 'ஜோதிடமணி' பிரம்ம ஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)



## மேஷம்:

இனிமையான வாரம். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். இல்லத்தில் இனிமை கொலுவிருக்கும். உறவினர்கள், நண்பர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும். சிலர் குடும்பத்துடன் சேர்ந்து இனிய சுற்றுலாப் பயணத்தை மேற்கொள்வார்கள். பெண்களுக்கு ஆடை, ஆபரண, ஆடம்பரப் பொருள்கள் வந்து சேரும். ஆசிரியர் மாணவர்கள் நல்லுறவு வளரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் இனிமையாகப் பேசி லாபம் மீட்டுவார்கள். இழுபறியில் இருந்த திருமண காரியங்கள் ஒப்பேறும்.



## ரிஷபம்:

கவலையான வாரம். பண வரவு குறையும். குடும்ப ஒற்றுமை சீர்குலையும். முயற்சிக்கும் காரியங்கள் தோல்வி அடையும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிப்பால் வருமானம் குறையும். மாணவர்கள் கல்வியில் மந்தநிலையை அடைவார்கள்.

செய்யும் தொழிலில் தொய்வு உண்டாகும். பெண்களின் ஆசைகள் நிராசையாகி விடும். சுயதொழிலில் ஆதாயம் கிடைக்கும். பெண்களின் திருமணப் பேச்சுக்கள் குழப்பத்தில் இருக்கும். கொடுக்கல், வாங்கலில் பிரச்சினைகள் உண்டாகும்.



## மிதுனம்:

சமபலன் உள்ள வாரம். வரவும், செலவும் சமமாக இருக்கும். எடுக்கும் முயற்சிகள் தடை, தாமதமாகும். தேகாரோக்கியம் பாதிப்படையும்.

குடும்பத்தில் ஓரளவு அமைதி நிறைந்து காணப்படும். தொழிலில் கடின உழைப்பும், அலைச்சலும் அதிகமாகும். சகோதர உறவு வலுவானதாக இருக்கும். மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும். தொழிலாளர்கள் பாடுபட்டும் பயன் குறையும். அரசியல்வாதிகளின் மதிப்பு, செல்வாக்கு குறையும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை.



## கடகம்:

யோகமான வாரம். தன லாபம் பெருகும். குடும்பத்தில் ஒற்றுமையுணர்வு நீடிக்கும். எதிர்பாராத காரியம் கைகூடும். வியாபாரிகளுக்கு விற்பனையில் நல்ல லாபம் கிடைக்கும். செய்யும் தொழிலில் ஏற்றமான நிலை உண்டாகும். வீடு, காணி வாங்கும் எண்ணம் கைகூடும்.

சிலருக்கு தொழில் விஷயமாய் வெளிநாடு செல்லும் சந்தர்ப்பம் அமையும். உத்தியோகத்தர் கோரிய விண்ணப்பங்கள் நிறைவேறும். இதுவரை பிரிந்திருந்த உறவினர்கள் வலிய வந்து சேர்வார்கள்.



## சிம்மம்:

ஆக்கபூர்வமான வாரம். பணம் எல்லா வழிகளிலும் வந்து சேரும். வெளிவட்டாரப் பழக்கங்கள் சிறப்பாக அமையும். பெண்கள் சுயதொழிலில் நன்மையும் உழைப்பில் முன்னேற்றமும் அடைவார்கள். குடும்பத்தில் புரிந்துணர்வு அதிகரிக்கும்.

மாணவர்கள் ஆசிரியர்களின் உதவியால் கல்வி மேன்மையைப் பெறுவார்கள். சகோதர உறவு வலுவானதாக இருக்கும். வெளிநாட்டுத் தொடர்பால் எதிர்பாராத நன்மையை அடைவார்கள். வியாபாரிகள் தொழிலில் மேன்மை அடைவார்கள்.



## கன்னி:

சஞ்சலமான வாரம். வருமானம் குறையும். குடும்பத்தில் குழப்ப நிலை காணப்படும். அரசாங்கத்திடம் ஒரு விடயத்திற்கு பல தடவை அலைய வேண்டி வரும். வியாபாரிகளுக்கு எதிரிகளால் தொல்லை உண்டாகும்.

கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. எதிலும் முன் எச்சரிக்கையுடன் செயற்பட்டால் நன்மை உண்டாகும். மாணவர்களுக்கு படித்த விஷயத்தை நினைவுபடுத்துவதில் சில சிக்கல்கள் உண்டாகும்.



## துலாம்:

மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சமமாக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். பெண்களுக்கு சுயதொழில் ஓரளவு வளர்ச்சி இருக்கும். வியாபாரிகள் தொழிலில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டால் நன்மை உண்டாகும்.

விட்டுப்பிரிந்த உறவுகள் பெரியவர்களின் முயற்சியால் மீண்டும் ஒன்று சேர்வார்கள். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உத்தியோகத்தர்களுக்கு வேலை நேரம் அதிகரித்தாலும் மற்றவர்களின் பணியைச் சேர்த்துச் செய்யவேண்டி வரும்.



## விருச்சிகம்:

மகிழ்ச்சியான வாரம். தனலாபம் பெருகும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் பணியாளர்களுக்கு விரும்பிய பணியும் இடமாற்றமும் கிடைக்கும். குடும்பத்தில் சுப காரியம் கைகூடும். வியாபாரிகள் உழைப்பிற்குத் தகுந்த வருமானம் பெறுவார்கள். கலைஞர்களுக்கு படவாய்ப்புக்கள் அதிகரிப்பால் மகிழ்ச்சி அடைவார்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். பெண்கள் சுய தொழிலில் வளர்ச்சி அடைவார்கள். மாணவர்களுக்கு உயர்கல்வியில் புதிய ஆர்வமும் ஊக்கமும் ஏற்படும்.



## தனுசு:

அனுகூலமான வாரம். பொருளாதாரம் வளர்ச்சி அடையும். முதலீடு இல்லாத தொழில் செய்பவர்களுக்கு முன்னேற்றமான வியாபார விருத்தி உண்டாகும். சிலருக்கு சொந்தத் தொழில் செய்யவேண்டுமென்ற எண்ணம் கைகூடும்.

கடன், பகை, நோய் நீங்கும். நண்பர்கள் உதவி செய்வார்கள். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். புத்திரர்கள் மூலம் வருமானம் வேலை வாய்ப்புக்கள் அமையும்.



## மகரம்:

சலனம் மிகுந்த வாரம். தனவரவு குறையும். குடும்ப உறவுகளின் பிரச்சினைகள் பற்றிய கவலை மனதை வாட்டும். பெண்களின் முடிவுக்கு சிலர் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள். உறவினர்கள் நண்பர்கள் தொல்லை கொடுப்பார்கள். தொழிலில் கடின உழைப்பால் உடல்நிலை பாதிப்படையும்.

தொழிலில் பல இழப்புகளைச் சந்திக்க வேண்டி வரும். பெற்றோரைப் பற்றிய கவலை உண்டாகும். பிள்ளைகளின் பிடிவாதம் மன உளைச்சலைத் தரும். கொடுக்கல், வாங்கலில் பிணக்குகள் உண்டாகும்.



## கும்பம்:

உயர்வான வாரம். வருமானம் உயர்வடையும். நீண்ட நாள் பிரச்சினை தீரும். புதிய தொழில் வாய்ப்புக்கள் அமையும். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு செல்வாக்கு உயரும்.

இதுவரை தீர்க்கப்படாமல் இருந்த வழக்குகள் தீர்வடையும். உத்தியோகத்தில் விரும்பிய பதவி உயர்வு, ஊதிய உயர்வு என்பன கிடைக்கும். வியாபாரிகளுக்கு தரமான பொருள்கள் மூலம் நல்ல விற்பனை ஆதாயம் பெற வாய்ப்புள்ளது.



## மீனம்:

விருத்தியான வாரம். பொருளாதாரம் மேம்படும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும் சொந்தத் தொழில் செய்ய வேண்டும் என்ற முயற்சி கைகூடும். சகோதர வழியால் இணக்கமான உறவு நீடிக்கும்.

பூர்வீக இடத்தில் செல்வாக்குப் பெறுவார்கள். மாணவர்கள் கல்வியில் விருத்தி அடைவார்கள். வெளிவட்டாரப் பழக்கம் நன்மையைத் தரும். செய்யும் தொழிலில் விருத்தி உண்டாகும். மனம் விரும்பிய மணவாழ்க்கை அமையும். தொழில் பார்க்கும் பெண்கள் உயர்வு பெறுவார்கள்.



# பூமி தட்டையானதா?

# பலதும் பத்தும் கூறி களைக்க வைக்கின்றனர் இந்தப் பிரகிருதிகள்!

■ ர.சீனிவாசன்

சென்ற வார இறுதியில் (கடந்த 3ஆம் திகதி) நடந்த கூத்து இது. மேட்மைக் ஹியூக்ஸ் (Mad Mike Hughes) என்று அழைக்கப்படும் அந்த மனிதர் கலிஃபோர்னியா பாலைவனத்தில் நின்று கொண்டிருந்தார். அவர் அருகில் அவரைத் தூக்கிக் கொண்டு செல்ல ரொக்கெட் ஒன்று தயார் நிலையில் இருந்தது. அட, உண்மை தான்! அவரின் லட்சியமே பூமி தட்டையானது என்பதை நிரூபிப்பதுதான்.

இதற்காக அவர் எந்த எல்லைக்கும் போகத் தயார். உதாரணமாக, அன்றைக்கு, ரொக்கெட் ஒன்றில் தன் உடலைக் கட்டிக் கொண்டு விண்ணில் பறந்து கீழே இருக்கும் பூமியை படம் பிடிக்கும் முயற்சியில்தான் அவர் இறங்கியிருந்தார். அவரின் இந்தச் சாகசத்தை நேரடியாக ஒளிபரப்ப ஓர் இணையத் தொலைக்காட்சியும் தயார் நிலையில் காத்திருக்கிறது.

எண்கள் தலைகீழாக எண்ணப்படுவது முடிந்து, பத்து நிமிடங்களுக்கு மேலாகியும் ரொக்கெட் புறப்படுவதற்கான எந்த அறிகுறியும் தெரியவில்லை. மேட் மைக் ஹியூக்ஸ் இதோ இப்ப ரெடி ஆயிடும்! என்று ஏதோ 'ஸ்டார்டிங் ட்ரபிள்' உள்ள ஸ்கூட்டர் போல அந்த ரொக்கெட்டை டீல் செய்தார். எந்த முன்னேற்றமும் இல்லை. முயற்சி கைவிடப்பட்டது.

இது அவரின் முதல் முயற்சியல்ல. இதற்கு முன்னரே பல முறை இப்படிச் செய்யப்போகிறேன் என்று களமிறங்கி இதே போல தோல்வியைத்தான் சந்தித்திருக்கிறார். அந்தத் தோல்விகளை கூடத் தாங்கிக் கொள்ளலாம். இந்த ரொக்கெட் கொண்டு பூமி தட்டையானது தான் என்று அவர் நிரூபிக்க முயல்வதையும் கூட பொறுத்துக்கொள்ளலாம்.


ஆனால், அதற்காக இவர் தயார் செய்திருக்கும் இந்த ரொக்கெட் எத்தனை அடி வரை மேலேபோகும் என்று கேட்டால் 1800 அடிகள் (550 மீற்றர்) என்று கூலாக சொல்கிறார். இந்தளவு அடிகள் மட்டுமே மேலே போய் படம் எடுக்க எதற்கு இந்த ரொக்கெட் அலப்பறைகள் எல்லாம்? ஓர் உயரமான கட்டடத்தில் ஏறினால் போதாதா? இந்தக் கேள்விக்குஎல்லாம் மேட்மைக் ஹியூக்ஸ் அவர்களிடம் எந்தப் பதிலும் இல்லை. அவரிடம் மட்டுமல்ல, அவர் இருக்கும் அமைப்பான 'ஃபிளாட் ஏர்த் சொசைட்டியிடமும் (Flat Earth Society) பதில் இல்லை.

அறிவியல் ரீதியாகவும், தர்க்க ரீதியாகவும் பூமியின் வடிவம் குறித்து முன்வைக்கப்படும் கேள்விகளை அவர்கள் தவிர்க்கவே நினைக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை பூமி தட்டையானதுதான். கோள வடிவம் கிடையாது.

நாம் நடக்கும் போது பூமி சமப்பரப்பாகத்தானே இருக்கிறது? நிலத்தை ஒரு சமமான இடமாகத்தானே நாம் எப்போதும் உணர்கிறோம்? அப்போது பூமி என்ற நம் வாழ்விடமும் தட்டையானது தானே? இதுதான் அவர்களின் வாதம். இதற்கு எதிர்வாதமாக நாசா போன்ற விண்வெளி நிறுவனங்கள், பல்வேறு நாடுகளின் அரசு சார்ந்த நிறுவனங்கள் வெளியிடும் பூமியின் படங்களை முன்வைத்தால், அதை ஏற்க இவர்கள் தயாராக இல்லை. இது விண்வெளியில் இருந்து எடுத்த படம்.

அங்கே இருந்து பார்க்கும் போது நம் பூமி பூகோள வடிவம்தான் என்றால், எங்கே போட்டோப் செய்தீர்கள்? என்பார்கள். இது இன்று நேற்று தொடங்கிய நம்பிக்கை இல்லை. 1800களின் மத்தியில் சாமுவேல் ரோபோதம் என்ற ஆங்கில எழுத்தாளர், பூமியின் வடிவம் இப்படியெல்லாம் இருக்கலாம் என்று சில படைப்பு விளக்கங்களை முன்வைத்தார். அவர் கூறியதில் ஒரு வடிவம்தான் இந்தத் தட்டையான பூமி. ஆனால், 1950களில்தான் இந்த 'ஃபிளாட் ஏர்த் சொசைட்டி' ஒரு சங்கமாக நிறுவப்பட்டு, உறுப்பினர்கள் இணைந்தனர்.

இன்றும் சமூக வலைத்தளங்கள் மூலம் இவர்களின் கருத்துக்கள் பரப்பப்பட்டு மக்களைக் கவர்ந்து இழுத்துக் கொண்டிருக்கின்றன. அந்தச் சங்கத்தின் கணக்குப் படி, 2009ஆம் ஆண்டு முதல் வருடத்திற்கு 200 புதிய உறுப்பினர்கள் விடாமல் இணைந்து வருகின்றனர் என்றும், அவர்களில் பெரும்பாலானோர் அமெரிக்கர்கள் மற்றும் பிரிட்டனை சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.



சரி, அறிவியல் அறிவு வளராத காலகட்டத்தில் இப்படி ஒரு கூட்டம் இருந்திருக்கலாம். இப்போதுமா இப்படி இருப்பார்கள்? ஒரு வேளை இவர்கள் வேண்டுமென்றே இதைச் செய்கிறார்களா என்றால் இல்லை என்றுதான் தோன்றுகிறது. இதற்கென்று ஒரு பிரத்தியேக இணையத்தளம், ஆராய்ச்சிக் கட்டுரைகள், விளக்கப்படங்கள் என்று முழு வீச்சுடன் இப்போதும் செயற்படுவதை பார்த்தால், இவர்கள் மிகவும் சீரியஸான மனிதர்களாகத்தான் உணரப்படுகிறார்கள்.

அப்படியென்றால், இவர்களை பொறுத்தவரை பூமி என்பது எப்படி இருக்கிறது?

பூமி என்பது ஒரு வட்டமான வில்லை. அதன் நடுவில் ஆர்டிக் பிரதேசம் இருக்க, ஓரங்களில் அன்டார்டிகா மற்றும் அதன் 150 அடி உயர மலைகள் இருக்கின்றன. இந்த மலைகள்தான் நம்மைப் பூமியின் ஓரத்திலிருந்து கீழே விழாமல் தடுக்கின்றன. இந்த மலைகளில் ஏறி இறங்கினால், நாம் பூமியிலிருந்து கீழே விழுந்து விடுவோம். இதை தடுக்கத்தான் நாசா போன்ற நிறுவனங்கள் வேலை செய்கின்றன.


நாதன் தொம்சன் என்ற 'ஃபிளாட் ஏர்த் சொசைட்டி' ஆதரவாளர் ஒருவர், கடந்த மே மாதம், ஸ்டார்பக்ஸ் ஒன்றில், நாசா விஞ்ஞானி ஒருவரைச் சந்தித்தார் என்றும், போதையில் அவர் நிறைய உண்மைகளைக் கசியவிட்டார் என்றும் வீடியோ ஒன்றை வெளியிட்டார். சில நாள்களில் அந்த வீடியோ யூ டியூப் தளத்தில் இருந்து நீக் கப்பட்டது.

### இரவு, பகல் என்பது வில்லை வடிவில் இருக்கும் பூமிக்கு எப்படி நிகழ்கிறது?

வில்லை வடிவில் இருக்கும் பூமியின் மேல், சூரியன் மற்றும் சந்திரன் கோள வடிவில் இருக்கின்றன. பூமியிலிருந்து 4,828 கிலோமீற்றர்கள் உயரத்தில் இவை இரண்டும் இருக்கின்றன என்றும் 5000 கிலோமீற்றர்களுக்கு மேலே நட்சத்திரக் கூட்டங்கள் இருக்கின்றன எனக் கூறுகின்றனர். 24 மணி நேரங்களை அட்டவணை போட்டு பிரித்து பூமிக்கு இவையெல்லாம் வெளிச்சம் கொடுக்கின்றன என்றும் கூறுகின்றனர்.

சரி, கிரகணங்கள் எப்படி ஏற்படுகின்றன என்றால், Anti Moon என்று ஒன்று இருப்பதாகவும், அதுதான் கிரகணத்தின் போது, சூரியன் மற்றும் சந்திரனையும் மறைப்பதாகவும் விளக்கம் கூறிதலை சுற்ற வைக்கின்றனர்.

இதை விடக் கொடூரமான நம்பிக்கை என்னவென்றால், புவியீர்ப்பு விசை என்ற ஒன்று இல்லை என்றும், வில்லை வடிவ பூமி ஒரு நொடிக்கு 32 கிலோமீற்றர்கள் தொடர்ந்து மேலே பறந்து கொண்டிருப்பதாகவும் கூறி சிரிப்பை வரவழைக்கின்றனர். அப்படியென்றால், விமானங்களை நேர்கோட்டில் செலுத்தி இலக்கை அடைவதைப் பற்றிக் கேட்டால், நம்மிடம் இருக்கும் GPS கருவிகள் அனைத்தும் போலி என்றும், அவற்றை வைத்து விமான ஓட்டிகளை ஏமாற்று கிறார்கள் என்று கூறி எதிர்வாதம் செய்பவர்களை களைக்க வைக்கின்றனர்.



அறிவியல் ரீதியாகவும், தர்க்க ரீதியாகவும் பூமியின் வடிவம் குறித்து முன்வைக்கப்படும் கேள்விகளை அவர்கள் தவிர்க்கவே நினைக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை பூமி தட்டையானது தான். கோளவடிவம் கிடையாது.



அதை விட, ஐக்கிய நாடுகள் சபையின் லோகோவை சுட்டிக்காட்டி, அதில் பூமிவில்லை வடிவில் தட்டையாக இருப்பதாகவும், அவர்களுக்கு அந்த உண்மை தெரியும் என்றும் கூறுகின்றனர். இது வெறும் சாம்பிள்தான். நீங்கள் அறிவியல் ரீதியாக என்ன கேள்வி வைத்தாலும், அதற்கு விடையாகப் பல புதிய விஷயங்களை, தங்களுக்குச் சாதகமான கணக்குகளைக் கண் முன்னே நிறுத்துகிறார்கள்.

இவர்களின் கருத்தைப் பரப்ப வேறு, ஓர் இணையத்தளம், பேஸ்புக் மற்றும் டுவிட்டர் பக்கங்கள் என்று நிறுவி தினமும் போஸ்ட் போடுகிறார்கள். அவர்கள் கூறும் மேலும் பல சுவாரஸ்ய கோட்பாடுகளை நீங்கள் அங்கே தெரிந்து கொள்ளலாம். ★

காலைக்கதிர் Kalaikkathir



# உலகம் அழிய இன்னும் இரு நிமிடமே!

## கடிகாரத்தில் நேரம் இப்போது 11:58

ர.சீனிவாசன்



வெடிகணிப்புக் குண்டுகள் பற்றித் தெரியாதவர்களே இருக்க முடியாது. சினி மாக்களில் 10, 9, 8, 7, 6,.... என எண்கள் தலைகீழாக எண்ணப்படுவதும், அதற்குள் அதைச் செயலிழக்க வைக்க ஹீரோ சாகசங்கள் பல புரிவதும், விறுவிறுப்பாகக் காட்சிகளை நகர்த்திவிடும். மூன்று நிமிடங்கள், இரண்டு நிமிடங்கள் இருக்கும் போதே அதைச் செயலிழக்க வைக்காமல், கடைசி ஓவர் வரை ஆட்டத்தை இழுத்துச் சென்று, கடைசிப் பந்தில் சிக்ஸர் தூக்கும் டோனி போல, இறுதியாக ஒரு நொடி இருக்கும்போது மட்டுமே வெடிகுண்டைச் செயலிழக்க வைப்பார்கள்.

அப்படிப்பட்ட ஒரு ரைம்பொம் தான் இந்த அழிவின் கடிகாரம் எனப்படும் டூம்ஸ்டே குளொக் (Doomsday Clock). என்ன அந்த வெடி குண்டின் நேரம் முடிந்தால் ஒரு கட்டடத்தைத் தகர்க்கும். இந்த அழிவின் கடிகாரம் 12 மணியைத் தொட்டால், உலகம் முழுவதும் அடுத்த நொடி அழிந்திருக்கும் என எடுத்துக் கொள்ளலாம்.

ஆம். அது ஒரு கடிகாரம்தான். என்ன... இருக்கிறது ஆனால் இல்லை ரகத்தைச் சேர்ந்தது, அவ்வளவே! அழிவின் கடிகாரம் என்னும் இது, உண்மையில் ஓர் உருவகம். ஒரு குறியீடாக மட்டுமே பார்க்கப்படும் இது, நமக்குப் பூமியின் அழிவைக் குறித்து எச்சரிக்கை மணி அடிக்கிறது.

அணு ஆயுதப் போர், புவி வெப்பமயமாதல், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியால் மனித இனம் பாதிப்படைதல் என்ற மூன்று விஷயங்கள் எப்போதெல்லாம் பூதாகரமாகி உலக அரங்கில் தலைப்புச் செய்தியாக, ஒரு விவாதப் பொருளாக இருக்கிறதோ, அப்போதெல்லாம், இதன் முள் நள்ளிரவை நோக்கி மெல்ல மெல்ல நகரத் தொடங்கும். இதை யார் இயக்குகிறார்கள், இதுவரை எத்தனை முறை இதன் முட்கள் நகர்ந்திருக்கின்றன என்றெல்லாம் பார்க்கும் முன், இதன் வரலாற்றைப் பார்த்து விடுவோம்.

### யார் உருவாக்கினார்கள்? ஏன் உருவாக்கப்பட்டது?

1947ம் ஆண்டு. Bulletin of the Atomic Scientists (அணு விஞ்ஞானிகளின் பத்திரிகை) என்ற பத்திரிகையை நடத்தி வந்த விஞ்ஞானிகள், அப்போதைய சோவியத் யூனியன் அணு ஆயுதங்களை உருவாக்குவது குறித்த ஆராய்ச்சி நடத்துவதைக் கண்டு



அஞ்சினர். ஓர் ஆயுதம் உருவாக்கப்படுவது எதற்கு? எதிரிகளைத் தாக்கத் தானே? அப்படி அணு ஆயுதம் கொண்டு இந்த உலகம் தாக்கப்பட்டால் பேரழிவு ஏற்படுமல்லவா? எனவே, ஆயுதம் உருவாக்கப்பட்ட நாளன்றே நாம் புரிந்து கொள்ள வேண்டிய ஒரு விஷயம், அப்படி ஒரு பேரழிவு நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதுதானே? அதையே அவர்களும் முன்மொழிந்தார்கள்.

இவ்வாறு ஒவ்வொரு நாடும் அணு ஆயுதங்களை உருவாக்கத் தொடங்கும் போது அந்த அழிவு நாள் நம்மை மேலும் நெருங்குகிறது என்ற எண்ணம் உருவாகாமல் இல்லை. அதை மக்களுக்குத் தெரியப்படுத்துவதே இந்த அழிவின் கடிகாரத்தின் முக்கியப் பணி.

இதை உருவாக்கிய அணு விஞ்ஞானிகள் இந்த அழிவு நாளை நள்ளிரவுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். காரணம், நள்ளிரவு நேரம்தான் பொதுவாக எல்லோருக்கும் பயம் ஏற்படுத்தக் கூடியது. இந்தக் கடிகாரம் என்ற ஒன்று உருவகப்படுத்தப்பட்ட நாளிலிருந்தே அணு ஆயுதம் என்பது புழக்கத்தில் இருப்பதால், கடிகாரத்தின் நேரமானது எப்போதும் நள்ளிரவிற்கு மிக அருகிலேயே இருக்கிறது. உலக நிகழ்வுகளின் அடிப்படையில், அதன் சிறிய முள் எப்போதும் 11 மணியைத் தாண்டியே நிற்க, நிமிட முள் மட்டும் 12 இற்கு மிக அருகில் வரை சென்று கபடி ஆடிக் கொண்டே இருக்கின்றது. நிறுவப்பட்டது முதல் இந்த அழிவின் கடிகாரம் எந்தெந்த நேரங்களைக் காட்டியது எனப் படத்தில் காணலாம்.

### 1947 - 2018 வரை கடிகாரம் காட்டிய நேரங்கள்

அழிவின் கடிகாரத்தில் தற்போது மணி என்ன?

1947ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட போது, அணு ஆயுதங்கள் குறித்த ஆராய்ச்சியில் சோவியத் யூனியன் இருந்ததால், அப் போது மணி 11:53. அதாவது நள்ளிரவிற்கு இன்னும் 7 நிமிடங்கள். அதன் பிறகு, அவ்வப்போது நடக்கும் முக்கிய அணு ஆயுதப் போர் குறித்த நிகழ்வுகளின் அடிப்படையில், பெரிய முள் மட்டும் இடம் மாறிக் கொண்டே இருக்கிறது.

1952 ஆம் ஆண்டின் இறுதியில், அமெரிக்கா, முதன்முதலாக தெர்மோ நியூக்கிளியர் கருவியைச் சோதனை செய்ததால், 1953ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கிலி ஏற்படுத்தும் விதமாக, கடிகாரம் 11:58 என்று காண்பித்தது. அதாவது நள்ளிரவிற்கு இன்னும் இரண்டே நிமிடங்கள்! 1974ஆம் ஆண்டு இந்தியா அணு ஆயுதச் சோதனை நடத்திய போதும், 1965இல் இந்தியா – பாகிஸ்தான் யுத்தம் நிகழ்ந்த போதும், இதன் முட்களில் மாற்றங்கள் ஏற்பட்டன.

2017 ஆம் ஆண்டு ட்ரம்ப் பதவியேற்றபோது, நள்ளிரவிற்கு இன்னமும் இரண்டரை நிமிடங்கள் என்று காண்பித்தது. இதனிடையே, ட்ரம்ப் மற்றும் வடகொரிய அதிபர்கள் அணு ஆயுதங்கள் ஏவும் பட்டனை அழுத்திவிடுவேன் என்று மாறி மாறிப் பொறுப்பின்றிப் பேசி வருவதாலும், அதிர்ச்சி ஏற்படுத்தும் வகையில் புவி வெப்பமயமாகிக் கொண்டு வருவதாலும், தற்போது, கடிகாரத்தில் கூடுதலாக அரை நிமிடம் குறைந்து மணி 11:58ல் நிற்கிறது. அதாவது, இன்னும் இரண்டு நிமிடத்தில் உலகம் அழியும் என்ற உருவகச் செய்தியை சொல்லி, அது நம்மை எச்சரிக்கை செய்கிறது.

கிட்டத்தட்ட, 65 ஆண்டுகளுக்குப்பிறகு, இந்த 2018 ஆம் வருடம் தான், அழிவின் கடிகாரம் 11:58 என்ற அபாயகரமான நேரத்தைக் காண்பித்திருக்கிறது. இது நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மிக மோசமான காலகட்டம் என்பதை வெளிப்படையாகவே அந்தக் கடிகாரம் நமக்குக் கூறுகின்றது.

### அணு ஆயுத அழிவு மட்டும்தானா?

முதலில் அணு ஆயுதத்தால் ஏற்படப்போகும் அழிவு குறித்து மட்டும் எச்சரிக்கை செய்ய இது நிறுவப்பட்டது. அதாவது அந்தக் கடிகாரத்தின் முள் நகரவேண்டுமென் றால், அதற்கு அணு ஆயுதப் போர் மட்டுமே காரணியாக இருக்க முடியும். ஆனால், பின்னாளில், மேலும் சில வழிகளில் மனிதக் குலத்திற்கு ஆபத்துகள் காத்திருக்கின்றன என்பதை உணர்ந்தனர். இதனால், 2007 ஆம் ஆண்டு புவி வெப்பமயமாதல், அணுக் கழிவு, மனிதக் குலத்திற்கு பாதிப்பு ஏற்படுத் தும் அறிவியல் முயற்சிகள் எனக் கூடுதல் அளவுருக்கள் (Parameters) சேர்த்துக் கொள்ளப்பட்டன.

### அணு ஆயுதப் பேரழிவு உலக அரங்கில் இதற்கு மதிப்பு எப்படி?

டூம்ஸ்டே குளாக் (Doomsday Clock) என்ற இந்த இருக்கு இல்லை கடிகாரம், ஓர் அணு ஆராய்ச்சி பத்திரிகையால் 70 ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்டாலும், இன்று வரை அதற்கு உலக அளவில் தனி மதிப்பு உண்டு.

இதைப் பார்க்கும் போது எல்லாம் அணு ஆயுதங்கள் குறித்த பயமும், அது உலகையே அழித்துவிடும் என்ற எண்ணமும் உலகத் தலைவர்கள் அனைவருக்கும் தோன்றுகிறது. இதற்காகவே, பாதுகாப்புக்காக வடிவமைக்கப்பட்ட அணு ஆயுதங்கள் தவறாக கூட வெடித்து விடக் கூடாது என்ற முனைப்புடன் செயல்படுகின்றனர் என்று பல்வேறு அமைப்புகள் இதை வரவேற்றுள் ளன. ★

ஒவ்வொரு நாடும் அணு ஆயுதங்களை உருவாக்கத் தொடங்கும் போது அந்த அழிவு நாள் நம்மை மேலும் நெருங்குகிறது என்ற எண்ணம் உருவாகாமல் இல்லை. அதை மக்களுக்குத் தெரியப் படுத்துவதே இந்த அழிவின் கடிகாரத்தின் முக்கியப் பணி.





தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமா கின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



## புலிகளின் நேரடித் தலையீடு

### பெரியோர்களும் கை விட்டனர்

புலிகள் எங்களோடு முரண்படத் தொடங்கியிருந்த அக்காலத்தில் எங்களோடு தொடர்பு வைத்தால் புலிகள் தங்களையும் கண்டிக்கக் கூடும் என நினைந்து கழகத்தோடு நெருங்கியிருந்த பலர் எங்களை விட்டு விலகத் தொடங்கினர். அந்த அனுபவம் மறக்க முடியாதது. எங்களின் மீது அளவற்ற அன்பு கொண்டு, இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர் ஐயாவும், கலைப் பேரரசர் ஏ.ரி. பொன்னுத்துரை ஐயா அவர்களும், ஓரிரண்டு ஆண்டுகள் கம்பன் கழகத்திலேயே, எங்களோடு வந்து தங்கியிருந்தனர். அது எங்களது பொற்காலம். புலிகள் எங்களோடு முரண்படத் தொடங்கியதும் அவர்களும் அவர்கள் குடும்பத்தாரும் சற்றுப் பயந்து போயினர். சில காரணங்களை உருவாக்கிச் சொல்லி அப்பெரியார்களும் தங்கள் வீடுகளுக்கே திரும்பிச் சென்றபோது, உண்மையில் மிகவும் மனம் வருந்திப் போனோம்.

## இராணுவம் புகுந்தது

நாம் பேசுவதை நிறுத்தி அடுத்தடுத்த வாரங்களில், இராணுவம் வேகமாய் முன்னேறியது. அப்போது கந்தசஷ்டி விரதம் தொடங்கியிருந்தது. அம்முறை விரதமேயிருந்து அறிந்திராத மணிமாறனையும், விரதமிருக்கச் செய்திருந்தேன். கந்தசஷ்டி விரதக் கடைசி நாள் அன்று, அவர்களுக்காகப் பாறணைச் சமையல் சமைத்திருந்தேன். சூரன் போர் முடிந்து அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், இராணுவம் யாழ்ப்பாணத்திற்குள் நுழையப் போவதால், எல்லோரையும் உடனே யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்படும் படி புலிகள் ஒலிபெருக்கியில் அறிவிக்கத் தொடங்கினார்கள். ஊரே கலவரப் பட்டுப் போனது. அப்போது எங்கள் கோட்டத்தில் கிட்டத்தட்ட முப்பது நாற்பது பேர் தங்கியிருந்தனர். சண்டை நெருங்கியதும் வித்தகர் ஐயா குடும்பத்தோடு கோட்டத்தில் வந்து தங்கினார். அதை விட பிரசாந்தன் குடும்பத்தார், குமாரதாசன் குடும்பத்தார், ரத்தினகுமார் குடும்பத்தார் என இன்னும் பலர் கழகத்தில் சரணடைந்திருந்தனர். இந்நிலையில் புலிகள் ஊரை விட்டுப் புறப்படச் சொல்ல, என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தோம்.

* * *

### நிற்பதா? செல்வதா?

நாமும் யாழ்ப்பாணத்தை விட்டுச் செல்வதா? அல்லது கோட்டத்திலேயே தங்குவதா? என்று பெரிய குழப்பம் ஏற்பட்டது. இராணுவம் 'ஷெல்' மழை பொழியத் தொடங்கியிருந்தது. 'ஷெல்' விழுந்து இறந்து போன தன் பிள்ளையைத் தூக்கிய படி, திருநெல்வேலி காளி கோயிலடியிலிருந்து, நல்லூர் நோக்கி ஓடி வந்த ஒரு தாயின் கதறல், இன்றும் என் நெஞ்சை உலுக்குகிறது. என்ன செய்வதென்று தெரியாமல் உதயன் சரவணபவனிடம் சென்று ஆலோசிப்போம் என முடிவு செய்து, ரத்தினகுமாரின் காரில் இருவரும் சரவணபவன் வீடு சென்றோம். அங்கும் பெரும் பரபரப்பாயிருந்தது. அவர்கள் வீட்டருகில் 'ஷெல்' விழுந்து பத்திரிகையாளர் குருநாதனின் மனைவி காயப்பட்டதால், அங்குள்ளவர்கள் அந்தரப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அங்கு புலிகளின் ஆதரவாளரான டாக்டர் ஜெயகுலராஜாவும் நின்றார். யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்படுவதா? என அவர்களோடு நாம் ஆலோசித்த போது நில் என்றோ செல் என்றோ, அவர்களாலும் சொல்ல முடியவில்லை. மனக் குழப்பத்துடன் வெளியே வந்தோம். அங்கே ஓர் ஆச்சரியம் காத்திருந்தது.

* * *

### மீண்டும் குரங்கு வந்தது

சரவணபவன் வீட்டிற்குள் நாம் நுழைந்த போது, அங்கு நடந்து கொண்டிருந்த பரபரப்பால், கார் கதவுக் கண்ணாடியை மூடாமலே நாம் உள்ளே சென்றிருந்தோம். வெளியே நாம் வந்து பார்த்த போது, திறந்திருந்த அக் கண்ணாடி யன்னலினூடாக உள்ளே நுழைந்த பெரிய கருநிறக்குரங்கொன்று 'டிறைவர் சீற்றில்' உட்கார்ந்து கொண்டு, காரில், 'ஸ்ரியறிங்கை' பிடித்துச் சுழற்றிக் கொண்டிருந்தது. எமக்கு மெய்சிலிர்த்துப் போனது. ஆஞ்சநேயர் ஊரை விட்டுப் போகச் சொல்கிறார் என, உணர்ந்து கொண்டோம்.

* * *


### யாழை விட்டுப் புறப்பட்டோம்

உடனே எல்லாரையும் தயார்ப்படுத்தி பகுதி பகுதியாகப் புறப்படத் தொடங்கினோம். இரவு நேரம் கடும் இருட்டு, ரத்தினகுமாரின் காரில் நான்கே பேர் தான் போகலாம் முதிய வர்களான இரத்தினகுமாரின் அம்மா, அப்பா முழங்கால் நோவுள்ள குமாரதாசனின் அப்பா, முதியவரான வித்தகர் ஐயா, கால் நடக்க மாட்டாத சிவராமலிங்கம் மாஸ்ரர், படுக்கையாய்க் கிடந்த பிரசாந்தனின் தாத்தா, பாட்டி எனப் பலரும் எம்மோடு இருந்தனர். இவர்களில் யாரைக் காரில் ஏற்றுவது, பெரிய மனக்குழப்பம் ஏற்பட்டது. அப்போது நாங்கள் மூன்று நாய்களையும், ஐந்து முயல்களையும் வளர்த்து வந்தோம். அவற்றை விட்டுப் போகவும் மனம் ஒப்பவில்லை. ரத்தினகுமார் கார் ஓட்ட நான் அருகிலிருந்து மூன்று நாய்களையும் பிடித்துக் கொண்டேன். முயல்களை 'டிக்கி' யில் போட்டுக் கொண்டோம். பின் 'சீற்றில்' படுக்கையாய்க் கிடந்த பிரசாந்தனின் தாத்தாவையும், பாட்டியையும் பாரிசவாதத்தால் பாதிக்கப் பட்டிருந்த ரத்தினகுமாரின் அம்மாவையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்டோம். அதிலும் பலர் என்னைக் குறை சொன்னதாய் அறிந்தேன். ரத்தினகுமாரின் அப்பாவை ஏற்றவில்லை என்றும், வித்தகர் ஐயாவை ஏற்றவில்லை என்றும், குமாரதாசனின் அப்பாவை ஏற்றவில்லை என்றும், சிவராமலிங்கம் மாஸ்ரரை ஏற்றவில்லை என்றும், பலரும் என்னைத் தூற்றினார்களாம். கார் ஓட்ட ரத்தினகுமார் அவசியமாய்த் தேவைப்பட்டார். நாய்களை அவற்றோடு பழகிய என்னால் மட்டுமே வைத்திருக்க முடியும் மற்றைய மூவரும் நடக்கவே முடியாத நோயாளிகள். இந்நிலையில் அதைத் தவிர வேறு தேர்வு எமக்கு இருக்கவில்லை. அப்போது நான் செய்த நீதி சரியானது தான் என, இறைவன் அங்கீகரிப்பான் என்ற நம்பிக்கை, இப்போதும் எனக்குண்டு.

* * *

### நாய் படாப்பாடு

நடக்க முடியாத வயோதிபர்கள், குழந்தைகள், நாய், பூனை, ஆடு, மாடு என அனைத்தையும் காவிக் கொண்டு, யாழ்ப்பாணத்தை விட்டு எட்டு லட்சம் மக்கள் சாவகச்சேரி நோக்கி, சாரி சாரியாக நடக்கத் தொடங்கியிருந்தனர். சனக் கூட்டத்தால் பத்தடி நடக்க அரை மணி நேரம் எடுக்கும் சூழ்நிலை, எங்கு போகிறோம் என்ற இலக்கில்லாத பயணம், நடைக்களையும், சன வெக்கையும், இருட்டும், மரண பயமுமாக மக்கள் நடந்து கொண்டிருந்தனர். எங்களைப் போல ஒரு சில பேரே வாகனத்தில் சென்றோம். வாகனங்களும் அங்குலம் அங்குலமாய்த்தான் நகர வேண்டியிருந்தது. பெற்றோல்



உன்னைச் சரணடைந்தேன்

கிடைக்காததால், வாகனங்கள் மண்ணெண்ணெயில் ஓடிய காலமது. அதனால் திடீர் திடீரென வாகனங்கள் நின்றுவிடும். அங்ஙனம் நின்றவாகனங்களை வீதிக் கரைகளில் இருந்த பள்ளங்களுக்குள் தள்ளி விட்டு, சனக் கூட்டம் முன்னேறிக் கொண்டிருந்தது. எங்களுக்குப் பெரும் பதற்றம். கார் இஞ்சிஞ்சாக நகர்கிறது. கார் ஏறிப் பழகாத நாய்கள் ஒரு பக்கம் பிராண்டுகின்றன. 'டிக்கி' க்குள் இருக்கும் முயல்களுக்குக் காற்றுப் போதுமா? என மனதுக்குள் குழப்பம். பின் சீற்றில் கிடத்தப்பட்ட பிரசாந்தனின் தாத்தா, வசதியில்லாத இருக்கையில் கிடத்தப்பட்டதால் உடம்பு வலிக்க குழறியபடி இருந்தார். பிரசாந்தனின் பாட்டிக்கு ஒன்றுக்கு வந்துவிட உடனே தன்னை இறக்கும் படி அவர் கத்தியபடி இருந்தார். இத்தனை 'ரென்ஷனையும்' தாங்கிக் கொண்டு மூன்று, நான்கு மணிநேரம் கார் ஓடி, சாவகச்சேரி, கவிஞர் கல்வயல் குமாரசாமி வீட்டடிக்கு வந்து சேர்ந்தோம். சிறுநீர் கழிக்க அவசரப்பட்ட பிரசாந்தனின் பாட்டியை அவசர அவசரமாகக் கீழ் இறக்க, தாங்க முடியாமல் என் கால்களிலேயே அவர் சிறுநீர் கழித்தார். அன்று நான் பட்ட பதற்றத்தை இன்று நினைக்கவும் பயமாயிருக்கிறது.

* * *

### இருப்பிடம் கிடைத்தது

நாங்கள் சென்று சேர்ந்த ஒரிரு மணித்தியாலத்தின்பின், மற்றவர்களும் வந்து சேர்ந்தனர். கவிஞர் கல்வயல் மனமுவந்து எங்களை வரவேற்றார். எல்லோரும் வந்து சேர, அத்தனை பேருக்கும் எப்படி சமையல் சாப்பாடு என, அவர் குழம்பியது தெரிந்தது. ஒரு மாதிரியாக அவர் வீட்டிற்கு முன் வீட்டில் நாங்களும், வந்தோரில் ஒரு தொகுதியினரும் தங்க இடம் கிடைத்தது. அதற்கடுத்திருந்த அயல் வீட்டில் சிவராமலிங்கம் மாஸ்ரர் குடும்பத்தினருக்கும் மற்றொரு தொகுதியினருக்கும் தங்க இடம் கிடைத்தது. கல்வயலாரை நிம்மதிப் படுத்தினோம். நாம் அங்கிருக்கும் வரையும் அவரது ஆதரவு எமக்கு இருந்தது.

* * *

### அகதி வாழ்வில் ஆனந்த அனுபவம்

ஒரு வயோதிபத் தம்பதியினரின் வீட்டிலேயே நாம் தங்கியிருந்தோம்.

**கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 92**

மிகப் பெரிய மனதுள்ள மனிதர்கள் அவர்கள். ஒழுக்க சீலர்கள், தாங்கள் ஓர் அறையை மட்டும் எடுத்துக் கொண்டு வீடு முழுவதையும் எங்களுக்குத் தந்தனர். திண்ணையில் ஆண்களும், அறைகளில் பெண்களுமாகச் சமாளித்துத் தங்கினோம். கிட்டத்தட்ட ஒரு மாதம் அளவில் அங்குதங்கியிருந்தோம். அது அகதி வாழ்க்கையாகவே இல்லை. ஆனந்த வாழ்க்கையாக இருந்தது. யாழில் தூரத்தூர இருந்த அத்தனை பேரும் வேலையில்லாமல் அருகருகே இருந்தபடியால் தினமும் கூத்தாடிக் குதூகலித்தோம். சாவகச்சேரியில் இருந்த எங்கள் நண்பன் மார்க்கண்டுவும் எமக்குப் பெருந்துணையாக இருந்தார். இரவில் எல்லோரும் ஒன்று கூடி திருக்குறள் படிப்போம். திருமுருகாற்றுப்படை பாராயணம் செய்வோம். கிடைத்ததை வைத்துப் பொதுச் சமையல் செய்வோம். பாண் கிடைப்பது முயல்க் கொம்பாய் இருந்த வேளை அது. எழுத்தாளர் செங்கை ஆழியான் அப்போது அரச பதவியில் இருந்தார். அப்பதவியின் செல்வாக்கை வைத்து எங்களுக்காக பதினைந்து இருபது இறாத்தல் எனப் பாண் கொண்டு வந்துதருவார். எதிர்காலம் பற்றிய கேள்வி சூனியமாயிருக்க, வாழ்க்கையைத் திளைக்கத் திளைக்க அனுபவித்தோம்.

* * *

### யோகி சந்தித்தார்

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த யோகி, பாப்பா ஆகியோர் சாவகச்சேரியில் நாம் இருந்த வீட்டிற்கு தனித்தனியாக வந்து என்னைச் சந்தித்தனர். இயக்கத்தில் மதிப்பான இடத்தில் இருந்த யோகி, பதவியிலும், மதிப்பிலும் இறக்கப்பட்டிருந்தார். அவர் இந்துக் கல்லூரி பழைய மாணவன். நாங்கள் படிக்கும் போது மாணவ முதல்வராய் இருந்தவர். அழகன், ஆளுமையாளன், அவரது தம்பி குகன் (பொன்னம்மான்) இயக்கத்தில் இருந்து ஒரு குண்டு வெடிப்பில் இறந்தார். லண்டனிலிருந்த யோகி படிப்பையும், பதவியையும் துறந்து விட்டு, தேசத்திற்காகப் போராட வந்தவர். அதனால் எனக்கு அவர் மேல் எப்போதும் மதிப்பு உண்டு. தனிப்பட்ட ரீதியில் என்னைத் தேடி வந்த யோகி, இயக்கத்திற்கும் எங்களுக்குமான முரண்பாடுகள் பற்றி, மனம் விட்டுப் பேசினார். இயக்கம் கருத்துச் சுதந்திரத்தை அனுமதியாதது பற்றிக் கவலைப்பட்டார். அந்த அளவில் அவரது சந்திப்பு நிறைவுற்றது.

* * *

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir





# கண்ணீர் வடிக்கும் கொங்கோ மக்கள்!

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில் நிகழும் வன்முறைச் சம்பவங்கள், படுகொலைகள் அதிர வைக்கின்றன. 1998 முதல் நடந்துவரும் உள்நாட்டுப் போரில் இதுவரை 54 லட்சம் பேர் இறந்துள் ளனர். மாதந்தோறும் 45,000 பேர் கொல்லப்படுகிறார்கள். கலகக்கும் பல்கள்இடையிலான ஆயுதமேந்திய சகோதர யுத்தமும் உள்நாட்டுப் போரும் உலகின் கவனத்தைப் பெரி தாக ஈர்க்கவேயில்லை.

அதிபர் ஜோசப் கபிலாவின் பத விக் காலம் முடிந்தும் இராணுவத்தின் துணையுடன் ஆட்சியில் நீடிக்கிறார். அவர் பதவி விலக வேண்டும் என்று கொங்கோ மக்கள் போராடிவருகிறார் கள். மக்கள் போராட்டத்தைக் கடுமை யாக ஒடுக்கும் கபிலா, தன்னைப் பதவியிலிருந்து இறக்க வெளிநாட்டு சக்திகளின் உதவியுடன் சதி நடக் கிறது என்கிறார்.

இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு, அதிகம் பேரைப் பலிவாங்கிய ஒரு போர் அதுவும் உள்நாட்டுப் போர் நடப்பது கொங்கோவில்தான். 200 க்கும் மேற்பட்ட பழங்குடி இனங் கள் வாழும் கொங்கோ இயற்கை வளங்கள் மிக்க நாடு. பல்வேறு நாடுகளுக்குக் கனிம வளங்களையும் இயற்கை வளங்களையும் ஏற்றுமதி செய்கிறது.



நிமோனியா, வயிற்றுப்போக்கு, மலேரியா, ஊட்டச்சத்துக் குறைவு போன்றவற்றால் இறந்தவர்களே அதி கம். இந்த நோய்களுக்கு மருந்துகளும் மருத்துவமனைகளும் இருந்தும், இடைவிடாத சண்டைகளால் மக்களால் சிகிச்சைக்குச் செல்ல முடியாததாலும் அகதி முகாம்களின் சுகாதாரக் கேடு களாலும் இறக்கின்றனர். 80 வீதம் பேர் நிம்மதியாக வீட்டில் தங்க முடி யாமல் அடிக்கடி பக்கத்து நாடுகளுக் குத் தப்பிச்செல்கின்றனர். அதே வேளையில், வேலை தேடி பிற நாடு களைச் சேர்ந்தவர்கள் கொங்கோவுக் குள் வருகின்றமையும், அங்குள்ள சட்ட விரோத கனிமச் சுரங்கங்களில் வேலை செய்கின்றமையும் தொடர்கிறது!

## இடைவிடாத சண்டை; 8வயதுப் பிள்ளைக்கும் பலாத்காரப் போர் பயிற்சி

பக்கத்தில் உள்ள நாடுகள் மட்டு மல்லாமல் தொலைவில் உள்ள பணக் கார நாடுகளும் ஆளுக்கொரு இனக் குழுவைக் கூலிக்கு அமர்த்தி, இயற்கை வளங்களைக் கொள்ளை யடிக்கின்றன. தடுப்பவர்கள் தாக்கப் படுகிறார்கள். தாக்குவதும் தாக்கு

> கொங்கோவின் மொத்த மக்கள் தொகையில் 19வீதம் பேர் 18 வயதுக்கும் குறைவான குழந் தைகள். அவர்களில் 47வீதம் பேர் ஊட்டச்சத்துக் குறை வாலும் தொற்று நோய் களாலும் அற்ப ஆயுளில் மடிகின் றனர். உலக சுகாதார நிறுவனம், மனித உரிமைகள் அமைப்பு ஆகியவை மன்றாடிக் கேட்டும் கூட கொங்கோ வுக்குக் கைகொடுக்க யாரும் இல்லை.

தலில் மடிவதும் கொங்கோ மக்கள் தான் என்பது வேதனை.

முதலில் பெல்ஜியத்தாலும் பிறகு பிரெஞ்சுக்காரர்களாலும் காலனி யாகப் பிடிக்கப்பட்ட நாடு இது. மக்கள் தொகை 7.8 கோடி. நிலத்தின் பரப்பளவு 23,45,409 சதுர கிலோ மீற்றர். மோங்கோ, லூபா, கோங்கோ (பண்டுகள் என்றும் இக்குழுக்களை அழைக்கின்றனர்) மாங்பேடு, அசாண்டே என்பவை மிகப் பெரிய இனக்குழுக்கள். மொத்த மக்கள் தொகையில் இவர்கள் மட்டும் 45வீதம். மக்களில் 80 வீதத்தவர் கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் 10வீதம் எஞ்சியவர்கள் பூர்வ குடிகள்.

நிலையான, நல்லரசு இல்லை. பழங்குடிகளின் தலைக்கட்டுகளுக்கு இடையில் ஒற்றுமை இல்லை. ஆயுத மேந்திய அராஜக கும்பல்கள் உதவி யுடன் இயற்கை வளங்களைக் கொள்ளையடிப்பதிலேயே குறியாக இருக்கும் இனக் குழுக்கள். அவர்களுக் குத் தூபம்போடும் பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள். இப்படிப் பல் வேறு காரணங்களால் கொங்கோவில் ரத்த ஆறு ஓடுகிறது.



கொங்கோவின் மொத்த மக்கள் தொகையில் 19வீதம் பேர் 18 வயதுக் கும் குறைவான குழந்தைகள். அவர் களில் 47வீதம் பேர் ஊட்டச்சத்துக் குறைவாலும் தொற்று நோய்களாலும் அற்ப ஆயுளில் மடிகின்றனர். உலக சுகாதார நிறுவனம், மனித உரிமைகள் அமைப்பு ஆகியவை மன்றாடிக் கேட் டும்கூட கொங்கோவுக்குக் கை கொடுக்க யாரும் இல்லை.

கோரைப்புற்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட குடிசைகளில் அகதி கள் தங்கியிருக்கின்றனர். அகதி முகாம்களில் சுகாதாரம் இல்லை, பாது காக்கப்பட்ட குடிதண்ணீர் இல்லை, சத்தான உணவு ஏன் உணவே இல்லை. குளிருக்குப் போர்த்திக்கொள்ள கம்பளி ஆடைகளோ, வெயில்



காலத்தில் காத்துக்கொள்ளப் பருத்தி ஆடைகளோ கிடையா. படிப்ப தற்கும் வசதியில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாகப் பாதுகாப்பும் இல்லை. 8 வயதுக்கு மேற்பட்ட ஆண் குழந்தைகளை அந்தந்த இனக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் கடத்திச் சென்று, போரில் ஈடுபட ஆயுதப் பயிற்சி அளித்து சேர்த்துக் கொள்கின்றனர். 10 வயதுக்கும் மேற்பட்ட பெண் குழந்தைகளைக் கடத்திச் சென்று பாலியல் ரீதியாகத் துன்புறுத்து கின்றனர். அடிமைகளாக நடத்து கின்றனர்.

கடந்த டிசெம்பர் மாதம் ஐ.நா. சபை அனுப்பிய அமைதிப் படை யைச் சேர்ந்த 14 பேர் ஆயுதம் தாங்கிய குழுக்களால் கொல்லப்பட் டனர். அது தொடர்பான செய்திகள் ஊடகங்களில் பேசப்பட்டன. அதைத் தாண்டி கொங்கோவின் நிலைவரம் யாருடைய கவனத்திலும் இப்போது இல்லை. ★



# நடிகர்கள் நாடாள வரலாமா? வரலாமே!

# அரசியலில் 'நடிப்பு' நழுவல்தான் தப்பு!!

அ.குமரேசன்,
(மூத்த பத்திரிகையாளர்)

புகழ்பெற்ற திரைப்பட நடிகர்கள் அரசியல் கட்சி தொடங்குவதாக அறிவிக்கின்றபோதும், அதற்கொரு முன்னுரையாக அரசியல் கருத்துகளைக் கூறுகின்ற போதும், உறுப்பினர் பதிவு, ரசிகர்களுடன் சந்திப்பு போன்ற சில நடவடிக்கைகளில் இறங்குகின்ற போதும் இந்தக் கேள்வி எழுப்பப்படுகிறது. தொலைக்காட்சி விவாதங்களில் பங்கேற்கிற பல்வேறு கட்சிகளின் பேச்சாளர்கள், நேரடியாக எந்த நடிகரின் அரசியல் வருகையையும் எதிர்ப்பதில்லை. ஆனால், திரை நட்சத்திரங்களின் வருகையால் தங்கள் கட்சிகளுக்கு ஏற்படக்கூடிய பின்னடைவு பற்றிய கவலையை வெளிப்படுத்துகிறார்கள்.

நடிகர்களாக இருந்து அரசியலுக்கு வந்த சிலரது நடவடிக்கைகளால் அதிருப்தியடையும் மக்களில் ஒரு பகுதியினரும் தங்கள் ஆட்சேபத்தை வெளிப்படுத்துகிறார்கள். ஆனால், அது அவர்களுடைய தனிப்பட்ட குறைபாடாக எடுத்துக்கொள்வதா, திரையுலகிலிருந்து வந்தாலே இப்படித்தான் இருப்பார்கள் என்று முடிவுசெய்வதா?

நடிகர் ரஜனிகாந்தின் அரசியல் பிரவேச அறிவிப்புகள் பற்றி மத்திய ஆளுங்கட்சியினர் அடக்கி வாசிக்கிறார்கள். அதேசமயம், நடிகர் கமலஹாசனின் அரசியல் தொடர்பான அறிவிப்புகளைக் கடுமையாகச் சாடுகிறார்கள். அதற்குக் காரணம், ரஜனிகாந்தின் ஆன்மிக அரசியல் இவர்களும் தூக்கிப் பிடிக்கிற மதவாத அரசியலுடன் அனுசரித்துப்போகலாம். கமல்ஹாசன் முன்வைக்கும் விமர்சனங்கள் அதற்கு முட்டுக்கட்டையாகலாம் என்ற கணிப்புதான்.

### திரைப் புகழைத் தாண்டி...

ஒருகாலத்தில், சட்ட மன்றத்தில் பிரதான எதிர்க்கட்சி என்ற இடத்தைப் பெறும் அளவுக்கு வளர்ச்சிபெற்றது விஜயகாந்தின் தே.மு.தி.க. அதன் பின்னணியில் அவரது செல்வாக்குக்கு மையமான இடம் உண்டு. அக்கட்சிக்கு ஏற்பட்ட சரிவின் பின்னணியிலும் அவரது செயல்பாடுகளுக்கே மையமான இடம்.

சரத்குமார், கருணாஸ் உள்ளிட்டோர் தொடங்கிய கட்சிகள் அந்தந்த வட்டார அளவில், சமூகப் பின்னணியோடு அடையாளம் பெற்றவை. சட்ட மன்றத்துக்குள் நுழையவைத்த அந்த அடையாளத்தின் பின்னே மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் செல்வாக்கு, சாதி வாக்குகளைக் கைப்பற்றும் கணக்கு ஆகியன இருந்தன.



இவர்களுக்கெல்லாம் நம்பிக்கை தரும் விஷயமாக இருப்பது, எம்ஜிஆர் தனிக்கட்சி தொடங்கி அசைக்க முடியாத சக்தியாக உருவெடுத்த வரலாறுதான். உண்மையில், எம்ஜிஆரின் அரசியல் பிரவேசமும் வெற்றிகளும் திடீரென நிகழ்ந்த அற்புதங்கள் அல்ல. தொடக்கத்திலிருந்தே திமுகவில் அவருக்கு அளிக்கப்பட்டிருந்த இடம், தனது திரைப்படங்களில் அவர் திட்டமிட்டுப் புகுத்திய அரசியல் கருத்துகள் ஆகியவற்றின் தாக்கம் மிக முக்கியமானது.

அவரது ஆதரவாளர்களாகத் திரண்டிருந்த இளம் ரசிகர்கள் கூட்டம், தேர்தல் வெற்றிக்குப் பெரிய அளவில் உதவும் என்று அண்ணா மதிப்பிட்டது 1967 தேர்தலில் நிதர்சனமானது. தி.மு.கவில் ஜெயலலிதா மிகப் பெரிய ஆளுமையாக உருவெடுத்ததும் வெறும் சினிமா புகழால் அல்ல. கட்சிக்குள் அவருக்கு எம்.ஜி.ஆர். அளித்த முக்கியத்துவம், பல்வேறு ஏற்றத்தாழ்வுகளை எதிர் கொண்டு அவர் நடத்திய அரசியல் பயணம் ஆகியன இருந்தன. தற்போது அக்கட்சி சந்திக்கும் சீர்குலைவான நிலைக்கும் அவர் கை செயலானவையல்ல. சமூநீதி நியாயங்கள் இங்கு வேரூன்றியிருப்பதிலும், மதவாத அரசியல் இங்கு கால் பதிக்க முடியாத சூழல் நிலவுவதிலும் அன்றைய திரைப்படங்களும் குறிப்பிடத்தக்க தாக்கம் செலுத்தியிருக்கின்றன.

### நிலைப்பாடு முக்கியம்

மக்களிடையே பெயர் பெற்றுள்ள கலையுலகினர் அரசியல், சமூக அக்கறை

யாண்ட வழிமுறைகள் ஒரு காரணம் என்பது வேறு விஷயம்.

### அரசியலில் கலைஞர்கள்

தமிழக அரசியல் வரலாற்றில் எப்போதுமே கலைஞர்கள் களமாடி வந்திருக்கிறார்கள். நாட்டின் விடுதலைப் போராட்ட அத்தியாயங்களில் நாடகக் கலைஞர்கள் மகத்தான பங்களித்திருக்கிறார்கள். 'வள்ளி திருமணம்' நாடகத்தில், தினைப்புனம் காவலுக்கு வரும் வள்ளி, வெள்ளைக் கொக்குகளா போ போ என்று பாடியது, அந்தக் காலத்தில் மிக முக்கியமான அரசியல் வெளிப்பாடு.



முருகனாக நடித்த விஸ்வநாததாஸ் மேடையை விட்டு இறங்கியதும் கைதுசெய்யப்பட்டு சிறைக்குக் கொண்டுசெல்லப்படுவது வழக்கமாக இருந்தது. மக்களிடை யே பரவும் அந்தச் செய்தி போராட்டத்துக்கு விசையூட்டியது.

வில்லன் பாத்திரங்களில் நடித்த எம்.ஆர்.ராதா திரைப்படங்களில் பேசிய அரசியல், சமூக நையாண்டிகளுக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. அதைப் பார்த்த பெரியார், எனது பேச்சுகளால் ஏற்படும் தாக்கத்தை விடவும் உங்கள் வசனங்களால் நல்ல விளைவு ஏற்படும் என்று பாராட்டினார். எழுத்தாளர் கல்கி எழுதிய நாவலை அடிப்படையாகக் கொண்ட 'தியாகபூமி' என்ற திரைப்படம், ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் பேசியது. சாதியத் தீண்டாமைக்கு எதிராகவும் பேசியது. அவ்வாறு பேசியதில் அரசியல் அக்கறை இருந்தது. பல ஆண்டுகளாக அந்தப் படம் முடக்கப் பட்டிருந்ததிலும் அரசியல் உள்நோக்கம் இருந்தது.

விடுதலைக்குப் பிறகும் தமிழகச் சூழலில் திராவிட இயக்க அரசியலைக் கொண்டு சென்றதில் திரைப்படங்களுக்குத் தலையாய இடம் உண்டு. திரைப்படங்களுக்கு உரையாடல் எழுதிய அண்ணா, கலைஞர் என ஒரு பட்டாளமே உருவானதும், இயக்கத்தில் அவர்கள் தலைமை இடங்களுக்கு வந்த தும் தற்

களை வெளிப்படுத்துவது நல்லதுதான். எந்தக் கருத்தையும் வெளிப்படுத்தாமல் இருப்பதுதான் கவலைக்குரியது. அறிக்கை விடுவதற்கும் போராட்டம் நடத்துவதற்கும் வேறு சிலர் இருக்கிறார்கள். அதை நாம் செய்ய வேண்டாம் என்று ரஜனி அறிவித்தது மிகப்பெரிய நழுவல் உத்தி.

'நாளை நமதே' பயணத்தைத் தொடங்கவுள்ள கமல்ஹாசனாவது கருத்து என ஒன்றைச் சொல்லி ஆதரவையும் எதிர்ப்பையும் எதிர் கொள்கிறார். மன்றத்துக்கு என்று ஓர் இணையத்தளம் தொடங்கியுள்ள நடிகர் விஜய், பொதுவெளியில் விவசாயிகள் பிரச்சினை உள்ளிட்ட தனது விமர்சனங்களை முன்வைக்கிறார். நடிகர் விஷால் தனது விமர்சனங்களை வெளிப்படுத்துகிறார். நடிகர்களின் ரசிகர் மன்ற அலுவலகங்களில் உறுப்பினர் பதிவு, வட்டார அமைப்பு ஏற்பாடுகள் முதலியவை பராமரிக்கப்படுவதைக் கவனித்திருக்கிறேன். தலைவர் எப்போது வேண்டுமானாலும் அரசியலுக்கு வரலாம், அப்படி முடிவெடுப்பாரானால் நாங்கள் தயாராக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு என மன்றங்களின் பொறுப்பாளர்கள் கூறினார்கள். அந்த வகையில் நடிகர்களின் வருகையில் ஒரு தொடர்ச்சி இருக்கத்தான் செய்கிறது.

### அரசியல் அக்கறை

அதேசமயம், திரைப்படங்களின் கருத்துச் சுதந்திர ஒடுக்குமுறை என வருகிறபோதுகூட திரைக் கலைஞர்களில் பெரும்பாலானோர் எதிர்ப்புப் போராட்டங்களுக்கு வருவதில்லை அரசியல் பிரவேசம் பற்றிப் பேசிவரும் நடிகர்கள் உட்பட. அது அந்தந்தப் படங்கள் சம்பந்தப்பட்டவர்களின் பிரச்சினை என்பதாக ஒதுங்குகிற போக்குதான் இருக்கிறது. இதை ஆரோக்கியமற்ற அரசியலாகத்தான் பார்க்க வேண்டியிருக்கிறது.

அரசியல் என்பது யாருக்கோ நேர்ந்துவிடப்பட்ட ஒன்றல்ல. முன்பொரு முறை கலை இலக்கிய இரவு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட நடிகர் நாசரிடம், குறிப்பிட்ட ஒரு பிரச்சினை தொடர்பாகப் பார்வையாளர்கள் கேள்வியெழுப்பினர். ஏன் இதை ஒரு நடிகனைப் பார்த்து மட்டும் கேட்கிறீர்கள்? ஒரு விஞ்ஞானியையோ, ஒரு பேராசிரியரையோ, ஒரு பத்திரிகையாளரையோ கேட்க வேண்டாமா? என்று கேட்டார் நாசர். வெறும் உணர்ச்சிகரமான அறிவிப்புகளைப் பார்த்து அரசியல் முடிவுகளுக்கு வராதீர்கள், ஆழமாகச் சிந்தித்து விவாதித்து முடிவெடுங்கள் என்பதே அவரது நிலைப்பாடு.

எல்லோர் வாழ்க்கையிலும் தாக்கம் செலுத்துகின்ற அரசியல் பற்றிய அக்கறை எல்லாத் துறைகளையும் சேர்ந்தோருக்கு வேண்டும். கலைத் துறைச் செயல்பாட்டின் காரணமாக மக்களின் அன்பைப் பெற்றவர்கள் அந்த அன்பை ஆக்கபூர்வமான அரசியலுக்குப் பயன்படுத்தப்போகிறார்களா, ஏற்கெனவே சீர்குலைந்திருக்கிற 'சிஸ்டம்' மேலும் பின்னுக்குப் போக உதவப் போகிறார்களா என்பதுதான் பேசப்பட வேண்டும். இவர்களில் சிலர் பெரியதொரு சக்தியாக உருவெடுக்காவிட்டாலும், அரசியல் பிரவேசத்தின் மூலம் சில பேரங்களை நடத்தலாம் என்றுகூட கணக்கிட்டிருக்கக்கூடும்.

ஆக, நடிகர்கள் நாடாள வரலாமா என்ற கேள்விக்கு இப் படிப் பதிலளிக்கலாம்: நாடாள வருவோர்தான் நடிக்கக் கூடாது, நடிகர்கள் நாடாள வரலாம். எப்படி அரசியல் செய்கிறார்கள் என்பதைத் தீர்மானிக்க மக்கள் இருக்கிறார்கள்!

**நடிகர்கள் நாடாள வரலாமா என்ற கேள்விக்கு இப்படிப் பதிலளிக்கலாம்: நாடாள வருவோர் தான் நடிக்கக் கூடாது. நடிகர்கள் நாடாள வரலாம். எப்படி அரசியல் செய்கிறார்கள் என்பதைத் தீர்மானிக்க மக்கள் இருக்கிறார்கள்!**



காலைக்கதிர் Kalaikkathir



# பூமியை நோக்கி பாய்ந்து வரும் விண்கல் !

விண்வெளியில் இருந்து அதிவேகத்தில் பாய்ந்து வரும் விண்கல் இன்று பூமியைக் கடந்து செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விண்வெளியில் கோடிக்கணக்கான விண்கற்கள் சுற்றி வருகின்றன. ஆனால் சில நேரங்களில் இந்த கற்கள் பூமியின் புவியீர்ப்பு பாதைக்குள் நுழைந்து விடுகின்றன. அந்த கற்கள் நேரடியாக பூமியில் வந்து விழுந்தால் பெரும் ஆபத்து ஏற்படும்.

ஆனாலும் பூமிக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இயற்கை சில பாதுகாப்புக்களை அளித்துள்ளது. புவியீர்ப்பு விசைக்குள் அந்தக் கற்கள் நுழையும்போது காற்றில் ஏற்படும் உராய்வு காரணமாக கற்களில் தீப்பிடித்துக்கொள்ளும். இதனால் பூமிக்கு வருவதற்கு முன்பாகவே எரிந்து சாம்பலாகிவிடும்.

இதன் காரணமாகத்தான் பூமிக்கு விண்கற்களால் ஆபத்து ஏற்படுவதில்லை. ஆனாலும் கூட சில கற்கள் முழுமையாக எரியாமல் பூமியில் விழுந்தும் உண்டு. அவற்றால் சிறு சிறு பாதிப்புகள் மட்டுமே இதுவரை ஏற்பட்டுள்ளன.



இந்த நிலையில் பூமியை நோக்கி 40 மீற்றர் நீளம் கொண்ட இராட்சதக் கல் ஒன்று தற்போது அதிவேகமாக வந்து கொண்டிருக்கிறது. 2018 சி.பி. என்று பெயரிடப்பட்டுள்ள இந்தக் கல் இன்று பூமியில் இருந்து 64 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்தில் கடந்து செல்கிறது. ஆனாலும் பூமியின் புவியீர்ப்பு விசைக்கு அப்பால் அது கடந்து செல்வதால் அது பூமியை நோக்கி வராது என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் ஆபத்தும் இல்லை என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இதே போன்று ஒரு கல் பூமி அருகே கடந்து சென்றமை குறிப்பிடத்தக்கது.



# 'என்னதான் சொன்னாலும் திகிலாகத்தான் இருக்கு!'

தாய்லாந்தைச் சேர்ந்த முகமது இவான், வீட்டிலேயே ஒரு முதலையை வளர்த்து வருகிறார். 200 கிலோ எடை கொண்ட 21 வயதான இந்த முதலையுடன் விளையாடுகிறார். பல் துலக்கி விடுகிறார். குளிக்க வைக்கிறார்.

1997ஆம் ஆண்டு ஒரு மீனவரின் வலையில் சின்னஞ்சிறு குட்டியாக மாட்டிக்கொண்டது. அதைப் பார்த்தவுடன் எனக்குப் பிடித்து விட்டது. பணம் கொடுத்து வாங்கி வந்து விட்டேன். ஆனால், என் வீட்டில் ஒருவரும் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்காக நான் முதலையைக் கைவிடவில்லை. கோஜெக் என்று பெயரிட்டு அன்பாக வளர்த்து வந்தேன்.

ஒரு பெரிய தண்ணீர்த் தொட்டியை முதலைக்காகக் கட்டினேன். எனக்கு முதலைகளைப் பற்றி பெரிதாக ஒன்றும் தெரியாது. நாளடைவில் நேரிடையாகவே முதலையின் இயல்பை அறிந்து கொண்டேன். வீட்டிலுள்ளவர்களுக்கும் முதலையைப் பிடிக்க ஆரம்பித்துவிட்டது. இப்போது 8 அடி நீள பிரம்மாண்டமான முதலையாக மாறிவிட்டது. என் குழந்தைகள் முதலையின் அருகிலேயே விளையாடுகின்றன. இதுவரை யாருக்கும் எந்தத் தீங்கும் செய்த தில்லை.

தினமும் 1.5 கிலோ முதல் 5 கிலோ மீன் வரை சாப்பிடுகிறது. இதைத் தவிர பெரிய செலவு ஒன்றும் இல்லை. வாரம் ஒருமுறை முதலையின் தோலைத்தேய்த்து, நன்றாகக் குளிக்க வைப்பேன். பல் துலக்கிவிடுவேன். உள்ளூர் மற்றும் வெளிநாட்டினர் கூட முதலையைப் பார்க்க வருகிறார்கள். வெளிநாட்டுக்காரர் ஒருவர் 47 லட்சம் ரூபாய்க்கு முதலையை வாங்கிக் கொள்வதாகச் சொன்னார். இது என் குழந்தை என்று மறுத்துவிட்டேன் என்கிறார் முகமது.


# தொலைந்தது கிடைத்தால் மகிழ்ச்சிதான்!

அமெரிக்காவின் பென்சில்வேனியாவைச் சேர்ந்த டெப்ரா வளர்த்த நாய், 10 ஆண்டுகளுக்கு முன்பு காணாமற் போனது.

நாயைத் தேடி அலைந்தார். கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு சன்மானம் அறிவித்தார். ஆனால், நாய் கிடைக்கவே இல்லை. தற்போது விலங்குகள் பாதுகாப்பு மையத்திலிருந்து நாய் உயிருடன் இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது.

விலங்குகள் பாதுகாப்பு மையத்தில் நாயை ஸ்கான் செய்தபோது, நாயில் வைக்கப் பட்டிருந்த மைக்ரோசிப்பில் இருந்த தகவல்களை வைத்து, உரிமையாளர்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறார்கள்.

தற்போது நாயை வரவேற்கத் தயாராக இருக்கிறது டெப்ரா குடும்பம்.



# பெண்களுக்கான தனித் தீவு!

பின்லாந்தில் உள்ள ஒரு தீவில் பெண்களுக்கு என்று பிரத்தியேகமான சுற்றுலா விடுதி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இங்கே ஆண்களுக்கு அனுமதி இல்லை.

அமெரிக்காவைச் சேர்ந்த கிறிஸ்டினா ரோத் இந்த விடுதியை ஆரம்பித்திருக்கிறார். ஆண்களின் தொந்தரவு இன்றி, தனியாக சில நாள்கள் இருக்க வேண்டும் என்று பெண்கள் விரும்புகிறார்கள். அவர்களுக்காகவே இந்த விடுதியை ஆரம்பிக்கும் எண்ணம் வந்தது. இது ஆண்களுக்கு எதிரானது அல்ல. பெண்கள் சுதந்திரமாக இருப்பதற்கான விடுதி.

சூப்பர்ஷி தீவு 8.4 ஏக்கர் நிலப்பரப்புடையது. நான் இந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவரைக் காதலிக்கிறேன். அவர்தான் இந்தத் தீவு விலைக்கு வருவதாகச் சொன்னார். ஆரம்பத்தில் எனக்கு ஆர்வம் இல்லை. தீவைப் பார்த்தவுடன் பிடித்துவிட்டது. உடனே விலைக்கு வாங்கினேன்.

விடுதி, ஸ்பா, சாகச விளையாட்டுகள், யோகா வகுப்புகள் போன்றவற்றை உருவாக்கினேன். ஆரோக்கியமான உணவுக்கும் ஏற்பாடு செய்தேன். பெண்கள் இங்கே வந்து தங்கினால் மனமும் உடலும் புத்துணர்ச்சி பெறும். உங்களுக்காகவே ஆண்டு முழுவதும் சூப்பர்ஷி தீவு காத்திருக்கும் என்று விளம்பரம் செய்தேன். தற்போது என் தோழிகள், உறவினர்கள், தெரிந்தவர்களே வந்து செல்கிறார்கள். ஜூலை மாதம் முதல் முறையாக ஆரம்பிக்க இருக்கிறோம் என்கிறார் கிறிஸ்டினா ரோத்.





# பாதை மாறியது விண்வெளி கார்

அமெரிக்காவில் இருந்து போல்கன் ஹெவி ரொக்கெட் மூலம் கடந்த செவ்வாய்க்கிழமை விண்ணில் செலுத்தப்பட்ட டெஸ்லா கார், அதன் பாதையில் இருந்து அஸ்ரொய்ட் பெல்ட் பகுதிக்குச் சென்று கொண்டிருக்கிறது.

அமெரிக்காவில் புளோரிடா மாகாணம், கேப்கேனவரலில் அமைந்துள்ள கென்னடி விண் வெளி மையத்தில் இருந்து ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் போல்கன் ஹெவி ரொக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டது. அந்த ரொக்கெட், ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் தலைமை செயலதிகாரி எலோன் மஸ்க்குக்கு சொந்தமான சிவப்பு நிற டெஸ்லாக் காரைச் சுமந்து சென்றது.

அந்தக் கார், செவ்வாய் மற்றும் பூமிக்கு இடையேயான சுற்றுப் பாதையில் சுற்றி வரும் வகையில் திட்டமிடப்பட்டு இருந்தது. 6 மாதங்களில் செவ்வாய்க்கு அருகே செல்லும் என்றும் கணிக்கப்பட்டிருந்தது.

ஆனால், அதிக உந்து சக்தி காரணமாக அந்த கார் நிர்ணயிக்கப்பட்டு இருந்த தடத்தைக் கடந்து அதிகதூரம் சென்று விட்டது. செவ்வாய் சுற்றுவட்டப் பாதைக்கு அப்பால் சென்ற அந்த கார், தற்போது விண்வெளியில் மிகவும் தூரமான அஸ்ரொய்ட் பெல்ட் பகுதிக்கு சென்று கொண்டிருக்கிறது. இந்த தகவலை எலோன் மஸ்க், டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

## தூக்கம் வருவதை தடுக்கும் உணவுகள்



இரவில் சில உணவுகளைச் சாப்பிட்டால் தூக்கம் வருவது தடுக்கப்படும். தூக்கத்தைத் தடுக்கும் உணவுகள் என்னவென்று விரிவாகப் பார்க்கலாம்.

இரவில் தூங்கும் போது கைக்கு எட்டும் தூரத்தில் தண்ணீர் வைத்திருப்பதை சிலர் வழக்கமாக கொண்டிருக்கிறார்கள். இரவில் விழிப்பு வந்ததும் சிறுநீர் கழித்துவிட்டு தண்ணீர் அருந்திவிட்டு தூங்கச் செல்வார்கள். அப்படி இரவு நேரத்தில் தண்ணீர் பருகுவது ஆழ்ந்த தூக்கத்திற்கு இடையூறை ஏற்படுத்தும். தூங்கச் செல்வதற்கு மூன்று மணி நேரத்திற்குள்ளாக அதிகமாக தண்ணீர் அருந்துவதையும் தவிர்க்க வேண்டும். அப்படி செய்தால் ஆழ்ந்த தூக்கத்திற்கு உடல் ஒத்துழைக்காமல் போய்விடும்.

கிரீன் டீயில் தியோபுரோமின், தியோபைலின் ஆகிய வேதிப்பொருள்கள் உள்ளன. அவை இதய துடிப்பை அதிகரிக்கச் செய்து, ஆழ்ந்த தூக்கத்திற்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும். அதனால் மாலை 4 மணிக்கு பிறகு கிரீன் டீ அருந்துவதைத் தவிர்க்கவேண்டும்.

சொக்லேட்டில் இடம்பிடித்திருக்கும் காபைன் ஆழ்ந்த தூக்கத்திற்கு அணை போட்டுவிடும். சீனி கலந்த பதப்படுத்தப்பட்ட உணவுகளையும் இரவில் தவிர்க்க வேண்டும். அவை ரத்தத்தில் உள்ள சீனியை உறிஞ்சி தூக்கத்திற்கு முட்டுக்கட்டை போடும்.

இரவில் காரமான உணவுகள் சாப்பிடுவதையும் தவிர்க்க வேண்டும். இரவில் தூங்குவதற்கு தயாராவதற்கு ஏதுவாக உடல் வெப்பநிலை குறையத் தொடங்கும். அந்த நேரத்தில் கார உணவுகளை சாப்பிட்டால் அது உடல் வெப்பநிலையை அதிகப்படுத்திவிடும். அதன் தாக்கமாக ஆழ்ந்த தூக்கத்திற்கு உடல் ஒத்துழைக்காது.

இறைச்சி, எண்ணெயில் பொரித்த உணவுகள், ஐஸ்கிரீம் போன்றவற்றை இரவு நேரங்களில் தவிர்க்க வேண்டும். அவை செரிமானம் ஆவதற்கு நீண்ட நேரம் எடுத்துக்கொள்ளும். தூக்கத்தைக் கெடுக்கும்.

## பெண்களே மனதுக்கும் ஓய்வு கொடுங்கள்



இயந்திரத்தனமான இன்றைய வாழ்க்கைச் சுழற்சிக்கு ஈடு கொடுத்து இயங்கிக் கொண்டிருப்பவர்களில் பெண்களில் பெரும்பாலானோர் ஓய்வெடுக்க நேரமின்றி உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். வேலை இல்லாத போதும் அவர்களுடைய மனமும் உடலும் ஓய்வெடுக்க தயாராகுவதில்லை. எதையாவது பற்றி சிந்தனை செய்து கொண்டிருப்பார்கள். அதுவே தேவையில்லாத மனக்குழப்பத்தைத் தோற்றுவிக்கும்.

பெண்கள் பெரும்பாலானவர்கள் பயனற்ற விடயங்களை பற்றிச் சிந்தித்துத் தங்களை வருத்திக் கொள்கிறார்கள். வேலை இல்லாத போது மனதுக்கு ஓய்வு கொடுத்து விட வேண்டும். அதை விடுத்துப் பெண்கள் தேவையில்லாத விடயங்களை பற்றி சிந்திப்பது எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தும். ஆரோக்கியமான மனநிலைக்கும் பங்கம் விளைவித்து விடும்.

பெண்களே எத்தகைய கடினமான வேலைப்பளு இருந்தாலும் தினமும் குறிப்பிட்ட நேரத்தை மனதுக்கு ஓய்வு கொடுக்கச் செலவிடுங்கள். அந்தச் சமயத்தில் எந்தவிதமான சிந்தனைக்கும் இடம் கொடுக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள். மனதை அலைபாய விடாதீர்கள். வேலையின் அடுத்த கட்ட நகர்வுகளை பற்றியோ, கையில் எடுத்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கான காலக்கெடுவைப் பற்றியோ சிந்தித்துக் கொண்டிருக்காதீர்கள்.

எப்போதும் ஏதாவது ஒரு சிந்தனையில் மூழ்கிக் கிடப்பவர்கள் மனதை அமைதி நிலைக்கு திருப்புவது எளிதாக சாத்தியமாகும் விடயமல்ல. தினமும் குறிப்பிட்ட நேரத்தை மன அமைதிக்கான பயிற்சிக்கு ஒதுக்குவதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

இந்த அமைதி நேரம் உங்களுடைய வாழ்க்கைக்கு வசந்தம் சேர்க்கும். தேவையற்ற மனக்குழப்பங்களில் இருந்து மீண்டு வருவீர்கள். பின்பு புத்துணர்ச்சியுடனும் சுறுசுறுப்புடனும் செயல்படுவீர்கள். எதையும் நம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் மனோபாவம் தோன்றும். மன அழுத்தம் நீங்கி மனத் தெளிவு ஏற்படும். மனதை இப்படி ஒருநிலைப் படுத்துவதற்குத் தான் தியானம் மேற்கொள்ளப்படுகிறது. தியானப் பயிற்சி மேற்கொள்கிறவர்களால், அமைதியான மனநிலையுடன் வாழ முடியும்.



## சருமப் பிரச்சினைக்கு தீர்வு தரும் வெந்தயம்

வெந்தயத்தைக் கொண்டு தலைமுடியின் ஆரோக்கியத்தை மட்டுமின்றி சருமத்தில் ஏற்படும் பல பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியும். வெந்தயம் எளிதில் கிடைக்கக்கூடிய பொருள் என்பதால், இதனைக் கொண்டு சருமத்தை எளிதில் பராமரிக்கலாம்.

தினமும் வெந்தயத்தை பால் சேர்த்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி மென்மையாக 15 நிமிடம் மசாஜ் செய்து பின் கழுவ வேண்டும். இதனைக் கொண்டு சருமத்தைப் பராமரித்தால், சருமத்துளைகளில் ஏற்பட்டுள்ள அடைப்புக்கள் அனைத்தும் நீங்கி சருமம் சுத்தமாக இருக்கும். இதனை தினமும் செய்து வரலாம்.

வெந்தயத்தை நீரில் ஊற வைத்து பேஸ்ட் செய்து, பால் சேர்த்து கலந்து முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இதனை வாரம் இருமுறை செய்து வரலாம். வெயில் காலத்தில் வெளியில் சென்று வந்தபின் இவ்வாறு செய்தால் சருமம் கருமை அடைவதை தடுக்கலாம்.

## பெண்கள் விரும்பும் கலாசாரம்




திருமணம் என்ற பெயரில் மற்றவர்கள் தங்கள் மேல் திணிக்கும் வாழ்க்கையைவிட, தாங்களாகவே தேர்ந்தெடுத்த வாழ்க்கையை ஏற்றுக்கொண்டு அதற்கு மதிப்பளிப்பதையே பெண்கள் விரும்புகிறார்கள்.

ஓர் ஆணை நம்பி பெண்ணோ, பெண்ணை நம்பி ஆணோ சார்ந்திருக்கும் தெய்வீகத்தன்மை நம்முடைய கலாசாரத்தில் இருக்கிறது. யாரும் கேள்வி கேட்கக் கூடாது, யாருக்கும் பதிலளிக்க வேண்டியதில்லை. சுதந்திரம்... சுதந்திரம் என்ற மனோபாவத்தாலேயே மொத்தத்தில் இந்த சிங்கிள் கலாசாரத்தை பெண்கள் விரும்புவது அதிகமாகி வருகிறது. அதாவது அன்பின் பெயரால், யாரும் தலையிடக்கூடாது. தன்னுடைய சந்தோஷம் மற்றும் துக்கம் எல்லாமே தனது கைக்குள்ளேயே இருக்க வேண்டும் என என்னும் போது தனித்து இருப்பதைத்தான் விரும்பும் சூழ்நிலை வரும்.

பெண்களும் விதிவிலக்கில்லை! சிங்கிள் கலாசாரம் இப்போது பெண்களிடமும் அதிகரித்து வருகிறது. 25 வயதை அடைந்து விட்ட ஒரே காரணத்துக்காகத் திருமணம் செய்து கொள்ளப் பெண்கள் தயாராக இல்லை. திருமணம் மட்டுமே வாழ்க்கை இல்லை. ஆண்களைப் போலவே குறிக்கோள்களும், எதிர்காலத்தைப் பற்றிய கனவுகளும் எங்களுக்கும் உண்டு என்கிற மனோபாவம் பெண்களிடம் அதிகமாகி வருகிறது என்கின்றன பல்வேறு ஆய்வுகள்.

பெண்கள் மற்றவர்களின் உதவியையும், ஆதரவையும் எதிர்பார்ப்பதும் குறைந்துவருகிறது. திருமணம் என்ற பெயரில் மற்றவர்கள் தங்கள் மேல் திணிக்கும் வாழ்க்கையைவிட, தாங்களாகவே தேர்ந்தெடுத்த வாழ்க்கையை ஏற்றுக்கொண்டு அதற்கு மதிப்பளிப்பதையே பெண்கள் விரும்புகிறார்கள். அதுதான் பெண்களின் சிங்கிள் வாழ்க்கைக்குக் காரணம் என்கிறார்கள் உளவியலாளர்கள்.

## மாரடைப்பைத் தடுக்கும் புடலங்காய்





இதயம் பலவீனமானவர்கள் புடலங்காயை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது. மாரடைப்பைத் தடுக்கவும் புடலங்காய் உதவுகிறது.

புடலங்காயை இளசாக இருக்கும் போதே பயன்படுத்துவது நல்லது. முதிர்ந்த புடலங்காய் சற்று கசப்பாக இருப்பதோடு, செரிமானம் ஆவதில் சிரமம் ஏற்படும். மேலும் புடலங்காயைக் கறியாகச் சமைத்து உண்ணும் போது அதன் விதைகளை நீக்கி விட்டு பயன்படுத்த வேண்டும். விதைகள் வயிற்றுக்குத் துன்பம் தருவதாக இருக்கும். முற்றிய புடலங்காயும், அதன் விதைகளும் வயிற்றுப் போக்கை உண்டாக்கி விடும்.

100 கிராம் புடலங்காயில் 94 சதவிகிதம் உணவாகும். 92.9 கிராம் நீர்ச்சத்து உடையது. புரதம் 0.5 கிராமும், கொழுப்புச்சத்து 0.3 கிராமும், போலேட் 15 மைக்ரோ கிராமும், சிறிது வைட்டமின் சி சத்தும் அடங்கியுள்ளன. புடலங்காய் நீரிழிவு நோயாளிகளுக்கான மிகச்சிறந்த மருந்தாக அமையும். வயிற்றுப் பூச்சிகளை வெளியேற்றவும் மாரடைப்பைத் தடுக்கவும் புடலங்காய் உதவுகிறது. கருத்தடைக்கு மருந்தாகவும், பால்வினை நோய்களைத் தடுக்கும் சக்தியும் புடலங்காய்க்கு உள்ளது.

விட்டு விட்டுக் காய்ச்சல் தொடரும் போது அடிக்கடி புடலங்காயை இளசாக வாங்கி விதைகளை நீக்கிவிட்டு, கறியாக சமைத்து சாப்பிடுவதால் காய்ச்சல் மறைந்து போகும். புடலங்காய் இதயத்துக்கு பலமும் நல்ல செயற்பாட்டையும் தரக்கூடியது.

இதயம் பலவீனமானவர்கள் புடலங்காயை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்வதோடு அன்றாடம் காலையில் எழுந்து புடலைக்கொடியின் இளந்தளிர் இலைகளைப் பறித்து சுத்தம் செய்து சாறாகப் பிழிந்து வைத்துக் கொள்ளவேண்டும். அதை ஒரு வேளைக்கு இரண்டு தேக்கரண்டி வீதம் காலை, மாலை என இரண்டு வேளை சாப்பிடுவதால் இதயம் பலம்பெறும். இதய நோயாளிகள் 48 நாள்கள் தொடர்ந்து புடலங்காய் ஜூஸ் குடித்து வந்தால் உடல் நலம் பெறமுடியும்.

## தனிநாயகம் அடிகள் பேருரை பாதுகாவலன் மண்டபத்தில்

யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள தமிழ்த் தூது தனிநாயகம் அடிகள் ஆய்வு மையத்தின் ஒழுங்கமைப்பில் 17 பெப்ரவரி 2018 அன்று மு.ப 10 மணிக்கு இந்தியா தமிழ்நாட்டைச் சேர்ந்த கலாநிதி அமுதன் அடிகள் வழங்கும் நினைவுப் பேருரை யாழ்ப்பாணம் பாதுகாவலன் மண்டபத்தில் இடம்பெறும்.

தொடர்புகள் ஜெயசேகரம் அடிகளார் 0773164347

காலைக்கதிர்
Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## இந்திய ஆயர் பேரவையின் தலைவராக கர்தினால் கிரேசியஸ்

இந்திய ஆயர் பேரவையின் 33ஆவது ஆண்டுக் கூட்டத்தில் இப் பேரவையின் தலைவராக மும்பை பேராயர் கர்தினால் ஆசுவால்ட் கிரேசியஸ் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பெப்ரவரி 2ஆம் திகதி முதல், 9ஆம் தேதி முடிய, பெங்களூரில் நடைபெற்று வரும் இந்திய ஆயர் பேரவைக் கூட்டத்தில், கர்தினால் கிரேசியஸ் அவர்கள், அடுத்த இரு ஆண்டுகளுக்கு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட் டுள்ளார்.

# யாழ். மறை மாவட்டத்திலும் பெப். 23 இல் உலக அமைதிக்காக செபியுங்கள் யாழ் ஆயர் அழைப்பு



23 பெப்ரவரி 2018 அன்று உலக அமைதிக்காக செபிக்க திருத்தந்தை விடுத்த அழைப்பை யாழ் மறை மாவட்டத்திலும் செயற்படுத்தும்படி யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ் மறைமாவட்ட பங்குத்தந்தையர் அனைவரிடமும் வேண்டியுள்ளார். உலகின் அமைதிக்காகச் செபிக்குமாறு 5 பெப்ரவரி 2018 அன்று எல்லோரையும் கேட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் சிறப்பாக கொங்கோ சனநாயக குடியரசு மற்றும் தென் சூடான் நாடுகளின் மக்களுக்காக செபிக்கும்படி கேட்டுக் கொண்டார். உலகின் பல்வேறு பகுதிகளில் இடம்பெறும் கடுமையான ஆயுத மோதல்கள் அதிகரித்துக்கொண்டே



வரும் இன்றையச் சூழலில் 23 பெப்ரவரி 2018 அன்று தவக்கால முதல் வாரத்தின் வெள்ளிக்கிழமையை உலகின் அனைத்துக் கிறிஸ் தவரும் அமைதிக்கான செபம் மற்றும் நோன்பு நாளாகக் கடைப்பிடிக்குமாறு அழைப்பு விடுத்த திருத்தந்தை பிரான்சிஸ் கிறிஸ்தவர் அல்லாதவர் களும் இதே கருத்துக்காக இந்நாளை அர்ப்பணிக்க அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அப்பாவி மக்கள் வேதனையிலும் துயரத்திலும் எழுப்பும் அழுகுரலை நம் இறைத்தந்தை எப்போதும் கேட்டுக்கொண்டிருக்கின்றார் என்பதை மனதில்கொண்டு நாமும் இந்த அழுகுரலைக் கேட்போம். அமைதிக்காக நான் என்ன செய்யமுடியும் என இறைவன் முன்னிலையில் நம் மனசாட்சியிடம் கேள்வி கேட்குமாறும் கேட்டுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ்வன்முறை வழியாக அடையும் வெற்றிகள் போலியானவைகள். அமைதிக்காக உழைப்பது எல்லாருக்கும் நன்மை பயக்கும் என வலியுறுத்தினார். கொங்கோ ஜனநாயக குடியரசில் இடம்பெறும் சண்டையில் குறைந்தது 40 லட்சம் பேரும் தென் சூடானில் 20 லட்சம் பேரும் புலம்பெயர்ந்துள்ளனர் என்பது கவனிக்க வேண்டியது.

## உண்மையின் எண்ணங்கள்

### அமைதிக்காக செபிப்பதற்கு யாழ் ஆயர் விடுத்த அழைப்பு

23 பெப்ரவரி 2018 அன்று தவக்கால முதல் வாரத்தின் வெள்ளிக்கிழமையை உலக அமைதிக்காக செபிக்க திருத்தந்தை விடுத்த அழைப்பை யாழ் மறைமாவட்டத்திலும் செயற்படுத்தும்படி யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ் மறைமாவட்ட பங்குத் தந்தையர் அனைவரிடமும் வேண்டியுள்ளார் என்பது கவனத்துடன் நோக்கப்பட வேண்டியதாகும். 30 ஆண்டுகால போர் - இடப்பெயர்வு, இழப்புக்கள்; இறப்புக்கள் என்பவற்றை அனுபவித்தவர்கள் தமிழ் மக்கள்.

அனுபவ ரீதியாக யுத்த அனர்த்தங்களை உணர்ந்த தமிழ் மக்கள் திருத்தந்தை குறிப்பாக வேண்டும் கொங்கோ சனநாயக குடியரசு மற்றும் தென் சூடான் நாடுகளின் மக்களுக்காக செபிப்பதும் உலக அமைதிக்காக செபிப்பதும் பொருத்தமானதாகும். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கிறிஸ்தவர் அல்லாதவர்களும் இதே கருத்துக்காக இந்நாளை அர்ப்பணிக்க அழைப்பு விடுத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## போயிட்டி லூர்து அன்னை வளாகத்தில் இன்று 'சங்கிலியன்' நாட்டுக்கூத்து

போயிட்டி லூர்து அன்னை ஆலய திருவிழாவை முன்னிட்டு லூர்து அன்னை வளாகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு கலா பூசணம் அண்ணாவியார் அ.மனோகரன் அவர்களின் நெறியாள்கையில், சங்கிலியன் நாட்டுக் கூத்து மேடையேறவுள்ளது. சங்கிலியன் நாட்டுக் கூத்து நிகழ்வின் தலைவராக போயிட்டி லூர்து அன்னை ஆலய பங்குத்தந்தை பாலதாஸ் பிறயன் அடிகளாரும் பிரதம விருந்தினராக இளவாலை மறைக் கோட்ட முதல்வர் ம.யேசுரட்ணம் அடிகளாரும் கலந்து கொள்வர். சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலர்களும் கௌரவ விருந்தினர்களாக அண்ணாவியார் தென்மோடி திலகம் தொ.இராச தம்பி அவர்களும் ஓய்வு பெற்ற ஆசிரியர் (கனடா) செ.இராசநாயகம் அவர்களும் கலந்துகொள்வர். அருகிப் போகும் நாட்டுக்கூத்துக் கலாசாரத்தை கட்டி எழுப்பும் நோக்கில் மேடை ஏற்றப்படும் யாழ்ப்பாண மன்னன் வாழ்வை சித்திரிக்கும் நாட்டுக்கூத்தைக் கண்டு மகிழ அனைவரும் திரண்டு வருக என போயிட்டி நாட்டுக்கூத்துக் குழுவினரும் போயிட்டி லூர்து அன்னை ஆலய பங்குத்தந்தை பாலதாஸ் பிறயன் அடிகளாரும் அழைப்பு விடுத்துள்ளனர்.

## வானக இல்லம் நோக்கிய தமது திருப்பயணம் தெரிகிறது என்கிறாராம் முன்னாள் திருத்தந்தை



உடலால் நான் தளர்ந்துவரு வதை உணரும் இவ்வேளையில் வானக இல்லம் நோக்கிய என் திருப்பயணம் நெருங்கி வருகிறது என்பதை என்னால் உணரமுடிகிறது என இத்தாலிய நாளிதழ் ஒன்றிற்கு எழுதியுள்ள மடலில் முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் குறிப்பிட்டுள் ளார். முன்னாள் திருத்தந்தையின் உடல்நலம் குறித்து கவலை தெரிவித்து மேற்படி நாளிதழுக்கு அனுப்பப்பட்ட கடிதங்களுக்கு முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் இவ்வாறு பதில் மடலை அனுப்பியுள்ளார். தன் மீது விசுவாசிகள் இவ்வளவு அக்கறை கொண்டுள்ளமையைக் கண்டு தான் மனநிறைவு கொள்கின்றேன் எனக் கூறியுள்ள முன்னாள் திருத்தந்தை தன் அன்பு நெஞ்சங்களின் செபங்கள் தனு டன் உள்ளதை உணர்கிறார் என அவர்களுக்காகச் செபிக்கிறார் எனவும் உறுதியளித்துள்ளார்.

திருத்தந்தை 16ஆவது பெனடிக்ற் மற்றும் திருத்தந்தை பிரான்சிஸ் ஆகிய இரு திருத்தந்தையர்களும் கத்தோலிக்க திருச்சபையில் சமகாலத்தில் இருக்கின்றமை ஆறு நூற்றாண்டுகளில் நடைபெறாத ஓர் அபூர்வ நிகழ்வாகும். தமது முதிர்ந்த வயது காரணமாகவும் உடல் நிலைக் குறைவு காரணமாகவும் தாம் திருத்தந்தைப் பணியை துறக்கப் போகிறார் எனத் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் 28 பெப்ரவரி 2013 அன்று வெளியிட்ட செய்தி உலகக் கத்தோலிக்க திருச்சபையைப் பொறுத்த வரை ஒரு மிக அதிர்ச்சியான செய்தியே ஆகும்.

600 ஆண்டுகளுக்கு மேலாக இவ்வாறு ஒரு திருத்தந்தை பணியிலிருந்து விலகியமையில்லை என்பதோடு திருத்தந்தைப் பதவி வாழ்நாள் முழுவதற்கும் நீடிக்கும் ஒரு பதவி என்ற வழக்கமே கத்தோலிக்க திருச்சபையில் நிலவி வந்தது. 2013ஆம் ஆண்டு புதிய திருத்தந்தையாக பிரான்சிஸ் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும். இரு திருத்தந்தையர்கள் கத்தோலிக்க திருச்சபையில் சமகாலத்தில் இருக்கின்றமை ஆறுநூற்றாண்டுகளில் நடைபெறாத ஓர் அபூர்வ நிகழ்வு என்பது முடிவை நோக்கி நகர்வதாக கருதலாம்.

# 14 ஆம் திகதி திருநீற்றுப் புதனுடன் தவக்காலம் ஆரம்பமாகின்றது

நெறிகேடு பெருகுவதால் பலருடைய அன்பு தணிந்து போகும் என்று மத்தேயு நற்செய்தியாளர் (மத்தேயு 24:12) பதிவு செய்துள்ள இயேசுவின் சொற்களை மையமாக வைத்து 2018 ஆம் ஆண்டுக்குரிய தவக்காலச் செய்தியை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ளார். பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி ஆரம்பமாகும் திருநீற்றுப் புதனுடன் (விபூதிப்புதன்) தொடங்கும் தவக்காலத்திற்கென செய்தி வெளியிட்ட திருத்தந்தை நம் மன மாற்றத்தின் அருளடையாளச் சின்னமாக தவக்காலம் வழங்கப்படுகிறது எனத் தவக்காலச் செய்தியைத் தொடக்கியுள்ளார்.

தன் இறுதி நேரம் நெருங்கிவருவதை உணர்ந்த இயேசு எருசலேமுக்கருகே ஒலிவ் மலை மீது அமர்ந்து தன் சீடர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த வேளையில் பல்வேறு துன்ப இடர்கள் சூழும் காலத்தில் பல போலி இறைவாக்கினர் தோன்றிப் பலரை நெறிதவறி அலையச் செய்தனர் என கூறிய வார்த்தைகளை தன் செய்தியில் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இறைமக்கள் பலர் தற்காலிக இன் பங்களில் தங்களையே இழந்து அடிமையாகி தனிமையில் சிறைப்பட்டுள்ளனர் என்றும் எடுத்துரைத்துள்ளார்.

போலி இறைவாக்கினர்கள் துன்பங்களுக்கு எளிதான தீர்வு களை முன்வைத்து இளையோரை போதைப் பொருள்களுக்கு அடிமையாக்குவதுடன் பயன்படுத்தி தூக்கியெறியும் உறவுகளையும் நேர்மையற்ற இலாபத்தை ஊக்குவிப்பதையும் தன் தவக்காலச் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார். பணத்தின் மீது வளரும் மோகம், பிறரன்பை அழித்துவிடுகிறது என்பதையும் வலியுறுத்தியுள்ள திருத்தந்தை இத்தவக்காலத்தில் செபம் பிறரன்பு செயல்கள் மற்றும் உண்ணா நோன்பு ஆகியவற்றின் வழியே உலகின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும் என்றும் - கூறியுள்ளார்.



# ஊர்வம்பு

■ குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

வெய்யில் வெக்கையும் தேர்தல் சூடும் தணிந்திருந்த சந்தியடியில் வாத்தியார், ஏரம்பர், பேப்பர்தம்பி, ரூபன், ஜீவன் மற்றும் கச்சான் விற்கும் செல்லாச்சி ஆகியோர் கூடியிருந்தனர்.

*“எல்லோரும் விரல்களைக் காட்டுங்கோ. ஜனநாயகக் கடமையைச் சரியாச் செய்திருக்கிறீங்களோ என்று பார்க்க வேணும்.”* என்று சிரித்தபடி சொன்னான் ரூபன்.

*“ஊரிலை நடக்கிறதுகளை எல்லாம் பிரிச்சு மேயிற நாங்கள், வாக்களிக்கத் தவறினால், ‘ஊருக்கு உபதேசம், உனக்கல்ல பெண்ணே’ என்ற கதை மாதிரி இருந்திடும். நாங்கள் ஜனநாயகக் கடமையை சரியாகச் செய்திருக்கிறம்”* என்று விரலை நீட்டி, அடையாள மையைக் காட்டினான் ஜீவன்.

*“இனி தவிசாளர் தெரிவு, உறுப்பினர் தெரிவு என்று கட்சிகளுக்குள்ளை குத்து வெட்டுப்பட்டு ஒருமாதிரி சபைகளை பொறுப்பெடுத்து இயங்கத் தொடங்க காலம் பிடிக்கும்”* என்று அனுபவத்தைச் சொன்னார் ஏரம்பர்.

*“ஆனால் இதிலை பெரும் பகிடி ஒன்று நடக்கும் பாருங்கோ.... ஒவ்வொரு கட்சிகளும் தேர்தல் முடிவுகளை தங்களுக்கு ஏத்த மாதிரி ஆராய்ஞ்சு, தங்களுக்குத் தான் மக்கள் ஆதரவு இருக்கென்று காட்ட முக்கித்தள்ளுவினம் ...கவுண்டமணி, வடிவேலு எல்லாம் பிச்சை வாங்கவேணும்”* என்று நக்கல் சிரிப்புடன் சொன்னாள் செல்லாச்சி.

*“அதுக்கு என்ன செய்யிறது”* என்று சலித்த ரூபன், *“இங்கே நேர்மையான ஊடகவியலாளர் இருக்கினம், நாலு கதிரைகளும் ஒரு மேசையும் கிடைச்சாப் போதும்; அங்கே கூட்டம் போடுகிற சிவில் சமூகக் குழுவினர் முதல் மக்களுடன் இணைந்து வேலை செய்யிற குழுவினர் வரை இருக்கினம். தாங்கள் அரசியல் கட்சியா அல்லது அழுத்தக் குழுவா என்று தங்களுக்கே தெரியாமல் விளங்காமல் இருக்கிற தமிழ் மக்கள் பேரவையினர் இருக்கினம். இவையிலை யாராவது தேர்தல் முடிவுகளை ஆராய்ந்து மக்களின் தீர்ப்பு எப்படி இருக்கு என்று , மக்களுக்கு விளங்கிற மாதிரி விளங்கப்படுத்தலாமே”* என்றான்.

*“இதிலை நீங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினரை விட்டிட்டீங்கள்”* என்று மரியாதை குரலில் தொனிக்கக் கேட்டாள் செல்லாச்சி.


அதுவரை மற்றவர்கள் கதைப்பதைக் கேட்டுக் கொண்டிருந்த வாத்தியார் *“இலங்கையில் பல பல்கலைக்கழகங்கள் இருந்தாலும், அவற்றில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மட்டும்தான், தான் சார்ந்த இனத்தின் குறியீடாகப் பார்க்கப்படுகிறது. ஆனபடியால் அங்கிருக்கிறவர்களின் தவறுகளுக்காக, அந்த நிறுவனத்தின் கண்ணியத்துக்கு ஊறு விளைவிக்கிற மாதிரி கதைச்சுப் போடாதையுங்கோ”* என்றார்.

அதைக் கேட்ட பேப்பர் தம்பி *“வெளியிற இருக்கிற நாங்கள்தான் பல்கலைக்கழகத்துக்கு இவ்வளவு மரியாதை கொடுக்கிறம். உள்ளுக்குள்ளை இருக்கிறவை தங்கடை சுயநலனுக்காக பல்கலைக்கழகத்தின் பெயர் எப்படி பொது வெளியில் நாசமானாலும் பரவாயில்லை என்று நடக்கிறதுதான் கவலையாக இருக்கு. இப்படியான செயல்களை அங்கிருக்கிற மரியாதைக்குரியவர்கள் தங்களுக்குப் பாதிப்பு இல்லையென்றபடியால் பாராமுகமாக இருக்கினம். இது இன்னும் வேதனையாக இருக்கு”* என்று கவலை தொனிக்கச் சொன்னான்.

அதனைக் கேட்டுப் பெருமூச்சு விட்ட வாத்தியார், *“ஒரு இடத்திலை பத்து நல்லவை இருந்தால், ஒன்றிரண்டு நட்டாமுட்டிகளும் இருக்கிறது வழக்கம். அதனைத் தவிர்க்கவும் முடியாது. ஆனால் மாணவர்களிடம் நல்ல பெயரும், பொது மக்களிடம் மரியாதையும் பெற்ற படித்தவர்கள் கூட, தங்கடை தரத்துக்கு கொஞ்சமும் பொருத்தமில்லாத வேலைகளில் ஈடுபடுறதுதான் மனதுக்குக் கஷ்டமாயிருக்கு”* என்று சொன்னார்.

அதற்கு ஜீவன் *“சாமிக்குக் கிட்டயிருக்கிற பூசாரிக்கு சாமியின் அருமை தெரியாது என்று சொல்லுற மாதிரி, யாழ். பல்கலைக்கழகத்தின் அருமை அங்கையிருக்கிறவைக்கு தெரியாமல் இருக்கிறது”* என்றான்.

*“இதெல்லாவற்றையும் கேட்கிறபோது, பல்கலைக்கழகச் சூழலில் இருக்கிற ஒருவர் சொன்ன உண்மைச் சம்பவம் தான் ஞாபகம் வருகிறது”* என்று தொடங்கிய பேப்பர்தம்பி *“தனது பிள்ளையை யாழ். பல்கலைக்கழகத்தில் சேர்ப்பதற்காகத் தொலைதூரத்திலிருந்து அழைத்து வந்த இஸ்லாமியரான தந்தை ஒருவருடன், ஊடகவியலாளரான எனது நண்பருக்குக் கதைக்க வாய்ப்புக் கிடைத்ததாம். அப்போது அந்தத் தந்தை சொன்னாராம்’ எனது பிள்ளைக்கு, எமது ஊருக்குக் கிட்ட இருக்கிற பல்கலைக்கழகம் ஒன்றில் அனுமதி கிடைத்தது. ஆனால் என்ன இருந்தாலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படிக்கிறதுபோல வராதுதானே. அதனால் மிகவும் கஷ்டப்பட்டு யாழ். பல்கலைக்கழகத்துக்கு மாற்றம் எடுத்து எனது பிள்ளையை இங்கு முதலாம் வருடத்தில் சேர்த்திருக்கிறேன்’ என்றாராம். கேட்டவருக்கு மட்டுமில்லை, எனக்குக் கூட இதனைக்கேட்டு வேதனையாகத்தான் இருக்கிறது.”* என்று சொன்னான்.



## காலைக்கதிருக்கு இனித்தான் கடும்வேலை காத்திருக்கு...!

*“சரியடாப்பா, இதுக்கு நாங்கள் கவலைப்பட்டு என்ன செய்யிறது. யாழ். பல்கலைக்கழகத்துக்குள்ளை இருக்கிறவையெல்லோ இதைப் பற்றிக் கவலைப்பட வேணும். மாணவர் கூட, மிஞ்சிப்போனால் நாலைஞ்சு வருசங்களிலை படிச்சு முடிச்சு தங்கடை வேலையைப் பார்க்க போயிடுவினம். ஆனால், படிப்பிக்கிறவை ஓய்வு பெற்ற பின்னரும் விடாமல் உள்ளுக்குள் வந்து போறவை. அவைக்குத்தானே அதிக அக்கறை இருக்க வேணும். அதோடை அவையாலைதானே இதுகளுக்கு ஏதாவது செய்யவும் முடியும். ஏதோ எங்கடை கவலையைச் சந்தியடியிலை இறக்கி வைச்சிருக்கிறம். அவையின்றை கண் காதுகளிலை இது படுகிறதோ தெரியாது. அப்படித் தெரிஞ்சாலும் ‘இவை என்ன சொல்லுறது; நாங்கள் என்ன கேட்கிறது’ என்று இருந்தால் யார் என்ன செய்ய முடியும்”* என்று வெப்பியாரத்துடன் சொல்லி முடித்தார் ஏரம்பர்.

“உள்ளூராட்சித் தேர்தல் முடிஞ்சுது. இனி என்ன நடக்கும்?” என்று கதையைத் திசைமாற்றினாள் செல்லாச்சி.

அதற்குப் பதிலளித்த ரூபன், *“என்ன செய்வினம். பதவியேற்பினம். இதுக்கு முந்தி இருந்தவை செய்தபிழைகள் என்று ஒரு பட்டியல் வெளியிட்டு, தங்களை நேர்மையாளர்களாகக் காட்டுவினம். ‘புது விளக்குமாறு நல்லாக்கூட்டும்’ என்று சொல்லுறவை. அதுமாதிரி தொடங்கின கொஞ்சக்காலத்துக்கு இருக்கிற அதிகாரிகள் முதல் ஊழியர்கள் வரை எல்லோரையும் ‘அதைச் செய்; இதைச்செய்’ என்று உருட்டிப் பிரட்டுவினம். பிறகு தங்கடையாக்களின் நெருக்கு வாரங்களுக்கு வளையத் தொடங்குவினம். தொடர்ந்து அடுத்த தேர்தலை இலக்கு வைத்து காய் நகர்த்தத் தொடங்குவினம். அதோடை முழுக்க கந்தரகோளமாகும். நாங்களும் எத்தனை பேரைப் பார்த்திருக்கிறம்”* என்றான்.

அதனைத் தலையை ஆட்டி மறுத்த வாத்தியார், *“அப்படி நம்பிக்கையில்லாமல் கதைக்கக் கூடாது. அரசியல்வாதிகள் தவறிழைப்பதற்கு ,அவர்கள்மட்டுமே காரணம் கிடையாது. வாக்களித்து விட்டு, விரலில் வைத்த அடையாள மை அழிவதற்கு முன்னரே தெரிவு செய்த அரசியல்வாதிகளை மறந்து விடுகிறோம். அப்படி இருக்காமல், அவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணித்து அழுத்தம் கொடுக்கிற குழுக்களாக மக்கள் இருக்க வேணும். நாங்கள் எங்கடை வேலையைப் பார்த்தால், கதிரையைப் பிடித்த அரசியல்வாதிகள் தங்கடை வேலையைக் காட்டுவினம்தானே”* என்றார்.

*“அப்ப காலைக்கதிருக்கு இனித்தான் கடுமையான வேலை காத்திருக்கு என்று சொல்லுங்கோ. பக்கஞ்சாராத பத்திரிகை என்றும், எல்லாத்தரப்புக்கும் சம இடம் தருகின்ற பத்திரிகை என்றும் பெயர் எடுத்திருக்கிற காலைக்கதிர்தான், உள்ளூராட்சி மன்றங்களை விருப்பு வெறுப்பின்றி நடுநிலையோடு கண்காணித்து ,நடப்பவற்றைப் பகிரங்கப்படுத்தும் என்று பொது மக்கள் நம்புகிறார்கள்”* என்றாள் செல்லாச்சி.

அப்போது வாத்தியார் *“இந்தத் தேர்தலுக்குப் பிறகு தமிழ் மக்கள் பேரவையும் ஏதாவது ஒரு தீர்க்கமான வழிமுறையை முன்வைக்க வேண்டிய நிலையும் வந்திருக்கு. இந்தத் தேர்த லுடன் எந்தெந்தக் கட்சிகளுக்கு என்ன பலம் இருக்கு என்று தெரிந்து விடும். இதுவரையும் முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன் பின்னால் நின்ற கட்சிகள் கூட இனிமேல் தனிவழி போகலாம் என்ற நம்பிக்கையை இந்தத் தேர்தல் முடிவுகள் தரக்கூடும். அந்தநிலையில் தமிழ் மக்கள் பேரவை பலமான அழுத்தக் குழுவாகச் செயற்பட வேண்டிய தேவை தமிழர் அரசியலில் அவசியமாகும் என்று நினைக்கிறேன்”* என்று சொன்னார்.

*“அதுக்கு முதல் தமிழ் மக்கள் பேரவை, முதலமைச்சர் மேற்பார்த்து, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இனியும் தங்கக் கூடாது”* என்றான் ரூபன்.

*“விளங்கிற மாதிரிச் சொல்லன்”* என்றார் ஏரம்பர்.

பதில் சொன்ன ரூபன், *“இனியும் முதலமைச்சரின் வீட்டில் சிலர் கூடிக் கதைத்து விட்டு ஊடகங்களுக்கு அறிக்கை கொடுத்தால் போதும்; நிலைமை மாறி விடும் என்று தமிழ் மக்கள் பேரவையினர் நினைக்காமல், பொது மக்கள் ஊடாடக் கூடியதான ஒரு அலுவலகத்தை உருவாக்க வேண்டும். அப்போது தான் மக்களின் எண்ணங்கள் புரிந்து யதார்த்தமான முடிவுகளை எடுத்து அரசியல்வாதிகளுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியும். இல்லாவிட்டால் அடிமைகளாக தமிழர்கள் தொடர்ந்து இருந்து கொண்டு, வெறும் கேள்வி பதில்களை வாசிச்சுக் கொண்டு இருக்க வேண்டியதுதான்”* என்றான்.

அப்போது தொண்டையைச் செருமி விட்டு கதைக்கத் தொடங்கினான் பேப்பர் தம்பி.

*“தமிழ் மக்கள் பேரவையில் இருப்பவர்கள் முழுநேரமும் தமது நேரத்தை அங்கேயே செலவழிக்க முடியாது. ஏனென்றால் மருத்துவத் துறையில் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டியவர்கள் உட்படப் பலரும் அங்கு இருக்கிறார்கள். அதனால் தமிழ் மக்கள் பேரவையில் பல அடுக்கு செயல்மட்டங்கள் உருவாக்கப்படலாம். இவை கிராம மட்டங்கள் வரை பரவ வேண்டும். அப்போது தான் மேலிருந்து கீழாக மட்டுமின்றி, கீழிருந்து மேலாகவும் கருத்துகள் சென்றடையும். பேரவையின் நிர்வாகிகள் நேர அழுத்தத்தைத் தவிர்க்க, ஒரு அலுவலகத்தைத் திறந்து, இரண்டாம் மட்ட தலைவர்களை அங்கிருத்தி செயற்பட வேண்டும். அத்துடன் உறுப்பினர் சேர்க்கையை ஒழுங்குபடுத்தி மக்கள் இயக்கம் ஒன்றைக் கட்டியெழுப்ப வேண்டும். ஊரூராக கூட்டங்கள் நடத்தப்பட்டு அங்கு தெரிவிக்கப்படும் கருத்துகள், இரண்டாம்மட்டத்தலைவர்களினால் நடத்தப்படும் கலந்துரையாடல்களில் பகிரப்படும். இரண்டாம் மட்டத் தலைவர்கள் நிர்வாக மட்டக்கூட்டத்தில் மக்கள் கருத்தைச் சொல்வார்கள். இறுதியாக எடுக்கும் முடிவுகள் அப்படியே கடைசி மட்டம் வரை சொல்லப்படும். அத்தகைய மக்கள்மயப்படுத்தப்பட்ட இயக்கம் உருவாகாமல் வெறும் முதலமைச்சரை முன்னிறுத்தி தனிநபர் துதியாக தொடர்ந்து மக்கள் பேரவை இயங்கினால், பிரபாகரனுக்குப் பின்னான தமிழினம் போலவே இன்னொரு முட்டுச் சந்துக்கு ள் போய் நிற்க வேண்டி வரும்’* என்றான் பேப்பர் தம்பி.

அதனைக் கேட்ட வாத்தியார், *“இந்த செயற்பாடுகளில் புலம்பெயர்ந்தோர் அமைப்புகளையும் இணைக்கும் பாலமாக தமிழ் மக்கள் பேரவை செயற்பட வேண்டும். இப்போது கங்கையில் சடலங்கள் எரிப்பது போல, தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் ஆளுக்கொரு அமைப்பும், திசைக்கொரு நிகழ்வுமாக சின்னாப்பின்னப்பட்டுப் போய் இருக்கிறம். ஆனால் தீர்வு என்பது இங்குள்ளவர்களுக்கானதே தவிர, புலம்பெயர்ந்தோருக்கானது அல்ல. அதனால் எங்கடை தேவைகள், விருப்பங்களை புரிந்து கொள்ளாமல் புலம்பெயர்ந்தவர்கள் உதவ முடியாது. ஆகவே, இந்த இணைப்புப்பணியும் தமிழ் மக்கள் பேரவையின் கையிலேயே இருக்கு. அவையும் ‘இவை என்ன சொல்லுறது, நாங்கள் என்ன செய்யிறது என்று நினைத்தால் நம்மால் என்ன செய்ய முடியும்”* என்றபடியே எழுந்து நடந்தார்.

மற்றவர்களும் அவரைத் தொடர்ந்தனர். கச்சான் கடையைக் கட்டத் தொடங்கினாள் செல்லாச்சி. சந்தியடி அமைதியானது.



# செப்புகிறார்... சின்னப்பு!

*வணக்கமுங்கோ!*

சில இடங்களில தங்களைக் கனக்கப் படிச்ச மனிசராயும் அதே நேரத்தில நாகரிகமாகவும் காட்டிக்கொண்டு, நளினமான ஈ·ங்கிலீசு, சிங்களம் கதைக்கிற சில பேரின்ர செயற்பாடுகளையும், அவையளின்ர பேச்சுக்களையும் பார்க்கேக்க, ஒரு பக்கம் எரிச்சலாயும் மறுபக்கத்தில அவையளுக்காக இரக்கப்படவும், அனுதாபப்பட வேண்டியும் கிடக்குது பாருங்கோ!

நான் இப்ப இதில என்னத்தைச் சொல்ல வாறன் எண்டால்–

எங்கட வடக்கு மாகாண ஆளுநர் இருக்கிறாரல்லோ! அவர் கிட்டடியில ஒரு விசயத்தை 'வெரி சிம்பிளாக' சொல்லிப்போட்டு இருக்கிறார். சனங்களும் அவர் சொன்னதைப் குறிச்சு, தங்களுக்குள்ள பலதும் பத்துமாகப் பறைஞ்சுபோட்டுப் பேசாமல் இருக்குதுகள்.

அவர் என்ன சொன்னவரெண்டால் –

போரில இடம்பெற்ற குற்றங்களை மறக்க வேணும்; கடந்த காலத் தவறுகளுக்கு மன்னிப்பு வழங்க வேணுமெண்டு சொல்லியிருக்கிறார்.

உண்மையில இந்தாள் சுய நினைவிலதான் கதைச்சாரா? இல்லாட்டி ஆரேனும் சொல்லிக்கொடுத்து சுய புத்தியிழந்து பேசினாரா.... எண்டு யோசிக்க வேண்டிக் கிடக்குது.

ஏனெண்டாப் பாருங்கோ! ஆளுநர் சொல்லுற மாதிரி போர்க் குற்றங்களை எழுந்த மானமாக மறந்து விட்டுப் போறதுக்கு, அது ஒண்டும் அரிவரி படிக்கிற குழந்தைப் பிள்ளையளின்ர 'அடிச்சுத் தொட்டு' விளையாடுற விளையாட்டு இல்லை.

வன்னிப் போரானதும், அதுக்குள்ள நடந்த சம்பவங்களும் வரலாற்றில பதிஞ்சிருக்கிற ஒரு மாறாத வடு. அந்த வடுவைப் போக்காட்டுறது எண்டால் சும்மா இலேசுப்பட்ட காரியமில்லை எண்டதை எல்லாரும் உணர வேணும்.

சனம் பட்ட அவலத்தையும், அநியாயமான உயிர் பறிப்புகளுக்கான குற்றங்களையும் மூடி மறைச்சு இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இப்படிக் காலத்தைக் கடத்தப் போகினமோ தெரியாது.

ஆட்டிலறிச் ஷெல், பத்திஞ்சிச் ஷெல், ஐஞ்சிஞ்சிச் ஷெல், மல்ரிபெரல், துவக்குச் சூடுகளால சனம் செத்தது ஒரு புறமிருக்க, பசி பட்டினி, நோய்த் தாக்கங்கள், சாமான் சக்கட்டு இல்லாத நிலை, உளத் தாக்கம், சொந்த பந்தங்களின் இறப்புகள்; இழப்புகள், ஆமி வாறான்.... எண்டு ஒவ்வொரு இடமாக அலைஞ்சு திரிஞ்சது... எத்தனை கஷ்டம் துன்பங்களை அனுபவிச்சு மீண்ட வன்னிச் சனத்துக்குத் தான் தெரியும் அதனுடைய 'வலி' எப்படிப் பட்டதெண்டு.

அந்தச் சனத்தின்ர வலிகளை அதுவும் மரண வலிகளை போருக்கு வெளியில ரி.வியிலையும் பேப்பருகளிலையும் புதினமாகவும், பொழுது போக்காகவும் பார்த்த ஆள்களுக்கு போரின் வலிகளைப் புரிஞ்சு கொள்ள முடியாதெண்டது நிறுத் திட்டமான உண்மை கண்டியளே!

சரி... ஆளுநர் சொல்லுற மாதிரி – கடந்த காலத் தவறுகளை மன்னிச்சிட்டுப் போகலாம். ஆனா மறக்க ஏலாது. ஏனெண்டால், அவை மறக்கக் கூடிய நிகழ்வுகள் அல்ல!

கடந்த காலத்தவறுகளை நாங்கள் மன்னிக்க வேணும்... எண்டு ஆளுநர் விரும்புறதாக இருந்தால் – சண்டைக்குப் பிறகும் முன்னமும் புலியள் எண்டு ஐமிச்சத்தில ஆமிக்காரால பிடிக்கப்பட்டு, இண்டைக்கு தடுப்புக் காவலிலை வைச்சிருக்கிற எங்கட பெடி, பெட்டையளை மனசார மன்னிச்சு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி, ஒரு நல்ல சமாதான இன ஐக்கியத்தை வெளிப்படுத்திக் காட்டினால், எங்களுக்கும் மன்னிக்கிற அளவுக்கு மனநிலை மாறுமல்லோ!

அதையொருக்கா முதல்ல செய்யுங்கோவன். செய் வியளே?

சரி... அது கிடக்கட்டும். நான் இன்னொரு விசயத்தைச் சொல்லவாறன் –

"மனக்காயங்களைக்காலம் ஆற்றுப்படுத்தும்..." எண்டு சொல்லுறவையள். போரால எங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட மனக் காயங்களை இனிவரும் காலம் ஆற்றுப்படுத்தக் கூடும்; ஆற்றுப்படுத்த வேணும்... எண்டதுதான் எங்கட சனத்தின்ர விருப்பமும்.

ஆனா– ஆளுநர் மறக்க வேணும் எண்டு சொல்லுறதை, நாங்களும் மறக்க வேணும் எண்டு நினைக்கிறதை, கடந்த கால இன அழிப்புப் போரில 'ருசி கண்ட சில பூனையள்' விடுகுதுகளில்லையே...

நான் இதில என்னத்தை வெளிப்படையாச் சொல்ல வாறன் எண்டால் – லண்டனில உள்ள இலங்கை தூதரகத்தில பாதுகாப்பு ஆலோசகராக வேலை பார்த்த பிரிகேடியர் ஒருவர் அங்கை போரட்டத்தில ஈடுபட்ட எங்கட தமிழ்ச் சனத்தைப் பார்த்து, "கழுத்தை அறுத்துவிடுவேன்" எண்டு சைகை மூலம் எச்சரித்ததாக உங்கை ஊருலகம் முழுக்க நாறிக் கொண்டிருக்க, வட மாகாண ஆளுநர் என்னடாவெண்டால், போர்க் குற்றங்களை மறக்கச் சொல்லியும் மன்னிக்கச் சொல்லியும் தமிழ்ச் சனத்தை 'நோண்டிக்' கொண்டிருக்கிறார்.

நாங்கள் மறக்கிறதுக்கும் மன்னிக்கிறதுக்கும், முதல்ல போரை வழி நடத்தின ஆள்களின்ர மனசில பெரியதொரு நல்ல மாற்றம் வரவேணும். அப்பதான், ஆளுநருடைய பேச்சு எங்கட சனங்களுக்கு மத்தியில எடுபடும். என்ன நான் சொல்லுறது சரிதானே பிள்ளையள்...?



# சமத்துவம் ஏன் அவசியமாகிறது?

ஜேர்மனியைச் சேர்ந்த தத்துவவாதியான வில்ஹெல்ம் ப்ரெட்ரிக் ஹெகல், தனது மகத்தான படைப்பான 'பிலாசபி ஆஃப் ரைட்' நூலில் (1820 ஆம் ஆண்டு) வறுமையால் ஏற்படும் தார்மிகச் சீரழிவு மற்றும் சேதாரங்கள் குறித்துக் கொஞ்சம் கசப்புடன் எழுதினார்.

வறுமை என்னும் நிலை வெறும் பிறழ்வு அல்ல; தொழில் மயமான சமூகம், அதிகமான உற்பத்தி மற்றும் குறைவான நுகர்வு உருவாக் கிய சமூக அமைப்பின் வெளிப்பாடு என்று விவாதிக்கிறார். சமூகம், தன்னால் பாதிக்கப்பட்டவர்களை ஒரு கூட்டு வாழ்க்கையின் சிதிலமான விளிம்புப் பிரதேசத்துக்குள் துரத்தும் காரியம் இது.

இங்கே, குடிமைச் சமூகத்தின் ஒற்றுமையால் கிடைக்கும் அனுகூலங்கள் கிடைக்காத நிலைக்குப் புறந்தள்ளப்படும் ஏழைகள், கடைசியில் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத அணுக்களின் குவியலாக, கும்பலாக, கந்தைகளாக ஆக்கப்படுகின்றனர்.

பெரும் மக்கள் திரளின் வாழ்க்கைத் தரம், குறைந்தபட்ச தேவைகளைக் கூட நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் போகும்போது, எது சரி, எது தவறு என்பது தொடர்பான உணர்வையும், நேர்மை, சுயமரியாதை போன்றவை குறித்த உணர்வையும் மக்கள் இழந்துபோவதை நாம் காண நேர்கிறது என்று ஹெகல் எழுதுகிறார்: இயற்கைக்கு எதிராக மனிதன் எந்த உரிமை யையும் கோர முடியாது. ஆனால் சமூகம் என்பது உருவாகிவிட்டால், ஒரு வகுப்பினர் மற்றொரு வகுப்பினருக்குச் செய்யும் அநீதியாக வறுமை உடனடியாக உருவெடுக்கிறது.

வறுமை என்பது சமூக நிகழ்வு என்கிறார் ஹெகல். முதலாவதாக, வறுமையை உருவாக்குவதிலும் மறுஉருவாக்கம் செய்வதிலும் சமூகம் உடந்தையாக இருக்கிறது. ஒரு கோணலான பொருளாதாரத்தின் விளைவு கடும் வறுமைதான்.

இரண்டாவது, துரதிர்ஷ்டவசமான பின்விளைவுகளை, அதாவது மனிதர்களை நிலைகுலையச் செய்யும்படியான துயரம் போன்ற நிலைகளை, வறுமை உற்பத்தி செய்கிறது.

மூன்றாவது, பெரும் எண்ணிக்கையிலான ஏழை மக்களின் இருப்பு என்பது சமூக ஒழுங்குக்கு நேரடியான அச்சுறுத்தலும்கூட. ஏனெனில், சமூகத்தின் அனுகூலங்களிலிருந்து விலக்கப்படுவதால் அவர்கள் நியாயமாகவே விரக்தியில் இருப்பார்கள். சொந்த மக்களுக்குக் காலம் காலமாகத் தான் இழைத்த அநீதிகளைச் சரிசெய்வதற்கு மறுக்கும் சமூகம் குறித்த ஹெகலின் விமர்சனத்தை, பொருளாதார வல்லுநர் தோமஸ் பிக்கெட்டி, அவர் சகா லூகாஸ் சான்ஸெல் வெளியிட்டிருக்கும் ஆய்வு முடிவுகளின் பின்னணியில் வைத்து தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டிய சமயம் இது.

# பெண் வேட்பாளர்களுக்கு...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளையில், பெண் வேட்பாளர்களின் குடும்பத்தினர் தாக்கப்படும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. வேட்பாளர்களின் கணவன், தந்தை, குழந்தை போன்றவர்கள்கூட மிரட்டலுக்கும், தாக்குதலுக்கும் உள்ளாகியுள்ளனர் என்று முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

பெண் வேட்பாளர்களுக்கு எதிரான தேர்தல் வன்முறைகள் உண்மையில் வெளியில் பேசப்படுவதைவிட மிகவும் மோசமான அளவுக்கு இருந்தன என்று கூறும் பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பை சேர்ந்த ஷெரீன் சரூர், பெண் வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றமையால் தமது குடும்பத்தினரால் தாக்கப்படும் சம்பவங் கள், குடும்பங்கள் பிரியும் நிலைகூட ஏற்பட்டுள்ளன என்றும் கூறுகிறார்.

**நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் பிரச்சாரங்கள்**

தமிழ் சமூகத்திலும் பெண் வேட்பாளர்களுக்கு எதிரான குடும்ப வன்முறைகள் நடந்துள்ளன என்று கூறும் மனித உரிமை அமைப்புக்கள், முஸ்லிம் மௌலவிமார் பெண் வேட்பாளர்களை இஸ்லாத்துக்கு முரணானவர்கள் என்று வர்ணித்த சம்பவங்கள் குறித்தும் கவலை வெளியிட்டுள்ளனர்.



**சமூக ஊடகங்களில் அவதூறு**

சமூக ஊடகங்களில் பெண் வேட் பாளர்கள் மீது அவதூறு கூறும் பதிவு களை திட்டமிட்ட வகையில்மேற்கொண்டுஅவர்களின்நற்பெயரை கெடுக்கும் சம்ப வங்கள் கணிசமாக நடந்திருக்கின்றன என்றும் ஷெரீன் சரூர் கூறியுள்ளார்.

குடும்பத்தினரால் பெண் வேட்பாளர்கள் தாக்கப்பட்ட சில சம்பவங்கள் தேர்தல் வன்முறைக்குள் வராமல் போய்விடும் ஆபத்து இருப்பது குறித்தும் அவர் கூறியுள்ளார்.

**- பி.பி.ஸி**

# வடகொரியாவுடன் நட்பு பாராட்டுவதை தவிர்த்தார் அமெரிக்கத் துணை அதிபர்

பியோங்சங்,பெப்.11

குளிர்கால ஒலிம்பிக் தொடக்க விழாவின்போது அமெரிக்கத்துணை அதிபரின் அருகே இருந்தும் அவரை கண்டுகொள்ளாத வடகொரிய அதிபரின் சகோதரி கிம் யோ ஜாங்-கின் மனோதிடம் வியக்க வைத்துள்ளது.

தென்கொரியாவில் நேற்று ஆரம்பமாகிய குளிர்கால ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழாவில்பங்கேற்கவடகொரிய நாடாளுமன்றத் தலைவர் கிம் யாங் நம் தலைமையில் கிம் ஜாங் உன்-னின் இளைய சகோதரி கிம் யோ ஜாங் ஆகியோர் குழுவாகச்சென்றிருந்த னர்.

பியூங்சங் நகரில் நேற்று நடந்த தொடக்க விழாவில் தென்கொரிய அதிபர் மூன் ஜே-இன், அமெரிக்க துணை அதிபர் மைக் பென்ஸ், ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே ஆகியோரும் கலந்து கொண்டனர். தொடக்க விழா மேடையில் கிம் யோஜாங் வந்தபோது, தென்கொரிய அதிபர் மூன் ஜே கை குலுக்கி வரவேற்றார்.

அதிகார பூர்வமாக ஒலிம்பிக் ஆரம்பித்தது என அறிவிக்கப்பட்டதும் வாணவேடிக்கைகள் நிகழ்த்தப்பட்டன. அந்தக் காட்சியை கிம் யோ ஜாங்-கும், மைக் பென்ஸும் அருகருகே நின்று கண்டுகளித்தனர். ஆனால், ஒருவர் முகத்தை



மற்றவர் ஏறெடுத்தும் பாராமல் இறுகிய முகத்துடனும் எதற்கும் அசைந்து கொடுக்காத மனோதிடத்துடனும் இருந்தனர்.

கிம் யோ ஜாங் உடன் வந்திருந்த வடகொரியா நாட்டு நாடாளுமன்றத் தலைவரும் அமெரிக்கத் துணை அதிபருடன்பேசவோ, கைகுலுக்கவோ முயற்சிக்கவில்லை.

கிம்ஜாங் உன்னின் இளைய சகோதரி கிம் யோ ஜாங் அல்லது அவருடன் சென்றிருந்த கிம் யாங் நம் இருவரில் யாராவது அமெரிக்கதுணை அதிபர் மைக் பென்ஸ் உடன் கை குலுக்கி இருந்தால் அங்கு காட்சியே மாறி இருக்கும் என அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமாவின் ஆசிய விவகாரங்களுக்கான ஆலோசகர் இவான் எஸ் மெடெரியோஸ் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், இதைப்போன்ற கைகுலுக்கல் நடந்திருந்தால் அது, வடகொரியாவுடன் அமெரிக்காநெருக்கம் காட்டுகின்றது என ஒரு விளம்பர யுக்தியை வடகொரியாவுக்குப் பெற்றுத்தந்து விடலாம் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தீர்மானித்து இருக்கலாம் என அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ப)

## தென்கொரியா அதிபருக்கு வடகொரியா அழைப்பு



பியாங்யோங்,பெப்.11

வடகொரியாவுக்கு வருமாறு தென்கொரிய அதிபர் மூன் ஜெய்க்கு வடகொரிய அதிபர் கிம் ஜாங் - உன் அழைப்பு விடுத்துள்ளார்

தென் கொரியாவின் பியோங்யாங் நகரில் நடக்கும் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளுக்கான தொடக்கவிழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அதிகாரபூர்வ விருந்தில் வடகொரியா அதிகாரிகளுடன்மேசையைப்பகிர்ந்துகொள்ளாமல் அமெரிக்க துணை அதிபர்மைக்பென்ஸ்தவிர்த்தார்.

வடகொரியா குழுவின் தலைவரான கிம் யோங் - நாம் அந்த விருந்தில் கலந்துகொண்டார். எனினும், அவர்கள் இருவரும் நேரடியாக பார்த்துக்கொள்வதையும் பேசிக்கொள்வதையும் தவிர்த்தனர் என்று யோன்ஹாப் செய்தி முகமை தெரிவிக்கிறது.

தென்கொரிய அதிபர் மூன் ஜேயின் மற்றும் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே ஆகியோர் கிம் யோங் - நாம் உடன் கை குலுக்கியபோது பென்ஸ் அதைத் தவிர்த்துள்ளார். அந்த விருந்து தொடங்கிய ஐந்து நிமிடங்களிலேயே பென்ஸ் அங்கிருந்து வெளியேறிவிட்டார்.

குளிர்கால ஒலிம்பிக் தொடங்கும் நாள் அமைதி தொடங்கும் நாளாக நினைவுகூரப்படும் என்று தென்கொரிய அதிபர் மூன்ஜே அவ்விருந்தின்போது கூறியுள்ளார்.

இதனிடையே மூன் ஜேயின், வடகொரிய அதிபர் கிம் ஜோங் - உன்னின் இளைய சகோதரி கிம் யோ - ஜாங்கை ஒலிம்பிக் தொடக்கவிழாவின் போது நேரில் சந்தித்துக் கை குலுக்கினார்.

வடகொரியாவுக்கு வருமாறு தென்கொரிய அதிபர் மூன் ஜெய்க்கு வடகொரிய அதிபர் கிம் ஜாங் - உன் அழைப்பு விடுத்துள்ளார். வடகொரிய அதிபர் எழுதிய கடிதத்தை அவரது தங்கை கிம் யோ - ஜாங் தென்கொரிய அதிபரிடம் அளித்துள்ளார். 1953ஆம் ஆண்டுக்குப் பிறகு முதன்முறையாக தென்கொரிய அதிபருடன் வடகொரிய அதிபர் சந்திக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிரியாவில் அரசுப் படைகள் தாக்குதல்; பொதுமக்கள் 200 பேர் பரிதாபச் சாவு

டமாஸ்கஸ்,பெப்.11

உள்நாட்டுப் போரால் நிலைகுலைந்து கிடக்கும் சிரியாவில் கடந்த 4 நாள்களாக அரசுப் படையினர் நடத்திய ஆவேசத் தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் 200 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவில் அதிபர் பஷர் அல் அசாத்தின் ஆட்சியை அகற்ற நடைபெற்று வரும் ஆயுதப் புரட்சி மற்றும் அங்குள்ள போராளி குழுக்களுக்கு இடையில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில் 3 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பலியாகியுள்ளனர். அங்கு போராளிகள் பிடியில் இருக்கும் முக்கிய பகுதிகளைக் கைப்பற்றவும் அரசுப் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில், சிரியாவின் பழங்கால தலைநகராக இருந்த கிழக்கு கவுட்டா பகுதிக்கு உட்பட்ட எர்பின் மற்றும் ஜிஸ்ரின் நகரங்களில் போராளிகள் வசமுள்ள பகுதிகள் மீது சிரியா அரசின் தரைப்படை மற்றும் விமானப்படைக்குச் சொந்தமான போர் விமானங்கள் கடந்த ஒருவார காலமாக உச்சகட்டத் தாக்குதல் நடத்தி வருகின்றன.



பள்ளிகள் மற்றும் சந்தைப் பகுதிகளில் அரசுப் படைகள் நடத்திய ஆவேச தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 200 பேர் உயிரிழந்தனர் என அங்குள்ள போர் நிலவரங்களை கவனித்துவரும் பிரிட்டன் நாட்டுக் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

நேற்று ஒரேநாளில் பாடசாலைக்கு அருகில் நடந்த தாக்குதலில் 15 குழந்தைகள் உள் பட 58 பேரும், சந்தைப் பகுதியில் 9 குழந்தைகள் உட்பட 21 பேரும் உயிரிழந்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

## சிறையில் போடுவதை விட சுட்டுக் கொன்றுவிடுங்கள்

### பிலிப்பைன்ஸ் அதிபர்

என் மீது உள்ள குற்றம் நிரூபிக்கப்பட்டால்என்னைச்சுட்டுக்கொன்று விடுங்கள், சிறையில் போடவேண்டாம் எனப் பிலிப்பைன்ஸ் அதிபர் ரோட்ரிகோ டுட்டர்டே கூறியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டில் போதைப்பொருள் கடத்தலை ஒழிக்க அதிபர் ரோட்ரிகோ டுட்டர்டே அதிரடி நடவடிக்கை எடுத்து வருகிறார். போதைப் பொருள் கடத்தல்காரர்களைக் கண்டதும் சுட்டுக் கொல்லுமாறு அவர் உத்தரவிட்டுள்ளார்.

ரோட்ரிகோ அதிபராக பதவியேற்றது முதல் சுமார் 4ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். பிலிப்பைன்ஸ் நாட்டில் போர்க் குற்ற நடவடிக்கைக் காலத்தில் நாள்தோறும் சுமார் 44 பேர் கொலை செய்யப்பட்டனர் என அந்நாட்டுக் காவல்துறை தெரிவித்துள்ளது.

இதுதவிர, ஆட்சி மற்றும் நிர்வாகரீதியாகப் பல்வேறு சீர்திருத்தங்களையும் அவர் மேற்கொண்டு வருகிறார். நாட்டின் பன்முகத்தன்மையை மாற்றி ஒரு முகப்படுத்தப்பட்ட மத்திய ஆட்சிக்கு அதிக அதிகாரம் அளிப்பதன் மூலம் அனைத்து மாகாணங்களிலும்சமச்சீரான ஆட்சிமுறையை அறிமுகப்படுத்தவும் ரோட்ரிகோ டுட்டர்டே முயன்று வருகிறார்.

இது தொடர்பாக பத்திரிகையாளர்கள் சந்திப்பில் பேசிய ரோட்ரிகோ, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்என்னிடம்விசாரணை நடத்தலாம். இவ்வழக்கு விசாரணை நடத்தும் போது நானும், பென்சவுடாவும் மட்டும் தான் இருக்க வேண்டும். நான் மனித இனத்திற்கு எதிராக குற்றங்கள் செய்தமை நிரூபிக்கப்பட்டால் எனக்குத் தண்டனை வழங்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது. என்னைச் சிறையில் போடாமல், சுட்டுக்கொன்று விடுங்கள் எனத் தெரிவித்துள்ளார்.

## பா.ஜ.கவின் ஆதரவு இருப்பதால்தான் தமிழகத்தில் அ.தி.மு.க. இயங்குகிறது

### தினகரன்

தஞ்சையில் ஆர்.கே.நகர் தொகுதி எம்.எல்.ஏ. தினகரன் நிருபர்களிடம் கூறியவை வருமாறு:-

மக்களுக்கு எதிரான திட்டங்களை அரசு கைவிட வேண்டும். எம்.எல்.ஏக்கள் தகுதி நீக்க வழக்கு மற்றும் தி.மு.க. தொடர்ந்த வழக்குகளின் தீர்ப்புக்குப் பின் ஆட்சி மாறும்.

ஆர்.கே.நகரில் மக்களுக்கான திட்டங்களை தமிழக அரசு முடக்கியுள்ளது. தர்மயுத்தம் என்பது பதவிக்காக நடந்தது, பன்னீர்செல்வத்தின் உறவினர்களே தற்போது பதவியில் உள்ளனர்.

தஞ்சையில் சத்துணவு பணியாளர் நியமனத்தில் தவறான முறை பின்பற்றப்பட்டுள்ளது, ஆட்சியர் பதில்சொல்ல வேண்டி வரும்.மத்திய அரசின் கிளை நிறுவனமாக அ.தி.மு.க செயற்படுகிறது. பா.ஜ.கவின் ஆதரவு இருப்பதால் தமிழகத்தில் ஆட்சி ஓடுகிறது என்று தெரிவித்துள்ளார்.

# சீருடை மாறினாலும் வரலாறு மாறுமா?

நான்காவது ஒரு நாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி ரோஜா நிறத்திலான சீருடையை அணிந்து விளையாடவிருக்கிறது. மார்பகப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிதி திரட்டும் வகையிலேயே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே இதே கருத்தை மையமாகக் கொண்டு இதே நிறச் சீருடையுடன் தென்னாபிரிக்கா ஐந்து முறை விளையாடியுள்ளது. அந்த ஐந்து ஆட்டங்களிலும் தென்னாபிரிக்கா பெரு வெற்றி பெற்றிருக்கிறது.

இந்தியாவுக்கு எதிராக 2013 டிசெம்பரில் நடைபெற்ற ஒரு நாள் போட்டியில், ரோஜா நிறச் சீருடையில் விளையாடிய தென்னாபிரிக்க அணி, 141 ஓட்டங்களால் இந்தியாவை வெற்றி கொண்டது.

அதுபோலவே, ஏபிடிவில்லியர்ஸ் இந்த ரோஜா நிறச் சீருடையை அணிந்து விளையாடிய ஒரு சந்தர்ப்பத்தில், மேற்கிந்தியத் தீவுகள் அணியை எதிர்த்து 44 பந்துகளில் 149 ஓட்டங்களை விளாசித் தள்ளியிருந்தார்.

2013இல் இந்தியாவுக்கெதிரான போட்டியிலும் அவர் 47 பந்துகளில் 77 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

காயம் காரணமாக ஒதுங்கியிருந்த ஏபி டி வில்லியர்ஸ், நடைபெறவுள்ள நான்காவது போட்டியில் ரோஜா நிறச் சீருடையில் களமிறங்கவுள்ளமையால், பலத்த எதிர்பார்ப்பு தென்னாபிரிக்க ரசிகர்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

இப்போட்டியைக் கண்டுகளிக்க மைதானத்துக்கு வரும் இரசிகர்களும் ரோஜா நிற ஆடையை அணிந்து வருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.




## ஐ.சி.சி. இயக்குநராக இந்திரா நூயி நியமனம்



சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி) தனிப்பட்ட இயக்குநராக பெப்சி நிறுவனத்தின் தலைவர் இந்திராநூயிநேற்று நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஐ.சி.சி.யின் முதல் தனிப்பட்ட பெண் இயக்குநர் இந்திரா நூயி என்பது குறிப்பிடத்தக்கது. அவரது பதவிக் காலம் 2 ஆண்டுகள் ஆகும். இது தொடர்பாகஐ.சி.சி.சேர்மன் சாங் மனோகர் கருத்துத் தெரிவிக்கையில், ஐ.சி.சி. நிர்வாக சபையில் இணைய இருக்கும் இந்திரா நூயியை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். நிர்வாக திறமையை மேம்படுத்தும் நோக்கத்தின் ஓர் அங்கமாக அவர் நியமனம் செய்யப்பட்டு இருக்கிறார் என்றார்.

## விக்ரம் – ராஜன் – கங்கு வெற்றிக்கிண்ணம் – 2018

விக்ரம் – ராஜன் – கங்கு வெற்றிக்கிண்ணத்திற்காக கொக்குவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் வருடா வருடம் நடத்தும் 30 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் லீக் முறையில் இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் கே.சி.சி.சி. அணியும், ஜொலிஸ்ரார் அணியும் மோதவுள்ளன. தொடர்ந்து பிற்பகல் ஒரு மணிக்கு ஓல்ட்கோல்ஸ் அணியும், யாழ் பல்கலைக்கழக அணியும் மோதவுள்ளன. ஏற்கனவே லீக் முறையில் நடைபெற்ற 4 போட்டிகளின் பிரகாரம் ஓல்கோல்ஸ் அணியும் பல்கலைக்கழக அணியும் இறுதிப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த இறுதிப்போட்டி 18.02.2018 ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

## ஒரு நாள் போட்டியில் கோஹ்லியே சிறந்தவர்

**கிளார்க் புகழாரம்**

ஒருநாள் போட்டி அனைத்து காலகட்டத்திலும் கோஹ்லியே உலகின் சிறந்த வீரர் என்று ஆஸ்திரேலிய முன்னாள் கப்டன் கிளார்க் கூறியுள்ளார்.

கோஹ்லி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இந்த நிலையில் ஒருநாள் போட்டி அனைத்துக் காலகட்டத்திலும் கோஹ்லியே உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்று ஆஸ்திரேலிய முன்னாள் கப்டன் கிளார்க் கூறியுள்ளார். டுவிட்டர் பக்கத்தில் அவர் இவ்வாறு தெரிவித்து உள்ளார்.

தென்னாபிரிக்காச் சுற்றுப்பயணத்தில் கோஹ்லி இதுவரை 3 சதம் அடித்துள்ளார். ஒருநாள் போட்டி கப்டன் பதவியில் அதிக சதம் எடுத்த சாதனை வீரராக அவர் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டாக்கா டெஸ்ட்:

## வங்கப்புலிகளை வழித்துத் துடைத்து 215 ஓட்டங்களால் வென்றது இலங்கை




பங்களாதேஷ் அணிக்கெதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 2 ஆவது போட்டியில் 215 ஓட்டங்களால் வெற்றிபெற்ற இலங்கை அணி 1:0 என தொடரைக் கைப்பற்றியது.

ரங்கன ஹேரத் மற்றும் அகில தனஞ்சய ஆகியோர் சுழலில் மிரட்ட பங்களாதேஷின் 2 ஆவது இன்னிங்ஸ் முடிவுக்கு வந்த பங்களாதேஷ் அணிக்கெதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 339 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நிர்ணயித்திருந்தது.

பங்களாதேஷுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி அவ்வணியுடன் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்று விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்கு மிடையில் சிட்டகொங்கில் இடம்பெற்ற முதல் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது. இந்த நிலையில் இரு அணிகளுக்கு மிடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டி பங்களாதேஷின் டாக்காவில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது. இந்த நிலையில் பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இலங்கை அணி சார்பில் பந்து வீச்சில் சுரங்க லக்மால் மற்றும் அகில தனஞ்சய ஆகியோர் தலா 3விக்கெட்டுக்களைவீழ்த்தியுள்ளனர்.

110 ஓட்டங்களால் முன்னிலை வகித்த இலங்கை அணி தனது 2 ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. தனது 2 ஆவது இன்னிங்ஸில் இலங்கை அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது. இதையடுத்து 339 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு பங்களாதேஷ் அணிக்கு இலங்கை அணியால் நிர்ணயிக்கப்பட்டது.

இன்று போட்டியின் 3 ஆவது நாளில் 339 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 123 ஓட்டங்களைப்பெற்று 215 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இலங்கை அணி சார்பில் பந்துவீச்சில் அசத்திய அகில தனஞ்சய 5 விக்கெட்டுகளையும் ரங்கண ஹேரத் 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

தொடரின் ஆட்டநாயகனாகவும் போட்டியின் ஆட்ட நாயகனாகவும் ரொஷேன் சில்வா தெரிவு செய்யப்பட்டார். இதில், அடுத்தடுத்த ஆட்டங்களில் அருமையாக ஆடிய ரொஷேன் சில்வா தொடர்ச்சியாக தனது நான்கு அரைச் சதங்களைப் பூர்த்தி செய்தார்.

சுழல் மன்னன் ரங்கண ஹேரத் டெஸ்ட் வரலாற்றிலேயே அதிதிறமையான இடது கை சுழற்பந்து வீச்சாளர் என்ற உலக சாதனை படைத்துள்ளார். அவர் இது வரை 415 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## கோஹ்லியின் ஆக்ரோஷம் என்னைக் கவர்ந்துள்ளது

இந்திய அணியின் கப்டன் விராட் கோஹ்லியின் ஆக்ரோஷ அணுகுமுறை என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளது என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் ஷாகித் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

சுவிட்ஸர்லாந்தில் நடைபெற்று வரும் ஐஸ் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்று


அப்ரிடி

வரும் அப்ரிடி, போட்டிக்கு இடையே அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:- தற்போதைய சூழலில் உலகின் தலைசிறந்த ஒருவராக விராட் கோஹ்லி உள்ளார். களத்தில் ஆக்ரோஷமாகச் செயற்படும் விராட் கோஹ்லியின் அணுகுமுறை என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளது. எனது தொண்டு நிறுவனத்துக்காக துடுப்புமட்டை, ஜேர்சி ஆகியவற்றை விராட் கோஹ்லி தொடர்ந்து வழங்கி வருகிறார்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இந்திய அணியின் செயற்பாடு அபாரமாக உள்ளது. கடந்த காலங்களில் இந்திய அணி வெளிநாட்டு மண்ணில் தடுமாறு வதைத்தான் பார்த்து இருக்கிறோம். ஆனால், தற்போது தென்னாபிரிக்க அணிக்கு எதிராகச் சிறப்பான ஆட்டத்தை இந்திய அணி வெளிப்படுத்தி வருகிறது - என்றார்.

# வடக்கு வாக்களிப்புப் பதிவுகள் இவை...










நேற்றைய தேர்தலில் அமைச்சர் றிஷாத் பதியுதீன், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் பொது மக்கள் வடக்கில் ஆர்வத்துடன் வாக்களித்தனர்.

# மாவட்ட ரீதியான வாக்குப்பதிவு வீதம்

கொழும்பு, பெப்.11

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 65 முதல் 75 வீத வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

**மாவட்ட ரீதியான வாக்குப் பதிவு (வீதத்தில்)**

| | | | |
|---|---|---|---|
| கம்பஹா | - 75 | குருநாகல் | - 78 |
| களுத்துறை | - 80 | புத்தளம் | - 73 |
| மாத்தளை | - 80 | அநுராதபுரம் | - 85 |
| நுவரெலியா | - 70 | பொலன்னறுவை | - 75 |
| காலி | - 75 | பதுளை | - 65 |
| மாத்தறை | - 75 | மொனராகலை | - 80 |
| ஹம்பாந்தோட்டை | - 70 | கேகாலை | - 70 |
| யாழ்ப்பாணம் | - 76 | மன்னார் | - 77 |
| கிளிநொச்சி | - 76 | வவுனியா | - 72 |
| மட்டக்களப்பு | - 75 | முல்லைத்தீவு | - 78 |
| திருகோணமலை | - 85 | அம்பாறை | - 70 |



திருகோணமலை புனித மரியாள் மகளிர் வித்தியாலயத்தில் நேற்றுக் காலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித்தலைவருமான இரா. சம்பந்தன் வாக்களித்தார். (ஐ)



நேற்று நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் வாக்களித்தார். (ஐ)

# கிளிநொச்சியில் 3 சபைகளும் கூட்டமைப்பு வசமாகும் நிலை

கிளிநொச்சி, பெப்.11

உள்ளூராட்சித் தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று பிரதேச சபைகளையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையில் 21 வட்டாரங்களில் 16 வட்டாரங்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும், 05 வட்டாரங்களில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமாரின் சுயேச்சைக் குழுவும் வெற்றி பெற்றுள்ளன.

பச்சிலைப்பள்ளியில் எட்டு வட்டாரங்களில் 6 வட்டாரங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், 2 வட்டாரங்களில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமாரின் சுயேச்சைக் குழுவும் வெற்றி பெற்றுள்ளன. பூநகரிப் பிரதேச சபையில் 11 வட்டாரங்களில் அனைத்து வட்டாரங்களையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வென்றுள்ளது. (ஐ)

# தேர்தலின் பின்னரும் அமைதி பேணுங்கள்!

## மஹிந்த தேசப்பிரிய கோரிக்கை

கொழும்பு, பெப்.11

தேர்தல் வாக்களிப்பின்போது பெரியளவிலான அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறாத நிலையில் தேர்தலுக்குப் பின்னரான காலத்தையும் அமைதியான முறையில் பேணுமாறு தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வாக்களிப்பின்போது அமைதியான முறையில் செயற்பட்ட பொதுமக்கள் மற்றும் கட்சிகளுக்கு நன்றி. அனைத்துத் தொகுதிகளிலும் பெரும்பாலும் 60வீதமான வாக்குகள் பதிவாகியுள்ளன - என்றார். (ஐ)

# வாக்களிக்க முடியாத வாகனச் சாரதிகள்

வவுனியா மாவட்டத்தில் தேர்தல் கடமைக்காக வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனங்களின் சாரதிகள் வாக்களிக்க முடியாத நிலைக்கு உள்ளாகினர் எனத் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டத்தில் தேர்தல் பணிக்காகத் தனியார் வாகனங்கள் பல வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளன. இந் நிலையில் குறித்த வாகனங்களின் சாரதிகள் கடமையில் இருந்து விலகிச் செல்ல முடியாத நிலை காணப்பட்டதால் அவர்கள் வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

தமது வாக்களிப்பு நிலையங்களில் இருந்து தூரப் பிரதேசங்களுக்கு வாகனங்களில் கடமைக்குச் சென்றுள்ளமையால் வாக்களிக்கமுடியாத நிலை உள்ளதாகவும், அரச அதிகாரிகள் தம்மை வாக்களிக்கச் செல்ல அனுமதி மறுத்துள்ளனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (ஐ)



## தெற்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தேர்தலில் பெரும் பின்னடைவைச் சந்திக்க, மஹிந்த தலைமையிலான புதிய கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனஎதிர்பாராத வெற்றியைப் பதிவு செய்துள்ளதாகஅங்கிருந்துகிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சிக்குத் தெற்கில் பெரும் எண்ணிக்கையானோர் வாக்களித்துள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

தெற்கில் மஹிந்தவின் கட்சி 65 வீத சபைகளையும் ஐக்கிய தேசியக் கட்சி 25 வீத சபைகளையும் சுதந்திரக் கட்சி மிகக் குறைந்தளவான சபைகளையும்பெற்றுள்ளனஎனஉறுதிப்படுத்தப்படாத தகவல்கள் நேற்று முன்னிரவு தெரிவித்தன.

தெற்கில் அநேகமான பகுதிகளில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டு எதிரணிக்கு மக்கள் வாக்களித்துள்ளனர்.

உத்தியோகப் பற்றற்ற ரீதியில் வெளியாகியுள்ள தகவல்களின்அடிப்படையில்இவ்வாறு கணிசமான அளவு வாக்குகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனத் தெரியவருகின்றது.

குறிப்பாக அம்பாந்தோட்டை, கம்பஹா, காலி, மாத்தறைமற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் மஹிந்தவின் மலர்மொட்டு முன்னணி வகிப்பதாக உத்தியோகபற்றற்ற தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

## மாட்டுவண்டிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீள்குடியேற்றப்பட்ட எட்டு வருடங்கள் ஆகியுள்ளபோதும் உள்ளூர் வீதிகள் மாட்டு வண்டில்கள் மட்டுமே பயணிக்கக் கூடிய நிலையில் உள்ளன எனவும், எனவேதாங்கள் இந்த உள்ளூராட்சித்தேர்தலில்அனைவரினதும் கவனத்தை ஈர்ப்பதற்காகவே இவ்வாறு மாட்டுவண்டியில் சென்று வாக்குகளைப் பதிவு செய்தனர் எனவும் தெரிவித்துள்ளனர். (ஐ)

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மையுடன் வெற்றியீட்டியிருக்கின்றது. அத்துடன் கல்முனை மாநகர சபையை முதன்முறையாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மூதூர் பிரதேச சபையை முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்றும் சாத்தியம் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

## வலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பு வென்றுள்ளது. 3 வட்டாரங்களை ஈ.பி.டி.பியும், ஒன்றை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸும் பெற்றுக் கொண்டுள்ளன. (ஐ)

## வல்வெட்டித்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளது.

வல்வெட்டித்துறை நகரம், சிவன்கோவிலடி வட்டாரம், மயிலியதனை, கொம்மந்தறை, ரேவடி, பொலிகண்டி, வல்வெட்டி வடக்கு ஆகிய ஏழு வட்டாரங்களில் தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

தொண்டைமானாறு வட்டாரத்தை ஈ.பி.டி.பி. கைப்பற்றியுள்ளது. ஆதிகோவிலடி வட்டாரத்தில் சுயேச்சைக்குழு வெற்றி பெற்றுள்ளது.

வல்வெட்டித்துறைநகரசபையின் மொத்த ஆசனங்கள் 15 ஆகும். (ஐ)

## சாவகச்சேரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ்அதிகவட்டாரங்களில் வெற்றி பெற்றுள்ளது.

11 வட்டார ரீதியான உறுப்பினர்களையும், 7 விகிதாசார ரீதியான உறுப்பினர்களையும் கொண்ட சாவகச்சேரி நகர சபையில், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் 7 வட்டாரங்களில் வெற்றி பெற்றுள்ளது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு 3வட்டாரங்களிலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி 1 வட்டாரத்திலும் வெற்றி பெற்றுள்ளன.

விகிதாசார முறையிலான ஆசனப் பகிர்வு இன்னமும் அறிவிக்கப்படாதபோதிலும், இங்கு தமிழ்க் காங்கிரஸ் ஆட்சியமைக்கும் வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிய வருகிறது.

அதேவேளை, பருத்தித்துறை நகரசபையிலும் அதிகளவு வட்டாரங்களில் தமிழ்க் காங்கிரஸ்வெற்றிபெற்றுள்ளது. (ஐ)

## ஈ.பி.டி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்த வேட்பாளர் ஊர்காவற்றை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்துறை, தம்பாட்டிப் பகுதியில் உள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரின்வீட்டுக்குச்சென்றதமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் மற்றும் ஆதரவாளர்கள் சிலரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இந்தத் தாக்குதலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் படுகாயமடைந்துள்ளார். இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தாக்குதல் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர். (ஐ)

## வெற்றியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இரவு தமது இல்லத்திலிருந்து ஊடகங்களின் மூலம் இந்த விசேட கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்காபொதுஜனமுன்னணியின் வெற்றிக்காகப் பங்களிப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். பல்வேறு சவால்கள், பிரச்சினைகள், அழுத்தங்களுக்கு மத்தியில் மக்கள் எமது கட்சியின் வெற்றியை உறுதி செய்துள்ளனர்.

தோல்வியடைந்த தரப்பிற்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் வெற்றியாளர்கள் கொண்டாட்டங்களில் ஈடுபடவேண்டும்.

பொதுஜன முன்னணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டியவர்கள்ஏனையோருக்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும். – என்றார். (ஐ)

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள யாழ். மத்திய கல்லூரியில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நாடளாவிய ரீதியில் நேற்று நடைபெற்றது. நேற்றுக் காலை 7 மணிமுதல் மாலை 4 மணி வரை நடைபெற்ற தேர்தல் வாக்களிப்பில் 69 வீதமான வாக்குகள்பதிவுசெய்யப்பட்டுள்ளன எனத் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்தில் நேற்று மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்குகளை அளித்திருந்தனர். யாழ்.மாவட்டத்தில் 62 வீதமான வாக்களிப்பு பதிவாகியுள்ளது.

இதன்படியாழ்.மாநகரசபையில் 68.60வீதமும், வல்வெட்டித்துறைநகரசபையில்66.06 வீதமும், பருத்தித்துறை நகர சபையில் 71.27 வீதமும், சாவகச்சேரி நகர சபையில் 66.77 வீதமும், காரநகர் பிரதேச சபையில் 69.72 வீதமும், ஊர்காற்றுறையில்76.26வீதமும், நெடுந்தீவு பிரதேச சபையில் 74.89 வீதமும், வேலணை பிரதேச சபையில்69.45 வீதமும், வலி. மேற்கு பிரதேச சபையில் 66.11 வீதமும், வலி.வடக்குப் பிரதேச சபையில் 39.30 வீதமும், வலி.தென்மேற்கு பிரதேசசபையில் 67.32 வீதமும், வலி.தெற்குப் பிரதேச சபையில் 64.63 வீதமும், வலி.கிழக்கு பிரதேச சபையில்64.05 வீதமும், வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபையில் 60.71 வீதமும், பருத்தித்துறை பிரதேச சபையில் 63.44 வீதமும், சாவகச்சேரி பிரதேச சபையில்59.58 வீதமும், நல்லூர் பிரதேச சபையில்64.20 வீதமுமாக மொத்தம் 61.92 (அண்ணளவாக 62 வீதம்) வாக்குப் பதிவு இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 521 வாக்களிப்பு நிலையங்களும் 243 வாக்கெண்ணும் நிலையங்களும் அமைக்கப்பட்டிருந்தன. இதில் சில வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் சில கட்சியின் வேட்பாளர்கள்மற்றும்ஆதரவாளர்கள் தொடர்பில் சில முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆனாலும் பாரியளவிலானவன்முறைச்சம்பவங்கள் எவையும் பதிவாகவில்லை. சிறிய, சிறிய பிரச்சினைகள் தொடர்பில் எமக்கு தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு உடனடிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்தன. இதனால் மக்கள் மிக அமைதியாக ஆர்வத்துடன் வாக்களித்தமையையும் காணக் கூடியதாக இருந்தது. – என்றார். (ஐ-7)

## காரைநகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறவுள்ளன.

இதன்படி–

மூன்று ஆசனங்களை வைத்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் இரண்டு ஆசனங்கள் கொண்ட ஐ.தே.கட்சியும் –

மூன்று ஆசனங்களை வைத்துள்ள மீன் சின்ன சுயேச்சைக் குழுவுடன் இரண்டு ஆசனங்களைக் கொண்ட ஈ.பி.டி.பியும் அணி சேரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அப்படிச் சேர்த்தால் இரு தரப்பிலும் தலா ஐந்து, ஐந்து உறுப்பினர்கள் சேர, தொங்கு சபை அமையும் எனவும் கருதப்படுகின்றது. (உ)

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை 7 மணிக்கு வாக்கெடுப்பு ஆரம்பித்து மாலை 4 மணிக்கு நிறைவடைந்தது. விசேட பொலிஸ் பாதுகாப்புக்களுடன் பாரிய அசம்பாவிதம் ஏதுமின்றி அமைதியான முறையில் இந்த வாக்கெடுப்பு நிறைவடைந்தது. முல்லைத்தீவு மாவட்டத்தில் 78 வீத வாக்குப்பதிவு நடைபெற்றுள்ளது. – என்றார். (ஐ)

## தமிழரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மைக் காலத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் மட்டுமே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸும் அதனையும் உள்ளடக்கிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் போட்டியிட்டு வந்தன.

2013 இல் நடந்த மாகாண சபைத் தேர்தலிலும் அது பங்கு பற்றவில்லை.

2010 இலும், 2015 இலும் நடைபெற்றபொதுத்தேர்தல்களில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வெற்றி பெறாத நிலையில் –

அக்கட்சியையும் அதன் தலைமைத்துவத்தையும் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட கட்சி எனசம்பந்தன், சுமந்திரன் உட்பட கூட்டமைப்புத் தலைவர்கள் நையாண்டி பண்ணி வந்தனர்.

ஆனால் நேற்றைய தேர்தல் முடிவுகளும் அதில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக்கு விழுந்த வாக்குகளும் இத்தகைய நையாண்டிக் கருத்துக்களை இனிமேல் வீச முடியாத இக்கட்டை சம்பந்தன் – சுமந்திரன் தரப்புக்கு ஏற்படுத்தியிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இச்செய்தி அச்சுக்குள் போகும் வரையில் வடக்கு மாகாணத்தில் 4 கட்சிகள் பெற்ற வாக்குகளின் வீதம் பற்றிய விவரம் வெளியாகவில்லை.

எனினும், ஐம்பதுக்கும் குறைவான வீத வாக்குகளையே இலங்கை தமிழரசுக் கட்சி இம்முறை எடுக்கக் கூடிய சூழல் உருவாகியிருப்பதாக அவதானிகள் தெரிவித்தனர். (உ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தேர்தல் முடிவுகள் மூலம் வடக்கில் கூட்டமைப்பின் ஏகபோகம் பறிபோயிருக்கின்றது.

நேற்று இரவு இவ்விடயம் குறித்த 'டான்' தொலைக் காட்சியில் இடம்பெற்ற கலந்துரையாடல் நிகழ்வில் கருத்து வெளியிட்ட பிரபல அரசியல் விமர்சகரும் சர்வதேச உறவுகளில் தேர்ச்சி பெற்றவருமான பரந்தாமன் (பரன்), கூட்டமைப்பின் – தமிழரசுக்கட்சியின் – பேச்சாளர் சுமந்திரனின் செருக்குத்தனமான அரசியல் அணுகுமுறையே அதன் இந்தப் பின்னடைவுக்குப் பிரதான காரணம் என்றார். அது மறுக்கப்படமுடியாத உண்மை.

*'இந்தத் தேர்தல் முடிவுகளுடன் தென்னிலங்கையில் அரசியல் போக்குத் தலைகீழாகும். புதிய அரசமைப்பு முயற்சிகள் கிடப்பில் போடப்படும். அத்தகைய சூழலில்தான் என்ன செய்யப் போகிறது என்பதைக் கூட்டமைப்பின் தலைமை இந்தத் தேர்தலில் மக்கள் முன்வைப்பதன் மூலம் முற்கூட்டியே மக்களைத் தெளிவுபடுத்த வேண்டும். இனியும் இடைக்கால அறிக்கை குறித்துப் பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.'* – இப்படித் திரும்பத் திரும்பக் கூறியது 'காலைக்கதிர்' ஒன்றுதான்.

ஊடகங்களின் மற்றைய விடயங்களுக்கு அவ்வப்போது பகிரங்கப் பதில் கூறி பிரளயம் பண்ணும் சுமந்திரன், இந்த விடயத்தில் மட்டும் 'காலைக் கதிர்' நாளிதழின் ஆசிரியர் தலையங்கக் கேள்விகளுக்குப் பதில் தரவேயில்லை.

தென்னிலங்கையில் மஹிந்தர் விஸ்வரூபம் எடுத்துவிட்டார். அமைதி முயற்சி, புதிய அரசமைப்பு உருவாக்கம் எல்லாம் அடிபட்டுப் போகும் சூழலில், இதுவரையிலும் அது வரும், வரும் என்று பேசியே வாக்குத் திரட்டிய சுமந்திரன் உட்பட கூட்டமைப்பினர் இனி என்ன செய்வர்?

தங்கள் திட்டம் என்ன வென்பதை இனியாவது தெளிவு படுத்தினால் நல்லது.

-மின்னல்.

## நன்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுகள் எதுவும் வெளிவராத நிலையில் சமூக ஊடகங்களின் மூலமாக அவர் இவ்வாறு நன்றி கூறியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் குறிப்பிடத்தக்களவு வெற்றியை மக்கள் ஈட்டிக் கொடுத்துள்ளனர் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை மற்றும் நாட்டின் அனைத்து மக்களுக்கும் நன்றி கூறுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் தங்களது எண்ணங்களை வெளிப்படுத்தியுள்ளனர். மாற்றத்தை மக்கள் விரும்புகின்றார்கள் எனவும் நாமல் சுட்டிக் காட்டியுள்ளார். (ஐ)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலா ஓரிடத்திலும் வெற்றி பெற்றன.

தமிழரசுக்கட்சியின் முதல்வர் வேட்பாளர் இ.ஆனோல்ட் தமது வட்டாரத்தில் சுமார் அறுபது வாக்குகள் வித்தியாசத்தில் ஈ.பி.டி.பி. வேட்பாளரை வென்றார்.

கூட்டணிசார்பில் விஜயகாந்த் வென்றார். முஸ்லிம் வட்டாரத்தில் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வேட்பாளர்ஐ.தே.கட்சியில்வெற்றி பெற்றார். ஈ.பி.டி.பி. வேட்பாளருக்கு குருநகரில் வெற்றி கிட்டியது.

தமிழரசுக்கட்சிசார்பில்போட்டியிட்ட பேராசிரியர்சு.மோகனதாஸ், இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் சரா. புவனேஸ்வரன் ஆகியோர் தோற்றுப் போயினர்.

யாழ். மாநகர சபைக்கு விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் மேலும் 18 உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளனர்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் கீழ் கட்சிகளுக்குக் கிடைக்கும் ஆசன விவரம் இச்செய்தி அச்சுக்குப்போகும் வரைகிடைக்கவில்லை.

45 உறுப்பினர்களைக் கொண்ட யாழ். மாநகரசபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தனித்து ஆட்சியமைப்பதாயின் அதற்கு 23 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. வட்டார அடிப்படையில் 14 உறுப்பினர்களைப் பெற்றுள்ள தமிழரசுக்கு விகிதாசாரத்தில் மேலும் 9 உறுப்பினர்கள் கிடைப்பது துர்லபமே.

அதனால் இச்சபையில் யாரும் பெரும்பான்மை முடியாத நிலையில் தொங்கு நிலைமை நீடிக்கும் எனக் கருதப்படுகின்றது. (உ)



# தமிழக மீனவர்களை வஞ்சிக்கும் புதிய சட்டம்!

இலங்கை நாடாளுமன்றத்தில் சமீபத்தில் நிறைவேறியிருக்கும் சட்டத் திருத்தம், தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தையே நிலைகுலைய வைக்கும் வகையில் அமைந்திருக்கிறது. வங்கக் கடலில் மீன்பிடிப்பின்போது இலங்கை எல்லைப் பகுதிக்குள் தவறிச் செல்லும் தமிழக மீனவர்களுக்கு கடும் அபராதம் விதிக்க இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது.

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் அத்துமீறித் தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் தொடர்ந்து நடந்துவரும் நிலையில், சட்டரீதியாக மேலும் அழுத்தத்தை உருவாக்கியிருக்கிறது இலங்கை அரசு.

இலங்கை அரசு 1979 இல் இயற்றிய மீன்பிடிப்பு மற்றும் கடல்வள ஆதாரங்கள் சட்டத்தின்படி, எல்லை தாண்டி மீன்பிடிக்க வருபவர்களுக்குச் சிறைத் தண்டனை விதிக்கவும் அபராதம் விதிக்கவும் விதிமுறைகள் உருவாக்கப்பட்டன. அச்சட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் திருத்தமானது, இலங்கை ரூபாய் மதிப்பில் ரூ.50 லட்சம் முதல் ரூ.17.5 கோடி வரை அபராதம் விதிப்பதற்கு வகைசெய்துள்ளது.

கடற்படையினருக்கு அதிகளவில் அதிகாரத்தை அளித்திருக்கும் இச்சட்டத் திருத்தம், அடிப்படைத் தேவைகளுக்காக உயிரைப் பணயம் வைத்து கடல் மீன்பிடிப்புக்குச் செல்லும் தமிழக கடற்கரையோர மீனவர்களைக் கடும் பாதிப்புக்கு உள்ளாக்கக் கூடியது. படகின் விலையைக் காட்டிலும் அதிக அபராதம் விதிப்பது மீனவர்கள் அவர்களது தொழிலைவிட்டே வெளியேறும் நிலைக்குத் தள்ளிவிடும்.

வங்கக் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள், தொடர்ந்து பல ஆண்டுகளாக இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்படுகிறார்கள். நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, சிறைத்தண்டனையையும் அபராதத்தையும் அனுபவித்து வருகிறார்கள். அவர்களது மீன்பிடிப் படகுகள் பறிமுதல்செய்யப்பட்டுச் சீர்குலைக்கப்படுகின்றன. துப்பாக்கிச் சூடு உள்ளிட்ட துயரச் சம்பவங்களும்கூட அவ்வப்போது நடக்கின்றன. பாக் ஜலசந்தியைக் கடல் எல்லையாகக் கொண்டிருக்கும் இந்தியாவும் இலங்கையும், அந்தக் கடல் பகுதியில் காலம்காலமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தமிழக மீனவர்கள் குறித்து, ஒரு நல்ல தீர்வை இதுவரையில் எட்டவில்லை.

தமிழக மீனவர்கள் சுருக்கு மடி, இரட்டை மடி வலைகளைப் பயன்படுத்தக் கூடாது என்று இலங்கைத் தரப்பில் கூறப்பட்டது. இதையடுத்து, அந்த வகையான வலைகளைப் பயன்படுத்துவதற்குத் தமிழக மீனவர்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஆனால், இழுவை வலைகளையும் கூடப் பயன்படுத்தக் கூடாது என்று இலங்கை அரசு பிடிவாதம் பிடித்து வருகிறது. குறைந்தபட்ச காலமாவது அவற்றைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் கூட இலங்கை அரசு மறுத்துவிட்டது.

இந்தச் சட்டத் திருத்தம் குறித்து பிரதமர், இலங்கை அரசிடம் பேச வேண்டும் என்று தமிழக முதல்வர் பழனிச்சாமி கடிதம் எழுதியிருக்கிறார். தமிழக அரசு, தனது வழக்கமான தயக்கத்தைக் களைந்து, தனது எதிர்ப்பைத் தெரிவித்திருப்பது வரவேற்புக்குரியது.

அதே சமயம், காலம் தாழ்த்தாமல் மத்திய அரசு உடனடியாக இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். இலங்கை அரசு ஏற்கெனவே இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர முயற்சித்துவந்த நிலையில், இந்திய அரசு அதுகுறித்துப் போதிய அக்கறை காட்டவில்லை. இனியும் அந்தக் கால தாமதம் தொடரக் கூடாது. தமிழக மீனவர்களைக் கைவிட்டுவிடக் கூடாது!

*தி.ஹிந்து ஆசிரியர் தலையங்கம்.*



# விநோதமான திருவிழாதான்!

ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 6ஆம் திகதி போர்த்துக்கல் நாட்டின் வேல் டி சல்குரியோ கிராமத்தில் திருவிழா நடைபெறுகிறது. அப்போது கேக் சாப்பிடுவார்கள், கீதங்கள் இசைப்பார்கள், பெற்றோர் தங்கள் குழந்தைகளை புகைபிடிக்க அனுமதிப்பார்கள்.

பல நூற்றண்டுகளாக இந்தப் பழக்கம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பொதுவாக போர்த்துக்கல் நாட்டில் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் சட்டபூர்வமாகப் புகை பிடிக்க முடியும். ஆனால் இந்தத் திருவிழா நடைபெறும் 2 நாள்கள் மட்டும் அனுமதி வழங்கப்படுகிறது.

இதில் 5 வயதுக் குழந்தைகள் முதல் புகை பிடிக்கிறார்கள். இதைப் போர்த்துக்கல் நாட்டின் பிற பகுதிகளைச் சேர்ந்தவர்களே எதிர்க்கிறார்கள். ஆனால் இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள், அது தங்களின் பாரம்பரியம் என்றும் இதில் பிறர் தலையிட முடியாது என்றும் கூறுகிறார்கள்.

இரண்டு நாள்கள் புகைபிடிப்பதால் குழந்தைகள் அனைவரும் சிகரெட்டுக்கு அடிமையாகிவிடுவது போல் சொல்கிறார்கள். அது தவறு. குழந்தைகள் நிஜமாகவே புகைப்பதில்லை. உள் இழுக்கும் புகையை உடனே வெளியிட்டுவிடுவார்கள். இதைத் திருவிழாவுக்கான ஒரு சடங்காகத்தான் பார்க்கிறார்கள். இந்த இரண்டு நாள்களுக்குப் பிறகு யாரும் சிகரெட் வேண்டும் என்று கேட்பதில்லை என்கிறார் குல்ஹெர் மினா மேட்டஸ்.

புகைபிடிப்பது நுரையீரலுக்கு கெடுதல் என்று எங்கள் எல்லோருக்குமே தெரியும். அதனால் நாங்கள் திருவிழாவைத் தவிர்த்து, சிகரெட் கேட்பதில்லை என்கிறார் 6 வயது டோமாஸ். எனக்கு 88 வயதாகிறது. நானும் 5 வயதில் இந்தத் திருவிழாவின்போது புகைபிடித்திருக்கிறேன். ஆனால் ஒருநாளும் அதை வழக்கமாக மாற்றிக் கொள்ள எண்ணியதில்லை. பிறகு என் குழந்தைகளும் இந்தப் பாரம்பரியத்தைப் பின்பற்றினார்கள்.

திருவிழாவில் புகைபிடிப்பதற்கு தடை வருமோ என்று இக்கிராம மக்கள் கவலைப்படுகிறார்கள்.



# கொழும்பு மேயராகிறார் ஐ.தே.கவின் ரோஸி!



கொழும்பு, பெப். 11

கொழும்பு மாநகரசபைக்கான உள்ளூராட்சித் தேர்தலில் வட்டார ரீதியான வாக்களிப்பில் ஐக்கிய தேசியக் கட்சியே முன்னிலை வகிக்கின்றது என முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

அதன்படி ஐக்கிய தேசியக் கட்சியின் மாநகர முதன்மை வேட்பாளரான ரோஸி சேனநாயக்கா மாநகர மேயராகும் சூழல் உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. கொழும்பு மாநகரத்தின் முதலாவது பெண் மேயராக அவர் பதவியேற்பார்.

வெள்ளவத்தைப் பகுதியில் மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணி சார்பில் போட்டியிட்ட சி.பாஸ்கரா வெற்றியீட்டியிருக்கின்றார் என நேற்றிரவு உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெவித்தன. (உ)

# வவுனியா வடக்கிலும் கூட்டமைப்பு முன்னணி

வவுனியா, பெப்.11

வவுனியா வடக்குப் பிரதேச சபை 8 வட்டாரங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றுள்ளது. இங்கு நான்கு சிங்கள வட்டாரங்களிலும் மஹிந்த ராஜபக்ஷவின் கட்சியான பொது ஜன பெரமுன வெற்றி பெற்றுள்ளதுடன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வவுனியா நகர சபையில் கூட்டமைப்புக்கு வாய்ப்பு

வவுனியா நகரசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறும் நிலையில் உள்ளது.

வவுனியா நகரசபையின் 12 வட்டாரங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 7 வட்டாரங்களில் வெற்றி பெற்றுள்ளது. 4 வட்டாரங்களை ஐ.தே.க. கைப்பற்றியுள்ளது. ஒரு வட்டாரத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சி கைப்பற்றியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)









# இதய அஞ்சலி



ஸ்ரீ துர்க்காதேவி தேவி தேவஸ்தான பிரதமகுருக்கள்

**சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக்குருக்கள்**

யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் நேற்று (10.02.2018) சனிக்கிழமை பிற்பகல் 10 மணியளவில் இறைபத மடைந்துவிட்டார். அன்னாருக்கு எமது இயத அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் 8ஆம் கட்டை தெல்லிப்பழையில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

**நிர்வாகசபை,**
**துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**






இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.02.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.